

இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 33 c°
குறைந்த வெப்பநிலை 27 c°
வெப்பமான காலநிலை




மாயமான மலேசிய விமானத்தின் தகவல்களை வழங்கப் பின்னடிப்பு

07



இலங்கை வீரர்களின் ஒப்பந்தம் இழுபறியில்

23



லண்டன் மாநகரையே அதிரவைத்த போராட்டம்

04

18 MAR 2014


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 26

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 112 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 04, செவ்வாய் 18.03.2014


## மனித உரிமைவாதிகளின் கைதுக்குக் கடும் எதிர்ப்பு

### சர்வதேச சமூகமும் சிவில் அமைப்புக்களும் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 18
மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஜெயகுமாரி ஆகியோரின் கைதுகளை சர்வதேச நாடுகளும் சிவில் அமைப்புக்களும் கடுமையாகக் கண்டித்துள்ளன.

இலங்கை அரசின் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் அதன்மீது அக்கறையைச் செலுத்தவேண்டிய அவசியத்தையும் கவனத்தையும் ஏற்படுத்தியுள்ளன என்று அவை தெரிவித்துள்ளன.

இந்தக் கைதுகள் இலங்கையில் ஜனநாயகத்தையும் மனித உரிமைப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு ஒரு போதும் உதவ மாட்டாது என்றும் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதுகாப்பாளர்கள் மீதான கைதுகள் போன்ற இலங்கையின் நடவடிக்கைகளே, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கவனம் இலங்கை மீது தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும் என்று எங்களை நம்ப வைக்கின்றது என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை, மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களான ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று மாலை விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தக் கைதுகள் தொடர்பில் அமெரிக்கா தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. கடந்த வாரத்தில் இலங்கையின் பல பிரசித்தமான மனித உரிமை பாதுகாப்பாளர்களையும் செயற்பாட்டாளர்களையும் கைது செய்து தடுத்து வைத்துள்ளமை குறித்து அமெரிக்கா தனது கரிசனையை வெளிப்படுத்துகின்றது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் சட்ட ஆலோசனைக்கான முழுமையான

21 ஆம் பக்கம் பார்க்க

## அமலன் கொலை; எட்டு பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 18
பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டத்தில் ஜெயரட்ணம் தனுசன் அமலன் (வயது -23) அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்தப்படவுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 4 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு மேலும் 4 பேராக இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் சிலர் தேடப்

21 ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலா விஸாவில் வியாபாரம்; 8 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
சுற்றுலா விஸாவில் யாழ்.நகருக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த 8 பேர் தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் புடைவைகள் யாருடையவை என்ற உரிமைக் கோரிக்கைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப் போரில் இரசாயன ஆயுதங்கள்

### காணொலி ஆதாரம் வெளியிட்டது இந்திய தொலைக்காட்சி

கொழும்பு, மார்ச் 18
இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை இராணுவத்தினரால் பொது மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் புதிய காணொலி வெளியிடப்பட்டுள்ளது. இந்தியாவின் 'நியூஸ் எக்ஸ்பிறஸ்' ஊடக நிறுவனமே நேற்றைய

21 ஆம் பக்கம் பார்க்க

### மறுக்கின்றது இராணுவம்

இரசாயன ஆயுதங்கள் பாவித்தமை தொடர்பான குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் முற்றாக மறுத்துள்ளது. "இலங்கை இராணுவத்துக்கும், அரசுக்கும் எதிரான உணர்வுகளைத் தூண்டிவிடும் நோக்கில் சில தரப்பினரால், இந்தப் புதிய காணொலி வெளியிடப்பட்டுள்ளது. இதனை நாம் நிராகரிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

## தேசிய பாதுகாப்புக்காக காணிகள் சுவீகரிப்போம்

### யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18
தேசிய பாதுகாப்புக் கருதி தேவைப்படும் தனியார் காணிகளை அரச நடைமுறையின் ஊடாகச் சுவீகரிப்புச் செய்வோம் என்று யாழ். வந்திருந்திருந்த ஆஸ்திரேலிய மனித உரிமை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## 4ஆம் மாடி விசாரணையில் மனித உரிமை ஆர்வலர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 18
கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்ஷி பெர்னான்டோ மற்றும் மதகுரு அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகிய இருவரும் நேற்றுக் காலை கொழும்பு 4 ஆம் மாடிக்கு மேலதிக விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## கைதான சிறுமி விபூசிகா மகாதேவா இல்லத்தில்

### கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவு



யாழ்ப்பாணம்,மார்ச் 18
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 13 வயதுச் சிறுமி விபூசிகாவை மகாதேவா சிறுவர் இல்லத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வகாப்தீன்.

21 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளக விசாரணை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 18
இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக உள்ளக விசாரணை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

"ஒரு பிரச்சினைக்குப் பல தீர்வுகள் கிடைக்கக்கூடும். மேற்குலக நாடுகள் முன்வைக்கும் தீர்வு

21 ஆம் பக்கம் பார்க்க

## கச்சதீவு வந்த இந்தியர்கள் பிரபா பற்றி அறிய ஆர்வம்

### இலங்கை யாத்திரிகர்களை கேள்விகளால் குடைந்தெடுத்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 18
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்காக வந்திருந்த இந்திய யாத்திரிகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிர

21 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸ் இணைவு வெகு தொலைவில் இல்லை

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18
தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணையும் காலம் வெகு தொலைவில் இல்லை. ஜனநாயக ரீதியான போராட்டங்களின் மூலமாகச் சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுகளை நேரக்கி நகரும் கட்டத்திற்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். கொழும்பில் கடந்த ஞாயிற்றுகிழமை இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

21 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசரின் கவனத்துக்கு போகிறது இலங்கைத் தமிழர்களின் நிலை

### தனித் தனியே எடுத்துரைப்பர் வடக்கு - கிழக்கு ஆயர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 18
தமிழர்களின் இனப்பிரச்சினை, அவர்களுக்கு எதிரான வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், பாதிப்புக்கள் என்பன குறித்துப் பரிசுத்த பாப்பரசருக்கு நேரில் எடுத்துரைக்கப்படவுள்ளது.

பாப்பரசரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ள வடக்கு - கிழக்கு மறை மாவட்டங்களின் ஆயர்கள் இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து நேரில் விளக்கமளிப்பர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் இலங்கையில் உள்ள கத்தோலிக்க மறை மாவட்டங்களின் ஆயர்களை முதல் முறையாக நேரில் சந்தித்துப் பேசவுள்ளார். இந்தச் சந்திப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 9 ஆம் திகதிவரை கத்தோலிக்கர்களின் தலைமைப்பீடமான இத்தாலி

21 ஆம் பக்கம் பார்க்க

# காணாமற்போனோர் உறவுகளை அச்சுறுத்தும் தொடர் கைதுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

காணாமற்போனோர் தொடர்பில் நடத்தப்பட்ட போராட்டங்களில் பங்கெடுத்த காணாமற்போனவர்களின் உறவுகள் தற்போது பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும். தொடர் கைதுகளால் அச்சமடைந்துள்ளனர். அடுத்து தமக்கும் எதுவும் நடக்குமோ என்ற அச்சநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

காணாமற்போனோரின் போராட்டங்களில் பலரது கவனத்தையும் ஈர்த்த ஜெயக்குமாரி மற்றும் அவரது 13 வயதான மகள் விபூசிகா ஆகிய இருவரும் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர் நேற்று முன்தினம் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும், காணாமற்போனோருக்காகக் குரல் கொடுக்கும் அருட்தந்தை ஆகியோரும் கைது செய்யப்பட்ட னர்.

இந்தத் தொடர் கைதுகளால், காணாமற்போனோரின் உறவுகள் அச்சமடைந்துள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரிலிருந்த காணாமற்போனோரின் உறவுகளின் தொடர் போராட்டங்களில் பங்கெடுத்த உறவுகள் அச்சத்தில் உறைந்துள்ளனர். தமக்கும் ஏதாவது நடந்துவிடுமோ என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

போராட்டங்களில் பங்கெடுக்கக் கூடாதென்று புலனாய்வுப் பிரிவினரால் பல தடவைகள் அச்சுறுத்தப்பட்டும், போராட்டங்களில் பங்கேற்றால் நீங்களும் காணாமற்போவீர்கள் என்று நேரடியாக மிரட்டியும் அதனையும் மீறி பங்கெடுத்திருந்தாகக் குறிப்பிட்ட காணாமற்போனோரின் உறவுகள் இதனால் தற்போது தமக்கு ஏதாவது நிகழ்ந்துவிடுமோ என்று அச்சத்துடன் இருப்பதாக 'உதயனிடம்' தெரிவித்தனர். (ற-5)



அமலனின் இறுதிக் கிரியையின் போது

# அமலனின் உடல் நேற்று நல்லடக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டத்தின் போது அடித்துக் கொலை செய்யப்பட்ட ஜெயரட்ணம் டனுஷன் அமலனின் இறுதிக் கிரியைகள் நேற்று பொலிஸ் பாதுகாப்புடன் நடைபெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டம் கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது. அதில் ரசிகர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனான அமலன் கொல்லப்பட்டார்.

மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டதாலேயே மரணம் சம்பவித்தாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் உயிரிழந்த அமலனின் இறுதிக்கிரியைகள் நேற்று கதிற்றல் லேனிலுள்ள அவரது வீட்டில் இடம்பெற்றது. அதன் பின்னர் 2.30 மணியளவில் அவரது உடல் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பாடசாலையிலுள்ள சப்பல் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அப்போது அமலனின் ஒரு வயது மகன் "அப்பா எங்கே ?" என்று அங்கிருந்தவர்களிடம் கேட்டது அங்கிருந்தோர் நெஞ்சை நெகிழ வைத்தது.

பெருமளவான பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், உறவினர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அஞ்சலி செலுத்தினர். இறுதியில் பொலிஸ் பாதுகாப்புடன் உடல் எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ற-5)

# மசாஜ் நிலையத்தில் கைதான தென்பகுதியினருக்கு பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். நல்லூர் அம்மன் வீதியில் மசாஜ் நிலையம் என்னும் பெயரில் விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென்பகுதியைச் சேர்ந்த 2 பெண்கள் மற்றும் ஆயுள்வேத வைத்தியர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்த நிலையில், அவர்களுக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் விடுவிக் கப்பட்டனர். வழக்கு எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குறித்த மூவரும் கைது செய்யப்பட்ட அதேதினத்தன்று அரியாலையிலும் ஒரு விடுதியிலிருந்து 5 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# மாடு வதை செய்தமை; இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட கன்றுத் தாச்சி மாட்டைச் சட்ட விரோதமாகவும், கொடுமைப்படுத்தியும் ஓட்டோவில் ஏற்றிச் சென்ற இருவருக்கு 6 மாதச் சிறையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்துள்ளது நீதிமன்று. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாரந்தனை கரம்பொன்னைச் சேர்ந்த ஏக்கநாயக்க அருள்ராஜ் மற்றும் ஏக்கநாயக்க மனோகரன் ஆகியோருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஓட்டோவின் சாரதியான ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர் தான் சுற்றவாளி என்று நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து அவர் தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. நாரந்தனையில் மேய்ச்சலில் நின்ற குறித்த கட்டாக்காலி மாட்டைச் சட்ட விரோதமாகப் பிடித்துக் கொண்டு சென்றபோதே பொலிஸார் அவர்களை கைது செய்தனர். அனுமதிப்பத்திரமின்றி மாடு கொண்டு சென்ற குற்றத்துக்காக ஆயிரத்து 500 ரூபாவும் மாட்டை கொடுமைப்படுத்திக் கொண்டுசென்றதனால் விலங்குவதைச் சட்டத்தின்கீழ் 6 மாதச் சிறைத் தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தது நீதிமன்று. (ற-4)




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

# அரசுக்கு ஆதரவு தெரிவித்து மன்னாரில் நேற்று போராட்டம்

## பெரும்பான்மையின மக்களின் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 18

இலங்கைக்குஎதிரானஜெனிவா பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் நேற்றுப் பெரும்பான்மை யின மக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

மன்னார் மக்கள் ஒன்றியம் என்ற பெயரில் பெரும்பான்மையின மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம், மன்னார் பிரதான பாலத்திலிருந்து நேற்றுக் காலை 10 மணியள வில் ஆரம்பமானது. மன்னார் விளையாட்டு மைதான வீதியிலிருந்து புறப்பட்ட ஒரு தொகுதியினரும் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

அனைவரும் ஜெனீவா தீர்மான வரைபுக்கு எதிராக கோஷம் எழுப்பியதுடன், அரசுக்கு ஆதரவான பதாகைகளையும் தாங்கியவண்ணம் பேரணியாக மன்னார் பஸார் பகுதியை வந்தடைந்தனர். அங்கு சிறிது நேரம் கோஷங்கள் எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் பேரணியாகச் சென்று மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாகவும் கோஷம் எழுப்பினர்.

இறுதியில் மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் மன்னார் சௌத்பார் கடலில் தொழில் செய்கின்ற சுமார் 300 சிங்களக் குடும்பங்கள் கலந்து கொண்டிருந்தன. இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளதாக ஏமாற்றியே மக்களை சீருடையினர் அழைத்து வந்தனர் என்று கூறப்பட்டதுடன், நேரடியாகவே சீருடையினர் பங்கேற்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற-5-56)

# காட்டித்தருவோருக்கு ஐந்து லட்சம் பரிசு

## கிளி., முல்லையில் அநாமதேய சுவரொட்டிகள்

கிளிநொச்சி,மார்ச் 18

கிளிநொச்சி,முல்லைத்தீவு பகுதியில் இரண்டு இளைஞர்களை அடையாளம் காட்டுவோருக்கு 5 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அநாமதேயத் துண்டுபிரசுங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

தேவைப்படுவோர் என தலைப்பிட்டப்பட்டு இரண்டு இளைஞர்களது பெயர்கள் மற்றும் புகைப்படங்களுடன் குறித்த துண்டுபிரசுரம் நகர்ப் பகுதிகளில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளது.




தேடப்படும் நபர்கள் குறித்து தகவல் தருவோருக்கு 5 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அந்தச் சுவரொட்டி யாரால் ஒட்டப்பட்டது என உரிமை கோரப்படவில்லை.

குறித்த நபர்கள் அதிக குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் துண்டுபிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-426-101-18)

# பஸ் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். மடத்தடியில் வைத்து அக்கரைப்பற்று டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மீது இனந்தெரியாதோரால் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று டிப்போவினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த குறித்த பஸ் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கல்வீச்சுக் காரணமாக குறித்த பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடியில் சிறிது வெடிப்பு ஏற்பட்டது. எனினும் பயணிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று யாழ்.டிப்போவினர் தெரிவித்தனர். (ற-4-18)

# பயங்கரவாதக் குற்றம் சுமத்தப்பட்டவர் நிரபராதியென இனங்கண்டு விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 18

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பில் இருந்த தென்பகுதி நபர் ஒருவர் நிரபராதி என இனங் காணப்பட்டதை அடுத்த யாழ்.மேல்நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

20[illegible] ஆம் ஆண்டு கிளிநொச்சியில் போர் ஆயுதப் பயிற்சி பெற்றமை மற்றும் ஏனைய பலர் போர் ஆயுதப் பயிற்சி பெற்றமை தொடர்பில் அறிந்திருந்தும் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த நபர் மீது சுமத்தப்பட்டன.

அவருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதிமன்றில் 2007 ஆம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு 2012 ஆம் ஆண்டு யாழ். மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது. விசாரணையின் பின்னர் எதிரியினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது. அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லாததனால் அவர் விடுதலை செய்யப்பட்டார். தென்பகுதி ஹபராதுவ பகுதியைச் சேர்ந்த கொடகேசஹன் சிறீ கீர்த்தி என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார். (ற-4)

# இயற்றாலை ஊரெல்லை வீதியைப் புனரமைக்குக

### வடமாகாண முதலமைச்சருக்கு மனு

வரணி,மார்ச் 18

வரணி, கரம்பைக்குறிச்சி, இயற்றாலை ஊரெல்லை வீதியைப் புனரமைத்துத் தருமாறு கலைவாணி சனசமூக நிலையத்தின் ஊடாக பொது மக்களின் கையொப்பங்க ளுடன் கூடிய மனுஒன்று வட மாகாண முதலமைச் சருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சனசமூக நிலையத்தின் தலைவர் தெரிவித்தார்.

கரம்பைக்குறிச்சி ஊரெல்லை வீதி, அந்தணத்திடல் கப்பூது ஊடாக பருத்தித்துறை சாவகச்சேரி பிரதான வீதியை இணைக்கும் வீதியாகும். இந்த வீதி சுமார் 30 வருடங் களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் தற்போது குன்றும் குழியுமாக, பொது மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் சவணாவெளி என்றழைக்கப்படும் 1000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் காணி களுக்குச் செல்லும் விவசாய வீதியாகவும் இது விளங்குகிறது.

இந்த வீதியில் மாரி காலங்களில் சுமார் 2 அடி உயரத்துக்கு வெள்ள நீர் தேங்கி நிற்கும் நிலையில் பாடசாலை மாணவர்கள் பலத்த சிரமத்துக்கு மத்தியில் பயணிக்கும் அவலநிலை காணப்படுகிறது.

குறித்த கிராமத்தில் வசிக்கும் சுமார் 400 குடும்பங்களின் போக்குவரத்துத் தேவையை குறித்த வீதியே நிவர்த்தி செய்கின்றது. எனவே குறிப்பிட்ட வீதியைப் புனரமைப்புச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் யாழ். மாவட்ட அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஓ-122)

# சுகாதார பரிசோதகர்கள் யாருக்கு கீழ்? ஏட்டிக்குப் போட்டியாகப் போராட்டங்கள்

யாழ்ப்பாணம்இ மார்ச் 18

பிரதேச சபைகளில் பணிபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்துக்குள் உள்வாங்கு மாறுகோரி மருத்துவர்கள் போராடி வரும் நிலையில், அவர்களின் கோரிக்கையை எதிர்த்து யாழ்ப்பாணம் பிரதேச சபைகளில் பணிபுரியும் பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்றுத் தொடக்கம் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பிரதேச சபைகளில் பணிபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்துக்குள் உள்வாங்குமாறுகோரி 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளும் சுகவீனவிடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். தொடர்ந்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுக்குட்பட்ட வைத்தியர்களும் அதேகோரிக்கைகளுக்காக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது வடக்கு ஆளுநர் தலையீடு செய்து கலந்துரையாடி வைத்தியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மேற்படி இரு தரப்புக்களினதும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது சுகாதார பரிசோதகர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவரும் கொழும்பு தாய்ச் சங்கத்தின் பிரதிச் செயலாளருமான க.சதீஸ் தெரிவித்துள்ளதாவது:

வடமாகாண சுகாதார அமைச்சில் கடந்த மாதம் 19 ஆம் திகதி ஒரு கூட்டம் இடம்பெற்றது. அதில் வடமாகாண சுகாதார அமைச்சர், செயலாளர், பணிப்பாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பிரதேச சபைகளில் பொதுசுகாதார பரிசோதகர்களை உள்வாங்குவதற்கு விண்ணப்பிக்குமாறும் அதுவரை 6 மாதங்களுக்கு தொடர்ந்து பொதுசுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளில் பணியாற்ற முடியும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறு கால அவகாசமும் வழங்கப்பட்டு அது தொடர்பில் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கையில் சபைகளில் உள்ள பொது சுகாதார பரிசோதகர்களை உடனடியாக தமக்குக் கீழ் கொண்டு வர வேண்டும் என்று சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வைத்தியர்கள் கோரியுள்ளமை கடும் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் வலி.வடக்கு பிரதேச சபைபொதுசுகாதார பரிசோதகருக்கும் இடையிலான பிரச்சினை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு இணக்கம் காணப்பட்ட நிலையில் அது பின்னர் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உண்மையில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பொது சுகாதார பரிசோதகர் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். குறித்த பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட உணவகங்களில் அரச இலட்சினை பொறிக்கப்பட்ட எச் - 800 அட்டைகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவற்றைக் கடைகளில் இருந்த எடுத்துச் செல்ல முடியாது. எடுத்தச் செல்வதாயின் பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது குறித்த பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்திருத்தல் வேண்டும். ஏனெனில் உணவுச் சட்டத்தில் பிரதேச சபைத் தவிசாளருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் ஒரே அதிகாரமே உள்ளது. அங்கு செல்வது பற்றித் தனக்கு அறிவித்திருக்கலாமே என்று குறித்த பொது சுகாதார பரிசோதகர் கேட்டுள்ளார். அதனால் சுகாதார வைத்திய அதிகாரி உரிய மரியாதையின்றி பதில் அளித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்தே இரு தரப்பினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு பொலிஸ் நிலையம் வரை சென்றது.

பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்றால் அது தொடர்பிலான வழக்கை நடத்தாது ஏன் இணங்கிப் போவதாகக் கூறிக் கையெழுத்திட்டுச் சென்றார்? இருவருக்குமிடையேயான பிரச்சினையை விசாரித்து பிழை உள்ளவருக்கு எதிராக நிர்வாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்க முடியும். தவிர இந்தப் பிரச்சினைக்கும் ஏனைய பிரதேச சபைகளில் உள்ள பொது சுகாதார பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்தினுள் உள்வாங்க வேண்டும் என்று கோருவதற்கும் என்ன சம்பந்தம்? எதற்காக அவர்கள் அவ்வாறு கோருகின்றனர்?

இந்தப் பிரச்சினை தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சர் மட்டுமின்றி உள்ளூராட்சி அமைச்சரான வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்கூட எதற்காக மௌனமாக இருக்கிறார்?

தமது கோரிக்கைகள் தொடர்பில் 24 ஆம் திகதிக்கு இடையில் தீர்வு தரப்படவேண்டும். என்று அவர்கள் காலஎல்லை விதித்துள்ளனர். தவறின் அன்று தொடக்கம் வடமாகாணம் முழுவதும் எமது போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சதீஸ் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# கூட்டுறவுத் துறையின் முக்கியத்துவத்தை இடர்காலத்தில்தான் உணர்ந்தனர் மக்கள்

### வடமாகாண ஆளுநரின் செயலாளர் கருத்து

கொழும்புத்துறை,மார்ச் 18

கூட்டுறவுத்துறை இன்று தனது பலத்தை அறியாது உறங்கிக் கொண்டிருக்கும் அரக்கன் போல் கட்டுண்டிருக்கிறது. வரையறைசெய்ய முடியாதஇந்த கூட்டுறத்துறையின் சேவையும், முக்கியத்துவமும் இடர் ஏற்பட்ட காலங்களில் மக்களால் பெரிதும் உணரப்பட்டன. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். இளங்கோவன்.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் கடந்த ஆண்டுக்கான செயற்பாட்டு மீளாய்வுக்கூட்டம் யாழ். மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தமது உரையில் மேலும் கூறுகையில்:-

கூட்டுறவுத்துறை இரு பிரிவுகளாக, அதாவது சமூக, பொருளாதார ரீதியாகவும் வங்கி அமைப்பு ஊடாகவும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் தனியார் துறையுடன் ஒரு சமாந்தரமான வளர்ச்சியை இது அடைந்துள்ளது. அண்மைக் காலங்களில் நவீன விற்பனை நிலையங்களின் வருகை, கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சவாலாக உள்ளது. இதனை எதிர் கொள்ள கூட்டுறவுத்துறை தனது பலத்தையும் முழுமையான சக்தியையும் பிரயோகிக்க வேண்டும்.

**அண்மைக் காலங்களில் நவீன விற்பனை நிலையங்களின் வருகை, கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சவாலாக உள்ளது.**

கிராம, நகர பொருளாதார மையமாக கூட்டுறவுத்துறை திகழ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (வ-135)

# மானிப்பாய் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

நவாலி, மார்ச் 18

மானிப்பாய் பிரதேச அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தற்போது நிலவும் அதிக வெப்பம் வறட்சி காரணமாக குழந்தைகள் முதல் பெரியோர் வரை பலர் காய்ச்சல், சளி, இருமல் போன்ற நோய்களால் பாதிக் கப்பட்டுள்ளனர். எனவே சிகிச்சை பெறுவதற் காக பல மைல் தூரத்திலிருந்து கால் நடையாகவும் வாகனங்களிலும் அதிகாலையில் வந்து சிகிச்சை பெறுவதற்காக மருத்துவருக்காகக் காத்திருக்கின்றனர்.

தினமும் 200 - 300 பேர் வரையான நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இதே வேளை அங்கு ஒரே யொரு மருந்தாளர் மட்டும் பணி புரிவதால் மருத்துவரிடம் சிகிச்சை பெற்ற பலர் தமக்கான மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட நேரம் மருத்துவமனையின் மருந்தகம் முன்பு காவல் காத்து நிற்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

எனவே மேலதிகமாக ஒரு மருந் தாளரை குறித்த மருத்துவ மனைக்கு நியமிப்பதற்காக மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொள்வதற்குத் தீர்மானித்துள்ளனர். (வ-100)

## புனரமைப்புப் பணிகள்

வவுனியாவில் இடர்களின் போது ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கு வவுனியா மாவட்ட இடர் முகாமைத் துவப் பிரிவினரால் பல்வேறு புனரமைப்புப் பணிகள் முன் னெடுக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதி உதவியுடன் மாமடு வாய்க்கால் குளம் புனரமைப்புக்கு 27 லட்சம் ரூபாவும், தாலிக்குளம், கல்வெட்டு வீதி புனரமைப்புக்கு 5 லட்சம் ரூபாவும், வாழ வைத்த குளத்தைத் திருத்த 6 லட்சம் ரூபாவும், சுந்தரபுரம் கல்வெட்டு வீதி புனரமைப்புக்கு 10 லட்சம் ரூபாவும், சாஸ்திரி கூழாம் குளம், கல்வெட்டு வீதி புனர மைப்புக்கு 8 லட்சம் ரூபாவும், பேராறு புனரமைப்புக்கு 10 லட்சம் ரூபாவும், செட்டிகுளம் திருத்தப் பணிக்கு 35 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களை விட மேலும் பல குளங்கள் திருத்தம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (வ-402)

## அச்சுவேலி மருத்துவமனைக்கு சுகாதார அமைச்சர் நாளை பயணம்

அச்சுவேலி, மார்ச் 18

அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்கு வடக்குமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பயணம் செய்யவுள்ளார்.

மருத்துவமனைக்கு வருகை தருமாறு வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்று அமைச்சர் மற்றும் அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவினர் நாளை அங்கு செல்லவுள்ளனர்.

குறித்த மருத்துவமனையின் குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக 600 இற்கு மேற்பட்ட பொது மக்களின் கையொப்பத் தோடு கூடிய மனுவொன்று நலன்புரி சங்கத்தால் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது. (வ-11)

# அச்சுவேலி மருத்துவமனையின் ஆண்கள் விடுதி புனரமைக்கப்படுமா?

அச்சுவேலி, மார்ச் 18

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் ஆண்கள் விடுதி பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் நோயாளர்கள் விடுதியில் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கு தயங்குவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருத்துவமனையின் நிறுவுநர் காடினர் சேர் ஏபிராம் சிற்றம்பலத்தால் நிர்மாணிக்கப்பட்ட மிகவும் பழைய கட்டடத்திலேயே மருத்துவமனை இன்றும் செயற்படுகின்றது. 60 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கட்டடத்தின் சகல கட்டுமானங்களும் நோயாளர் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கு பொருத்தமான வசதிகளற்ற நிலையில் இருப்பதால் நோயாளர்கள் விடுதியில் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கு தயங்குகின்றனர்.

மருத்துவமனையின் ஆண்கள் விடுதியை திருத்தி அமைக்குமாறு அல்லது புதிய விடுதி ஒன்றை நிர்மாணிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் மருத்துவமனை அபிவிருத்திச் சபை மற்றும் நோயாளர் நலன்புரிசங்கம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்துவந்த போதிலும் இதுவரை காரியம் கைகூடவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் உலக வங்கியின் உயர் அதிகாரிகள் குழு குறித்த மருத்துவமனைக்கு நேரில் பயணம் செய்து அங்குள்ள தேவைகள், குறைபாடுகளை அவ்தானித்து ஏற்புடைய கட்டுமானங்களை மேற்கொள்ள உதவுவதாகத் தெரிவித்த போதிலும் இதுவரை அது தொடர்பான மேலதிக தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் விடுதிகளில் மட்டும் கடந்தவருடம் 9 ஆயிரம் பேர் வரையில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆண்கள் விடுதியில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள், விடுதியின் வசதிக் குறைவான நிலையை அவதானித்து தாம் மேலதிகமான பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் தொகை ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் மருத்துவமனையின் வள வசதிகள் மற்றும் தேவைகள் விடுதி வசதிகள் என்பவற்றை பொருத்தமான முறையில் விஸ்தரிக்காமல் இருப்பதால் நோயாளர்களும் மருத்துவ மனைப் பணியாளர்களும் தாம் எதிர்பாராத நெருக்கடிக ளுக்கு உள்ளாகி வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (வ-11)

**மருத்துவமனை அபிவிருத்திச் சபை மற்றும் நோயாளர் நலன்புரிசங்கம் நீண்டகால மாக கோரிக்கை விடுத்துவந்த போதிலும் இதுவரை காரியம் கை கூடவில்லை**

## புகையிலை திருடியோர் பொலிஸாரிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மருதனார்மடம் பகுதியில் விளைவிக்கப்பட்டு சுவர்களிலும் நிலத்திலும் உலர விடப்பட்ட புகையிலைகளைத் திருடிய நபர்களை சுன்னாகம் பொலிஸார் கைது செய்ததுடன் பெருமளவு புகையிலைகளையும் கைப்பற்றிய தாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மனித உரிமை செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள்

## *ஜனாதிபதியிடம் கோருகின்றது தமிழ் தேசிய கூட்டமைப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 18
பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மனித உரிமைச்செயற்பாட்டாளர்களான ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீண் ஆகியோரை உடன் விடுவிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தக் கைது நடவடிக்கை தொடர்பாகக் கடும் கண்டனத்தையும் வெளியிட் டுள்ளது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ பேச்சாளரும், யாழ். மாவட்டபாராளுமன்றஉறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"நேற்றுமுன்தினம் கொழும்பைச் சேர்ந்த மனிதவுரிமைச் செயற்பாட்டாளரான ருக்ஷி பெர்னான்டோ மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் அருட்தந்தை பிரவீண் ஆகியோர் பயங்கரவாத தடைப் பிரிவு என்று சொல்லப்படுகின்ற பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிகின்றோம்.

கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சி தர்மபுரத்தில் காணாமற் போன தனது மகனைத் தேடியலையும் திருமதி பாலேந்திர ஜெயகுமாரி என்பவரும் அவரது மகள் விபூஷிகா என்பவரும் இதே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதுடன், திருமதி ஜெயகுமாரியை பூஸா முகாமுக்கும் அவரது மகளை கிளிநொச்சியிலுள்ள சிறுவர் காப்பகத்திற்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த இருவரினதும் கைதுகள் குறித்த உண்மை நிலைகளை ஆராயவே மேற்படி இரு மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் கிளிநொச்சி சென்றதாகப் பேசப்படுகின்றது. இவ்வாறான சூழலில்தான் இந்த இருவரும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தில் பல்வேறுபட்ட இடங்களில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் பல்வேறுபட்டவர்கள் யாழ்ப்பாணத்திலும், முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அது மட்டுமன்றி இனம் தெரியாத குழுக்கள் என்ற பெயரில் பலபேர் கடத்தப்பட்டு காணாமலும் போகின்றனர். கார்த்திகேசு நிருபன் என்ற 30 வயது விஞ்ஞான ஆசிரியர் வவுனியாவில் வைத்துக் காணாமல் போயிருந்தார். ஆனால் கடந்த வாரம் மாங்குளத்தில் இவருடைய புக்கூடு. அதனருகில் அவரது அடையாள அட்டையுடன் துவிச்சக்கர வண்டியின் சாவியும் கண்டெடுக்கப்பட்டது. இந்தக் கடத்தல்கள் என்பதும், காணாமல் போகச் செய்தல், சட்டத்திற்குப் புறம்பான கைதுகள் என்பதும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. இதன் தொடர் நடவடிக்கையாக இப்பொழுது மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இங்கு ஒருவிடயம் தெளிவாகப் புலப்படுகின்றது. காணாமல் போனோர்களுக்காக அவர்களது உறவுகள் போராடக்கூடாது. போராடினால் கடத்தப்படலாம் அல்லது கைது செய்யப்படலாம். அதே போன்று பாதிக்கப்பட்டவர்களுக்காக மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் செயற்படக்கூடாது. அவர்களும் கைது செய்யப்படலாம் அல்லது காணாமல் போகச் செய்யப்படலாம் என்பதைத் தான் நேற்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

ருக்ஷி பெர்னான்டோ அவர்களும் அருட்தந்தை பிரவீண் அவர்களும் பல காலமாக மனிதவுரிமைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள். இவர்களைக் கைது செய்வதற்கோ அல்லது தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கோ எதுவித முகாந்தரங்களும் இல்லை. ஆகவே இவர்களை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும். காட்டாட்சி செய்யக்கூடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டங்களை முடிவிற்குக் கொண்டுவருதற்கு இனம், மொழி, மதம் கடந்து மனிதவுரிமைகள் அடிப்படைச்சட்டங்கள் ஜனநாயக விழுமியங்கள் என்பவற்றில் நம்பிக்கை கொண்டோர் இவற்றிற்காகப் போராட முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

கைதுசெய்யப்பட்டோ அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களையும் உடனடியாக விடுவிக்கவேண்டுமென்று நாங்கள் ஜனாதிபதியைக் கோருகின்றோம்."- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# திருத்தப்பட்ட பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கும்

## *கொழும்பு ஊடகம் தகவல்*

கொழும்பு, மார்ச் 18
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான கடுமையாக்கப்பட்டுள்ள தீர்மான வரைவுக்கு இந்தியா ஆதரவு வழங்குவது உறுதியாகிவிட்டது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்தாமை தொடர்பான குற்றச்சாட்டும், அதன் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட அரசியல் அதிகாரத்தை வடக்கு மாகாண சபையும், அதன் முதலமைச்சரும் பயன்படுத்துவதற்கு வழங்கும்படியான கோரிக்கையும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் மிக முக்கியமான கோரிக்கைகளாக இருந்து வந்தன.

இந்த விடயங்கள் அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மான வரைவிலும் சேர்க்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது தீர்மான வரைவிலும் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும் என்பது நிச்சயமாக உறுதியாகி விட்டது.

மியான்மாரில், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்த பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதன் பின்னரும் கூட இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படதாகத் தெரியவில்லை என்று குறித்த ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற-5)




31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் திருமதி.
செல்லப்பிள்ளை இளையதம்பி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஈரைந்து மாதங்களாய்
எமைச் சுமந்து உயிர்கொடுத்து
வாழ்க்கையின் வசந்தத்தை
அனுபவிக்க வரமளித்த எங்கள்
அன்னையே பூமியிலே
சொர்க்கம் என்பது உங்கள் காலடிதான்

மலர்வு 20.02.1936 உதிர்வு 16.02.2014


இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அம்மாவின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 482, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(45550)(10)



மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் சுந்தரலிங்கம்



இல.42, விபுலாணந்தர் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று (17.03.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்- சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும், கனகாம்பிகையின் (குஞ்சு) அன்புக்கணவரும் சிவதர்சினி, கேசரன், சிவச் சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 42, விபுலானந்தர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
(30351) (10)
தகவல் : மனைவி.



மரண அறிவித்தல்

கந்தவனம் சோமசுந்தரம்
(ஓய்வு பெற்ற அதிபர்)



மாவை கிளானையைப் பிறப்பிடமாகவும், மாவை கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது சீனிவாசகம் வீதி கொட்டடியில் வசித்து வந்தவருமான கந்தவனம் சோமசுந்தரம் நேற்று (17.03.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - இளையபிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (தம்பிரான்), கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் வசந்தினி, சாந்தினி, ஈழநேசன் (உதவி மாவட்ட ஆணையாளர் சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்ப்பாணம்), இந்திரதாஸ் (சுவிற்சலாந்து) காலஞ்சென்ற சுகந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் புனிதகுமாரி (சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி), விஜயசுசீலா (உஷா - சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புமாமனும் சேயோன் (க.பொ.தர உயர்தரம் யாழ். இந்துக்கல்லூரி), வித்தகி ( தரம் 11 சாவகச்சேரி இந்துக்கல்லூரி), அபி, சுபி (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரதுஇல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாந்தி ஸ்ரோர்ஸ்
இல.33 சீனிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2228711, 071 4546869

தகவல்
சோ. ஈழநேசன் (மகன்)


## 10 ஆவது நாளாகவும் தொடர்கிறது ஜெனிவாவுக்கான நடைப் பயணம்



நடைபயணத்தின் போது

லண்டன், மார்ச் 18
சிங்கள அரசின் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரும் விடுதலைப் பயணத்தில் ஜெனீவாவை நோக்கி லண்டனில் இருந்து புறப்பட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான நடைப் பயணம் 10ஆவது நாளாக பிரான்ஸ் மண்ணில் காலடி பதித்துச் செல்கின்றது.

பிரான்ஸ் தலைநகர் பரிசின் புறநகர் பகுதியான லாகூர்னெவ் பகுதியில் அமைந்துள்ள பிரிகேடியர் சுப.தமிழ்செல்வனின் திருவுருவச்சிலைக்கும், செவ்றோன் பகுதியில் அமைந்துள்ள முள்ளி வாய்க்கால் நினைவுகல்லுக்கும் நடைபயணிகள் தமது மரியாதை வணக்கத்தினை செலுத்தியி ருந்தனர்.

தற்போது இந்த நடைப்பயணத்தின் வழியெங்கும் ஈழத்தமிழர்களின் நீதிக்கான நியாயப்பாடுகளை பிரெஞ்சு மொழியில் பரப்புரை பிரசுரங்களை விநியோகித்துச் செல்கின்றனர். (ற)


ஓம் நமோ நாராயணாய நம
சாமியே சரணம் ஐயப்பா

உப நயன பிரம்மோபதேச அழைப்பு
(பூணூல் சடங்கு)



உப நயனம் -
சிவஸ்ரீ ஸ்ரீமதி
தியாகராஜக்குருக்கள் தம்பதியரின் பேரன்
சிவஸ்ரீ ஸ்ரீமதி.தி. கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
தம்பதியினராகிய எமது
ஏகபுத்திரன் சிரஞ்சீவி
பிருந்தாவனசர்மா அவர்கட்கு

நிகழ்வு - 19.03.2014 புதன்கிழமை
சுபமுகூர்த்தம் - மு.ப. 9.42 - 11.34
இடம் - சாவகச்சேரி நுணாவில் மேற்கு

ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலய மண்டபம் இந் நிகழ்வில் குடும்பசமேதராய் அனைவரும் வருகை தந்து குமாரனை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்.

ஸ்ரீமதி சாரதாம்பாள்
சிவஸ்ரீ ஸ்ரீமதி - கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் தம்பதியினர்
கல்வயல், சாவகச்சேரி



கிராம அபிவிருத்திச்சங்கக் கூட்டம்

எதிர்வரும் 21.03.2014 அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மயிலிட்டி வடக்கு J/246 இற்கான கிராம அபிவிருத்திச்சங்கக்கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்பதனால் J/246 மயிலிட்டி வடக்கு மக்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்
வ. தங்கவேல்



மரண அறிவித்தல்

ரேணுகாதேவி அருட்பிரகாசபிள்ளை



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ரேணுகாதேவி அருட்பிரகாசபிள்ளை நேற்று திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுமாரசூரியர் - தங்கச்சியம்மா தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ் சென்றவர்களான தியாகராசா - பூமணி தம்பதியரின் மருமகளும் அருட்பிரகாச பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் கணேஷ் (ஆசிரியர்), பரங்குன்றன் (C.E.M.S. நீர்ப்பாசனத் திணைக்களம்), ஜெயக்கிருஷ்ணா (P.H.I. முருங்கன்) ஆகியோரின் பாசமிகு தாயும் கீதா, கார்த்திகா ஆகியோரின் அன்புமாமியும் கஜாகரன், கஜதீபன் ஆகியோரின் பேர்த்தியும் சிவகுலசூரியரின் (டென்மார்க்) சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
தகவல்
குடும்பத்தினர்.

# பாணாவெட்டி மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வழங்கக் கோரிக்கை

## வடக்கு சுகாதார அமைச்சருக்கு வலி.மேற்கு சுகாதார மேம்பாட்டுக் கழகம் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

தொல்புரம் - பாணாவெட்டி மத்திய மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வலி.மேற்கு கல்வி, சுகாதார மேம்பாட்டுக் கழகம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து வடமாகாண சுகாதார அமைச்சர் எஸ்.சத்தியலிங்கத்துக்கு குறித்த கழகம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொல்புரம், பாணாவெட்டி மத்திய மருத்துவமனை, சுழிபுரம், தொல்புரம், கல்விளான், பாண்டவெட்டை, வறுத்தோலை, பொன்னாலை, மூளாய், பண்ணாகம் போன்ற பல பிரதேசங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கான மருத்துவமனையாக இருந்து வருகிறது. இவற்றில் பொன்னாலை, பாண்டவெட்டை போன்றவை மீள்குடியேற்றக் கிராமங்களாகும். இராணுவ முகாம்கள் இருந்த குறித்த பிரதேசங்களில் வெடிபொருள்கள் இல்லை என்று கூறமுடியாது. மேலும் அங்கு இதுவரை பற்றைகள் உரியவாறு துப்புரவாக்கப்படவில்லை. இதனால் பாம்புகளின் தொல்லைகளும் அதிகமாக உள்ளன. இதனால் ஏற்படும் விபத்தால் பொதுமக்களுக்கு அவசர நிலை ஏற்படும் போது அவர்களை யாழ். போதனா வைத்தியசாலைக் கொண்டு செல்வதற்கான அம்புலன்ஸ் வசதி இங்கு இல்லை. இது மக்களையும் நோயாளர்களையும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக்கின்றது.

பாணாவெட்டி மத்திய மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வருபவர்களில் ஏராளமானவர்கள் குறித்த கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாவர். பொருளாதார வசதியற்ற நிலையிலுள்ள இந்தப் பிரதேசத்திலுள்ளமக்கள்திடீர்விபத்துக்களில் சிக்குவோர், பிரசவத்துக்காக துடித்துக்கொண்டிருக்கின்ற தாய்மார் போன்றோரை தூரத்திலுள்ள சங்கானை பிரதேச மருத்துவமனை அல்லது யாழ். போதனா மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்கு அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தற்போது போக்குவரத்துச் செலவுகள் அதிகமாக உள்ளமை குறித்த மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வழங்கப்படுமானால் நோயாளரை உடனடியாகவே வேறு மருத்துவமனைகளுக்கு கொண்டு சென்று மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது இலகுவானதாக அமையும்.

எனவே, தற்போது மத்திய அரசு ஊடாக வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படவுள்ள அம்புலன்ஸ்களில் ஒன்றை முன்னுரிமை அடிப்படையில் தொல்புரம் பாணாவெட்டி மத்திய மருத்துவமனைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (வ)

# கைதடி தோட்டங்களில் பூசணிக்காய்கள் திருட்டு

தென்மராட்சி, மார்ச் 18

கைதடிப் பகுதித் தோட்டங்களில் காணப்படும் பூசணிக்காய்கள் இரவோடிரவாக திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

பகலில் வாகனங்களில் வருவோர் தோட்டங்களை நோட்டம் விடுகின்றனர் என்றும் இரவு வேளைகளில் வரும் அவர்கள் பூசணிக்காய்களைத் திருடி வாகனங்களில் ஏற்றிச் சென்று விடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கைதடிப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்கு விடப்படும் ஆடுகள் காணாமற் போகும் சம்பவங்களும் அடிக்கடி இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)

# மாவட்ட, தேசிய கூட்டுறவு சபைகளுக்கு புதிய பணிப்பாளர் சபை

கொழும்புத்துறை, மார்ச் 18

தேசிய மற்றும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை ஆகியவற்றுக்கு புதிய பணிப்பாளர் சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளராக செ.இலகுநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்.மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவராகவும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் உப தலைவராகவும் பணி யாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

# 40 சிற்றூழியர்களிடம் விளக்கம் கேட்டு கடிதம்

## நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் அனுப்பி வைத்தார்

வலி.வடக்கு, மார்ச் 18

நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட சிற்றூழியர்களிடம் பிரதேச சபையின் செயலாளரால் விளக்கம் கோரி கடந்த வெள்ளிக்கிழமை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை, சிற்றூழியர்கள் நியமன விடயத்தில் கடந்த பத்தாண்டுக்கு மேல் தற்காலிகமாக கடமையாற்றிய ஊழியர்கள் புறம் தள்ளப்பட்டு புதியவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதாகக் கூறி சிற்றூழியர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மீது முன்னறிவித்தல் இன்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை, ஊழியர்களை வேலைக்கு வராது தடை செய்தமை, அலுவலகத்தின் செயற்பாடுகளை முடக்கியமை, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை போன்ற காரணங்களுக்கான விளக்கங்களை அளிக்குமாறு கடிதம் மூலம் ஊழியர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஊழியர்கள் தரப்பில் கருத்துக் கூறுகையில்; தாம் குறிப்பிட்ட அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக பிரதேச சபைச் செயலாளருடன் கலந்துரையாடியதாகவும், அதற்கு அவர் பதில் தராத நிலையிலேயே அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தனர். (வ-7-86)

# இராட்சத மீன் எரியூட்டப்பட்டது

வடமராட்சி, மார்ச் 18

பருத்தித்துறை இன்பருட்டி கடலில் கரையொதுங்கிய இராட்சத "மணல் ஓங்கில்" என்ற மீன் சனிக்கிழமை தீ வைத்து எரித்து அழிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் உதவியுடன் இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர்கள் இணைந்து இதனை எரியூட்டி அழித்தனர்.

சுமார் 10 தினங்களுக்கு முன்னர் இறந்த நிலையில் கரையொதுங்கிய மீனில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்தே அது எரியூட்டி அழிக்கப்பட்டது. (ஜ-400-173)

# முன்பள்ளி கட்டடம் அமைக்க காணி அன்பளிப்பு

சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் முன்பள்ளிக்கு கட்டடம் அமைக்க அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமகனொருவர் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்த 44 வருடங்களாக தனியார் வீடொன்றில் இந்த முன்பள்ளி சிறப்பாக இயங்கி வருகிறது. வெளிநாட்டில் உள்ள ஒருவரே முன்பள்ளிக்கு தனது காணியை அன்பளிப்பாகவழங்கியுள்ளார். அதை அடுத்து வெளிநாடு மற்றும் உள்நாட்டில் உள்ள முன்பள்ளியின் பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் முன்பள்ளிக்கென 2 மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (ஒ-9)

# பால் வடியும் வேப்பமரம்

## அதிசயத்தைக் காண படையெடுக்கும் மக்கள்

தென்மராட்சி, மார்ச் 18

வேப்பமரமொன்றிலிருந்து தினமும் பத்து லீற்றருக்கு மேல் பால் வடிந்து வருகிறது. சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக மயில்வாகனம் என்பவரது வீட்டு வளவில் உள்ள வேப்ப மரத்தில் இந்த அதிசய சம்பவம் இடம்பெற்று வருகிறது.

கடந்த சதுர்த்தி தினத் தன்று அருகில் உள்ள இத்தியடி பிள்ளையார் ஆலய பூசைக்குச் சென்று விட்டுத் திரும்பிய வீட்டுஉரிமையாளரின்மனைவி வேப்பமரத்திலிருந்து பால் வடிவதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அதனை அயலவர்களுக்கு கூறியுள்ளார்.

இந்த அதிசயத்தைக் காண வரும் மக்கள் வேம்பம் பாலை போத்தல்களில் வாங்கிச் செல்கின்றனர். பெரும் நுரையுடன் வரும் பால் காலை, மாலை என இரு தடவை மரத்தில் கட்டப்படும் ஐந்து லீற்றர் கொள்ளளவுள்ள பாத்திரத்தில் நிறைவதாகவும், பார்வையிட வருவோர் இதனை மருத்துவ தேவைக்காகப் பெற்றுச் செல்வதாகவும் அந்த வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

தொடர்ந்து 14 தினங்களாக இவ் விதம் மரத்திலிருந்து பால் வடிவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



பால் வடியும் வேப்பமரம்

# கைதடி உப அலுவலகத்தை சபைக்குரிய காணியில் அமைக்குக

தென்மராட்சி, மார்ச் 18

கைதடி கிழக்கில் அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலகத்தை கைதடிச் சந்தியில் உள்ள சபைக்குச் சொந்தமான காணியில் அமைக்குமாறு கைதடி வாழ் மக்கள் பிரதேச சபைத்தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தை இரு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதால், தென்மராட்சி மேற்குப் பிரதேசத்துக்கான தலைமை அலுவலகத்தை கைதடியில் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளன. இந்தத் தென்மராட்சி மேற்குப் பிரதேசசபையின் கீழ் சரசாலை, நாவற்குழி, கைதடி ஆகிய உப அலுவலகங்கள் இணையவுள்ளன.

எனவே அந்தப் பகுதி மக்களின் நலன்கருதி கைதடி ஏ-9 வீதியில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பிரதேச சபையின் மேற்குப் பிரதேசத்துக்கான தலைமை அலுவலகம் அமையக் கூடிய வகையில் கட்டடம் அமைக்கப்படல் வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# விருந்தினர்களை மெய்மறக்கச் செய்த இசையும் அசைவும் இடைவேளை நிகழ்வு



மாணவர்களின் இசையும் அசைவும் காட்சி

தென்மராட்சி, மார்ச் 18

தென்மராட்சி பிரதேச செயலக தடகளப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றபோது, இடைவேளை நிகழ்வாக மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெற்றது.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வடமாகாண விளையாட்டுத்துறை திணைக்களப் பணிப்பாளர் கே.எம்.ராஜாரணசிங்க மற்றும் விருந்தினர்கள் ஆகியோருடன் பெருமளவு பொதுமக்களும் பார்வையாளர்களாககலந்துகொண்டனர்.

வித்தியாலயத்தின் 100 மாணவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இசையும் அசைவும் நிகழ்வில், காவடி ஆட்டம், மாகாண யாழ்.இசை ஆட்டம், ஒயிலாட்டம் போன்றவை தனித்தும் ஒருமித்தும் நடத்தப்பட்டன. இவை பார்வையாளர்கள் அனைவரையும் மெய்மறக்கச் செய்தன.

இந்த மாணவர் குழுவினர் ஏற்கெனவே நடைபெற்ற மேற்படி பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியில் இந்த இசையும், அசைவும் நிகழ்வை நடத்தி அனைவரையும் அசத்தி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# சந்திரபாபு நாயுடுவின் அதிரடித் திட்டம் இது

புதுடில்லி.மார்ச் 18

**தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்ய முன்னர் நவீன தொழில்நுட்பம் மூலம் பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிய உள்ளார் அக் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு.**



சந்திரபாபு நாயுடு

ஆந்திரப்பிரதேசத்தில் உயர் தொழில்நுட்ப முதல்வர் எனப் பெயரெடுத்தவர் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு. அவரது ஆட்சிக் காலத்தில் மாநிலத் தலைநகரான ஹைதராபாத்தில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்படுத்தினார். ஹைதராபாத்தை உயர்தொழில்நுட்ப நகராக மாற்றினார்.

வளர்ச்சிப் பணிகள் குறித்து அரசு அதிகாரிகளுடன் வீடியோ தொடர்பாடல் மூலம் ஆலோசனை நடத்தும் முறையை கொண்டுவந்தார். எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம். எஸ். மூலம் வாக்குச் சேகரிக்கும் முறையைக் கையாண்டார்.

இந்நிலையில் தற்போது நடைபெறவுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் தனது கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு முன்பு நவீன தொழில்நுட்பம் மூலம் அந்தந்தத் தொகுதி மக்களிடம் கருத்துகளைக் கேட்க உள்ளார். இது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹைதராபாத்தில் தனது இல்லத்தில் நிருபர்கள் முன்னிலையில் அவர் செயல் விளக்கம் அளித்தார்.

ஐ.வி.ஆர். எனும் தொழில்நுட்பம் மூலம் ஏற்கெனவே தேர்வுசெய்த 4 வேட்பாளர்கள் குறித்து அந்தந்தப் பகுதி பொதுமக்களிடம் கைபேசி மூலம் கருத்துக் கேட்கப்படுகிறது. இதில், யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுத்து பொதுமக்கள் குறுந்தகவல் அனுப்பலாம். வேறு யாரையாவதும் பரிந்துரை செய்யலாம். அதிகம் பேர் ஆதரவு தெரிவித்த வேட்பாளருக்குப் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும்.

இந்தப் புதிய முறையால் வேட்பாளர்கள் கதிகலங்கி உள்ளனர். (து)

# தேர்தலை புறக்கணிக்குமாறு மாவோக்கள் தீவிர பிரசாரம்

## அரசியல்வாதிகள் ஊருக்குள் நுழைய எதிர்ப்பு

புதுடில்லி.மார்ச் 18

ஒரிசா மாநிலத்தில் தேர்தலைப் புறக்கணிக்க வலியுறுத்தி மாவோயிஸ்டுக்கள் சுவரொட்டிகள் மூலம் பிரசாரம் செய்து வருகின்றனர்.

கோராபுட் மாவட்டத்திலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள மஜி குடா, தஸ்மாந்த்புர் உள்ளிட்ட ஊராட்சிகளில் தேர்தலுக்கு எதிரான சுவரொட்டிகளை மாவோயிஸ்டுக்கள் ஒட்டியுள்ளனர்.

அனைத்து அரசியல்வாதிகளும் ஏழைகளுக்கு எதிரானவர்கள். அரசியல்வாதிகளை பிரசாரத்துக்காகக் கிராமத்துக்குள அனுமதிக்கக் கூடாது. பழங்குடியினரின் வளர்ச்சியை அவர்கள் புறக்கணித்துவிட்டு, பசுமை வேட்டை என்ற நடவடிக்கையை அரசு தொடங்கியுள்ளது. மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அப்பாவி பழங்குடியினரை அரசு வதைத்து வருகிறது. நமது சட்டப்பூர்வ உரிமையைப் பெற ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்று சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் சுவரொட்டிகளில் சிலவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாகக் கோராபுட் பொலிஸ் கண்காணிப்பாளர் அவிநாஷ் குமார் கூறியதாவது:-

விரும்பத்தகாத சம்பவங்களைத் தவிர்ப்பதற்காகப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆந்திரம் மற்றும் சத்தீஸ்கர் பகுதியிலிருந்து மாவோயிஸ்டுகள் உள்ளே நுழைவதைத் தடுக்கப் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து எல்லையில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்படும் - என்றார். (து)



இந்தியாவில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது. இந்தியக் கட்சித் தலைவர்களின் படங்களை கொண்ட மோதிரங்களின் விற்பனை கோவையில் மிக மும்முரமாக நடக்கிறது. (து)

# விலகமாட்டேன்

## தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத் பவார் தெரிவிப்பு



சரத் பவார்

புதுடில்லி.மார்ச் 18

பிரதமர் பதவிக்கான போட்டியில் தான் இல்லை எனத் தேசியவாதக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியானது ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு முக்கிய கட்சியாகும். பொறுப்பான பதவியை ஏற்றுக்கொள்ளும் போது அதற்கு தகுந்தவாறு எண்ணிக்கைகள் இருக்க வேண்டும். வெறும், 30 தொகுதிகளில் மட்டுமே நாங்கள் போட்டியிடுகிறோம். இத்தகைய சிறிய அளவிலான எண்ணிக்கைகளை வைத்துக் கொண்டு தேசத்தை ஆள நினைப்பது நியாயமற்றது என சரத் பவார் கூறியுள்ளார்.

இருப்பினும், ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கும் ஒருமித்த கருத்துகள் உடைய மாநிலக்கட்சிகளுக்கும் இடையே நல்லிணக்கம் ஏற்பட்டு மத்தியில் நிலையான அரசை உருவாக்கும் வகையில் அரசியல் சமரசம் செய்யும் பணியை செய்ய தான் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கும் மதச்சார்பற்ற கட்சிகளுக்கும் இடையே ஒரு அரசியல் சமரசவாதியாக தன்னால் நிச்சயமாக இயங்க முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (து)

# தேர்தல் செலவு ரூ.30,000 கோடி

புதுடில்லி.மார்ச் 18

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது மத்திய அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தரப்பில் ரூபா 30,000 கோடிவரை செலவிடப்படும் என்று கணக் கிடப்பட்டுள்ளது.

2012 இல் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலின்போது ரூபா 42,000 கோடி செலவிடப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக இந்தியத் தேர்தலில் பெரும் தொகை செலவிடப்படுவதாக 'சென்ரர் பார் மீடியா ஸ்ரஸ்ரிக்ஸ்' என்ற அமைப்பின் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோடீஸ்வர வேட்பாளர்கள், நிறுவனங்கள் சார்பில் கணக்கில் வராமல் கோடிக்கணக்கான ரூபா பிரசாரத்துக்காக வாரியிறைக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதன்படி ஒட்டுமொத்தமாக ரூபா 30,000 கோடி செலவிடப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் தேர்தல் ஆணையம் சார்பில் வாக்குப் பதிவு நடவடிக்கைகளுக்காக ரூபா 3,500 கோடிவரை செலவு செய்யப்படும் என்று தெரிகிறது. இதே தொகை அளவுக்கு மத்திய அரசு, ரயில்வே துறை மற்றும் மாநில அரசுகளும் செலவு செய்யும்.

தேர்தலில் வேட்பாளர் செலவு வரம்பு ரூபா 54 லட்சத்தில் இருந்து ரூபா 70 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வேட்பாளர்களின் தேர்தல் செலவு மட்டும் ரூபா 4000 கோடியை எட்டும் என்று கூறப்படுகிறது. சில வேட்பாளர்கள் கட்சிகளை விட அதிக செலவு செய்வதாக 'சென்ரர் பார் மீடியா ஸ்ரற்ரிக்ஸ்' அமைப்பின் தலைவர் பாஸ்கர ராவ் கூறுகிறார்.

கடந்த 1996 மக்களவைத் தேர்தலின் போது ரூபா 2500 கோடி செலவிடப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் இந்தத் தொகை ரூபா 10,000 கோடியாக அதிகரித்தது. இது படிப்படியாக அதிகரித்து தற்போது ரூபா 30, 000 கோடி அளவை எட்டவுள்ளது. (து)

# காஷ்மீரில் மழையால் நிலச்சரிவு

காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப் பகுதியில் பெய்துவரும் கனமழை காரணமாக அங்கு நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால், அப்பகுதியில் வசித்து வந்த 21 குடும்பங்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டுள்ளன.

காஷ்மீர் மாவட்டத்தின் வடக்குப் பகுதியான பாரமுல்லா மாவட்டத்தில் பொலிஸ் துணை ஆணையர் தலைமையில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியில் இருந்து பள்ளி மற்றும் அரசு அலுவலகங்களில் இருந்தோரும் பத்திரமாக மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (து)

# அ.தி.மு.கவை ஆதரித்தால் வல்லரசாக மாறும் இந்தியா

## கள்ளக்குறிச்சியில் நடந்த கூட்டத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா

சென்னை,மார்ச் 18

மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு வாக்களித்தால் இந்தியா வல்லரசாகும் என்று கள்ளக்குறிச்சி பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அ.தி.மு.க பொதுச் செயலாளரும் முதல்வருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

கள்ளக்குறிச்சி அருகே உலகங்காத்தானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கள்ளக்குறிச்சி மக்களவை அ.தி.மு.க. வேட்பாளர் காமராஜை ஆதரித்து ஜெயலலிதா பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

நடைபெற உள்ள தேர்தல் ஆட்சி மாற்றத்துக்கான சாதாரண தேர்தல் அல்ல. இந்திய மக்கள் விடுதலை பெறும் தேர்தலாகும். 2 ஜி ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. காங்கிரஸும் தி.மு.கவும் இணைந்து சாமான்ய மக்களுக்கு எதிராகச் செயல்பட்டதால் பொருளாதாரம் ஸ்தம்பித்தது.

மத்திய அரசின் மாற்றாந் தாய் மனப்பான்மையால் கடந்த 33 மாதங்களில் தமிழகத்துக்குக் கிடைக்கவேண்டிய திட்டங்கள் கிடைக்கவில்லை ஆனாலும் தமிழக ம[illegible]குச் சலுகை விலையில் அத்தியாவசிய பொருள்களை அளித்துள்ளேன். மேலும் சமையல் எரிவாயுக்கான மதிப்பு கூட்டு வரியை ரத்து செய்துள்ளேன். இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ மக்கள் புனிதப் பயணம் மேற்கொள்ளவும் மானியம் அளித்துள்ளேன்.

கடந்த தி.மு.க. அரசு உற்பத்திக் [illegible] வையான நடவடிக்கை [illegible] காததால் மின் பற்றாக்குறை ஏற்பட்டது. தற்போது தேவையான நடவடிக்கை எடுத்ததால் 2,500 மெகா வாற்ஸ் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ததால் தற்போது மின்பற்றாக்குறை பெருமளவு குறைந்துள்ளது. விரைவில் மின் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றுவிடும். எதிர்காலத்தில் 5,500 மெகா வாற்ஸ் மின்சார உற்பத்திக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து நிவாரணமும் வழங்கப்பட்டது.

இந்தியாவிலேயே வறட்சி நிவாரணம் வழங்கிய மாநிலம் தமிழ்நாடுதான் - என்றார். (து)

# மாயமான மலேசிய விமானத்தின் தகவல்களை வழங்கப் பின்னடிப்பு

## மலேசியா, அமெரிக்கா மீது சீனா குற்றச்சாட்டு

பீஜிங்,மார்ச் 18

மலேசிய விமானம் காணாமற் போன விவகாரத்தில், அமெரிக்காவும் மலேசியாவும் போதுமான விவரங்களைக் கொடுக்காமல் காலத்தை வீணடித்து வருவதாகச் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.



காணாமற் போன மலேசிய விமானத்தில் 227 பயணிகளும், 12 விமானப் பணியாளர்களும் இருந்தனர்.

பயணிகளில் 154 பேர் சீனர்கள். இதனால், விமானம் காணாமற் போன விவகாரத்தில் சீன மக்களின் நெருக்குதலை சீன அரசு சந்தித்து வருகிறது.

விமானம் காணாமற் போனது தொடர்பாக முறையான தகவல் கிடைக்காததால், தேடும் பணியில் முன்னேற்றம் காணப்படவில்லை. இதனால், அதிருப்தியடைந்துள்ள சீனா இவ்விவகாரத்தில் மலேசியா மற்றும் அமெரிக்காவைக் குற்றஞ் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சீன அரசின் செய்தி நிறுவனமான ஜின்குவா செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

வெளிப்படையான தகவல்களை அளிக்காமல் மலேசியாவும், அமெரிக்காவும் காலத்தை வீணடித்து வருகின்றன. விரிவான விவரங்களை அளிக்காமல் இருப்பதும், விவரங்கள் கிடைப்பதில் தாமதமாவதும் வேதனை அளிக்கக்கூடிய விடயங்களாகும். ஒருவாரத்துக்கும் அதிகமாகிவிட்ட நிலையில், காணாமற் போனவர்களின்குடும்பத்தினரின்வேதனை அதிகமாகியுள்ளது.

உரிய நேரத்தில் அதிகாரப்பூர்வமான தகவல் கிடைக்காமல் இருப்பது அல்லது தாமதமாகக் கிடைப்பது விமானத்தைத் தேடுவதற்கு மேற்கொள்ளும் பெரு முயற்சியை வீணடிப்பதாகும். ஏராளமான வதந்திகள் பரவி விட்டன. அவை, காணாமற் போனவர்களின் குடும்பத்தை மேலும் பதற்றமடையச் செய்கின்றன.

இன்றைய நவீன தொழில்நுட்ப வசதிகளை வைத்துக் கொண்டு, தகவல் பரிமாற்றத்தில் தாமதம் ஏற்படுவது சகித்துக் கொள்ள முடியாத ஒன்று.

சர்வதேச தேடுதல் வேட்டைக்குப் பொறுப்பேற்றுள்ள நாடு என்ற முறையில், மலேசியாவுக்கு தப்பித்துக் கொள்ள முடியாத பொறுப்பு உள்ளது. விமானத்தை வடிவமைத்த போயிங், இயந்திரத்தை வடிவமைத்த ரோல்ஸ்றோய்ஸ், புலனாய்வுத் துறையில் கெட்டிக்காரத்தனமான அமெரிக்கா உள்ளிட்டவை சிறந்த பணியாற்ற வேண்டும்.

காலம் கடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழலில், மாயமான விமானம் குறித்து தகவல் கிடைக்காமல்

இருப்பது பெரும்புதிரான ஒன்று.

மலேசியத் தரப்பிலும், தகவல் பகிர்வில் அமெரிக்கா தரப்பிலும் இன்னும் வெளிப்படையான ஒத்துழைப்புத் தேவை என சீனா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சர் ஜின் காங் கூறுகையில்; மலேசியா முழுமையான மற்றும் சரியான தகவல்களைத் தர வேண்டும். சீன தொழில்நுட்ப நிபுணர்கள் விசாரணையில் உதவுவதற்காக மலேசியா சென்றுள்ளனர் என்றார்.

மலேசிய பிரதமர் நஜிப் ரஸாக், விமானத்திலிருந்து தகவல் சமிக்ஞைகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டபின், வெவ்வேறு பாதைகளில் விமானம் 7 மணி நேரம் பறந்திருக்கிறது எனச் சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

மலேசிய பிரதமரின் இந்தக் கருத்துக்குப் பின்னரே, மேற்கண்டவாறு சீனா தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**நாங்கள் ஒளித்து வைக்கவில்லை**

காணாமற்போன மலேசிய விமானத்தை நாங்கள் ஒளித்து வைக்கவில்லை என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. இந்த விமானம் பாகிஸ்தானில் எங்காவது ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம் என ஊடகங்களில் செய்தி வெளியானது.

இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமரின் விமானப் போக்குவரத்து சிறப்பு அதிகாரி சுஜாத் அசீம் செய்தியாளர்களிடம் கூறுகையில்; பாகிஸ்தானில் இருந்து வெகு தொலைவில் விமானம் மாயமாகியுள்ளது. எங்கள் ராடர்களில் இந்த விமானம் காணப்படவில்லை. எனவே இதை பாகிஸ்தான் ஒளித்துவைக்க வாய்ப்பே இல்லை - என்றார். (த)

## விமானம் மாயமாகியமை விமானிகளுக்கு தொடர்பா?

*விசாரணைகள் தீவிரம்*

மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் காணாமற்போனதற்கு அதன் விமானிகள் காரணமாக இருக்கலாம் என்ற சாத்தியத்தை அந்த விமானத்தின் இரு விமானிகளின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் நம்பமறுத்துள்ளார்கள்.

விமானத்தின் இருப்பிடம் அறியும் கருவிச் செயற்பாட்டை இழந்த பின்னர், விமானியின் அறையில் இருந்த ஒருவரிடம் இருந்து வந்த 'குட் நைட்' என்ற இறுதிச் செய்தி காரணமாக விமானச் சிப்பந்திகளின் பின்னணி குறித்து புலன் விசாரணை நடந்து வருகின்றது.

மத்திய ஆசியா முதல் இந்து சமுத்திரம் வரை விரிவுபடுத்தப்பட்ட பரப்பில் இந்த போயிங் 777 விமானத்தை தேடும் நடவடிக்கையில், 20 க்கும் அதிகமான நாடுகள் ஈடுபட்டுள்ளன. ராடர் மற்றும் செய்மதி தரவுகளும் சோதிக்கப்படுகின்றன. 9 நாள்களுக்கு முன்னதாக இந்த விமானம் காணாமற் போனது. (த)



கிரைமியா சுதந்திர நாடாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை அடுத்து அந்த நாட்டின் கொடியைத் தாங்கியவாறு வீதிகளில் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டிருக்கும் கிரைமிய மக்கள். (த)

## நிகழ்வுகளில் காதலியுடன் பிரிட்டன் இளவரசர் ஹரி



இளவரசர் ஹரியும் காதலி *போனாஸும்*

லண்டன், மார்ச் 18

பிரிட்டன் இளவரசர் ஹரி தன் காதலியுடன் ஜோடியாகப் பொது நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்து கொள்கிறார்.

பிரிட்டனின் அரச குடும்பத்தைச்சேர்ந்த இளவரசர் சார்ல்ஸ்-டயனாவின் மூத்த மகன் வில்லியம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமுன் கேத் மிடில்டனைக் காதலித்து கரம் பிடித்தார்.

இவரது இளைய மகன் ஹரி (வயது - 29). இராணுவத்தில் பணியாற்றித் தற்போது விலகியுள்ளார். ஹரியும், கிரசிடா போனாஸ்(வயது - 25) என்ற பெண்ணும் காதலித்து வருவதாக அந்நாட்டுப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

இந்நிலையில்இருவரும்இணைந்து அடிக்கடி பொது விழாக்களில் கலந்து கொள்வது, அவர்கள் இருவரும் திருமணம் செய்ய இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளில், இந்த காதல் ஜோடி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## சுதந்திர நாடாக கிரைமியா நாடாளுமன்றம் அறிவிப்பு

மொஸ்கோ,மார்ச் 18

கிரைமியாவில் உள்ள நாடாளுமன்றம், தமது நாடு உக்ரைய்னில் இருந்து சுதந்திரம் பெற்றதாகப் பிரகடனம் செய்து, ரஷ்யாவில் இணைவதற்கும் விண்ணப்பித்துள்ளது.

அந்த வளைகுடாவில் இருக்கும் அனைத்து உக்ரைனியர்களின் சொத்துக்களும் தேசிய மயமாக்கப்படுவதாகவும், அந்தப் பிராந்தியத்தில் இனி உக்ரைனியச் சட்டங்கள் செல்லுபடியாகாது என்றும் அது அறிவித்துள்ளது.

ஐ.நா மற்றும் சர்வதேச சமூகத்துக்கான ஒரு கோரிக்கை ஆவணத்தில், கிரைமியாவின் நாடாளுமன்றம், தம்மை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்குமாறு கோரியுள்ளது.

கிரைமியாவில் ஞாயிறன்று 96 வீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்த, ஒரு மக்கள் கருத்தறியும் வாக்களிப்பில், உக்ரைய்னில் இருந்து பிரிந்து ரஷ்யாவுடன் இணைவது என்று பெரும்பாலானோர் வாக்களித்ததை அடுத்து இந்த நடவடிக்கைகள் வந்துள்ளன.

ரஷ்யாவின் ஒரு பகுதியாக இணைவதற்கான முறையான கோரிக்கையை விடுப்பதற்காகக் கிரைமியாவின் பிரதமர் மொஸ்கோவுக்குச் சென்றுள்ளார்.

**மேற்கு நாடுகள் அதிருப்தி**

இதற்கிடையே, கிரைமியா உக்ரைய்னில் இருந்து பிரிவதற்கு முடிவெடுத்த பின்னணியில், இது தொடர்பில் ரஷ்யா மீது எப்படியான தடைகளை விதிக்கலாம் என்று ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் பிரஸல்ஸில் கூடுகிறார்கள்.

ஜேர்மனி ரஷ்யாவிடம் இருந்து வாங்கும் எரிவாயுவின் அளவைக் குறைக்க வேண்டும் என்று ஜேர்மனியின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிரைமிய மக்கள் கருத்தறியும் வாக்களிப்பை சட்ட விரோதமானதாகப் பார்க்கும் அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் அதற்கான பதிலடி குறித்து ஆராய்கின்றன. (த)

## பிரான்ஸில் சூழல் மாசடைவு

பரிஸ்,மார்ச் 18

பிரான்ஸில் கடந்த சில நாள்களாகச் சூழல் மாசடைவு மட்டம் அதிகரித்த நிலையில் போக்குவரத்துப் பொலிஸார் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதன்போது, போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளதுடன், பரிஸ் உள்ளிட்ட பெருநகரங்களில் நூற்றுக் கணக்கான பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர, ஒற்றை எண்களைக் கொண்ட வாகனங்கள் மாத்திரம் நகர எல்லைக்குள் அனுமதிக்கப்படுகின்றன.

சிறிய ரக குறைந்த புகை வெளியேற்றத்தைக் கொண்ட வாகனங்கள் இந்த வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றன. (த)

# தேர்தல் சட்டங்களை மீறி பரப்புரையில் ஈடுபடாதீர்

## தேர்தல்கள் செயலகம் வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 18

தேர்தல் சட்டங்களை மீறாது தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுமாறு தேர்தல்கள் செயலகம் வேட்பாளர்களிடம் கோரியுள்ளது.


தேர்தல் சட்டத்தின்படி விருப்பு இலக்கத்தை வேட்பாளரது அலுவலகத்தில் மாத்திரமே காட்சிப் படுத்த முடியும். ஆனால் பல வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரைக்கு பல்வேறு வழிகளில் விருப்பு இலக்கத்தை காட்சிப்படுத்துகின்றனர் என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# கண்ணை மூடிக்கொண்டு அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு தராது

## அது நடைமுறைச் சாத்தியமற்றது என்கிறார் ஹசன் அலி

கொழும்பு,மார்ச் 18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு தேசப்பற்று உண்டு. ஆனால் கண்ணை மூடிக்கொண்டு அரசின் அனைத்து நடவடிக்கைகளையும்


ஹசன் அலி

> "நாட்டுக்கு துரோகம் இழைக்கப் போவதில்லை. ஆனால் எமது பக்க நியாயங்களை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகிறது

எம்மால் ஆதரிக்க முடியாது. அது நடைமுறைச் சாத்திய மற்றது.

இவ்வாறு கட்சியின் பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவித்தார்.

எனினும் அரசின் அனைத்து உத்தரவுகளையும் நாம் பின்பற்றப்போவதில்லை என்று அவர் கூறினார்.

நாட்டுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு துரோகம் இழைக்கப் போவதில்லை. ஆனால் எமது பக்க நியாயங்களை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.


சிறுபான்மை இனம் என்ற காரணத்தால் துரோகி முத்திரை குத்தப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று அவர் மேலும் கூறினார். (ச)

# யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

## அருள் ஒளி தர்சன மாலையும் பங்குனி உத்தர சிறப்புப் பூஜையும்



இடம் : திவ்விய ஜீவன சங்க மண்டபம்
சட்டநாதர் கோயிலடி நல்லூர்.
காலம் : 23.03.2014.
ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி



**பங்குனி மாதம் அம்மனுக்குரிய மாதமாகும்**

வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் பங்குனி உத்தர சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தசோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

யாழ் தொடர்புகளுக்கு 077 6993861. 0779825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192

# யா/செங்குந்த இந்துக் கல்லூரி

## வணிக ஆசிரியர்

## திருமதி தேவராணி பேரின்பராசா (SLTS-I) அவர்களின்

## மணிவிழா வாழ்த்து – 18.03.2014

### சேவையின் சேவகியே வாழ்க



ஆசிரியர் சேவையில் முப்பது வருடங்கள் சேவையாற்றிய திருமதி.தேவராணி பேரின்பராசா தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். இவரும், நானும் ஒரே காலத்தில் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று ஒரே மாவட்டத்தில் ஆசிரியர்களாக சேவையாற்றியவர்கள்.

அவர் அமைதியான சுபாவமுடையவர். தம்மைப் பற்றி பெருமை கொள்ளாதவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயற்படுபவர். மாணவர்களுடன் அன்புடன் பழகுபவர். மாணவர்களின் விருப்பத்திற்குரிய ஆசிரியர். தமது சேவைக் காலத்தில் இருபத்தொரு வருடங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேவையாற்றியவர். அக்காலத்தில் க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கு வர்த்தக பாடத்தைக் கற்பித்தவர். பல மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய பெருமைக் குரியவர். என்னுடைய முகாமைத்துவத்தின் கீழ் சேவையாற்றிய காலத்திலும் கல்லூரியின் பெருமைமிகு வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர். அத்தகைய பல்சிறப்பிற்குரிய ஆசிரியர் ஓய்வு பெறுவது பாடசாலைக்கு இழப்பாக இருந்தாலும் ஓய்வு என்பது தவிர்க்கமுடியாதது. இவரது ஓய்வுக் காலம் வளமாக அமைய வாழ்த்துகின்றேன்.

அ.அகிலதாஸ்,கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

### சிறந்த ஓர் ஆசிரியை

திருமதி தேவராணி பேரின்பராசா அவர்கள் சிலாபத்தில் தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்து முப்பது வருட ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்து ஓய்வு பெறும் இவர் பரீட்சைத் திணைக்களத்தின் உதவிப்பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்ததுடன் வலய மட்ட, மாகாணமட்ட வினாத்தாள்களைத் தயாரித்து தனது மாணவர்கள் மட்டுமன்றி அனைத்து மாணவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளார். வணிகப் போட்டி நடத்துவதில் பணியாற்றியதுடன் தான் கற்பித்த பாடசாலைகளுக்கு உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுத்த இவ் ஆசிரியரின் உயர்ந்த சேவையைப் பாராட்டுவதோடு அவரது வாழ்வும் பணியும் சிறக்க இறைவன் அருள் புரிவாராக.

சி.ஞானசேகரம்,ஆசிரிய ஆலோசகர், வணிகப்பிரிவு, யாழ் கல்வி வலயம்.

### நான் கண்ட நல்லாசிரியர்



"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற எமது பாடசாலையின் மகுட வாசகத்திற்கிணங்க உயர்வான நல்ல சிந்தனைகளைக் கொண்ட வணிகப் பட்டதாரி ஆசிரியர் திருமதி தேவராணி பேரின்பராசா அவர்கள் வயதினில் மணிவிழாக் கண்டதனாலே பாடசாலை ஆசிரிய வாழ்வினின் றும் விடை பெற வேண்டுமெனக் காலம் உணர்த்தி நிற்கின்றது.

சிலாபத்தில் தனது ஆசிரிய வாண்மையை ஆரம்பித்து, கொக்குவில் இந்துவில் வாண்மையை விருத்தி செய்து, எமது செங்குந்த இந்துவோடு நிறைவு செய்துள்ளார். இவரது திறமையினாலே மேன்மை பெற்ற பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் அனைவரும் இவரை வாழ்த்தித்துதிக்சின்ற நன் நாளாக இன்றைய நாள் அமைந்துள்ளது. இவரது கடந்த காலம் போன்று எதிர்காலமும் மகிழ்ச்சி பொங்கியதாகவும், ஆரோக்கி யம் மிக்கதாகவும் விளங்க நன்மைகளை நல்கும் நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றேன்.

க.தருமகுலசிங்கம்,அதிபர்,யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

வர்த்தகமும் கணக்கியலும்
வாஞ்சையுடன் கற்பித்து
ஏற்றமிகு ஆசிரிய சேவையை
எமக்களித்த எழிலான ஏந்திழையே!

பண்புடனே பலகலைகள் பாங்காய்
பயிற்றுவித்த பேரின்பராசா பெருமாட்டி
அன்பு என்னுமாயுதத்தால் எம் மாணவர்
அனைவர் மனதையும் வென்றெடுத்தாய்!

முப்பது ஆண்டுகள் முழுமையான சேவையாற்றி
ஒய்வுபெறும் உத்தமியே -வருங்காலம்
வளமுடனும் நலமுடனும் அமைய
வாழ்த்துகின்றோம் அனைவருமே!

ஆசிரியர் நல்லுறவு மன்றம், யா/செங்குந்த இந்துக் கல்லூரி.



திருமதி தேவராணி பேரின்பராசா (B.Com,Dip.in.Ed)

பெற்றோர் : இராசதுரை மங்கையர்க்கரசி
பிறப்பிடம் : சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்
வாழ்விடம் : இல.366, கச்சேரி, நல்லூர் வீதி, நல்லூர்
துணைவர் : சுப்பையா பேரின்பராசா
ஆரம்பக்கல்வி : பெரியபுலம் தமிழ் மகாவித்தியாலயம்
இடைநிலைக் கல்வி : யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
உயர்கல்வி : மானிப்பாய் இந்துக் கல்லூரி
பட்டப்படிப்பு : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா: தேசிய கல்வி நிறுவகம்

### ஆசிரியர் சேவை விவரம்

| | |
|---|---|
| சிலா/சென்.பேனாத் தமிழ் மகாவித்தியாலயம் | 01.11.1984 -16.07.1989 |
| யா/கொக்குவில் இந்துக்கல்லூரி | 17.07.1989 -25.07.2010 |
| யா/செங்குந்த இந்துக்கல்லூரி | 26.07.2010 -18.03.2014 |

★★★★★★ மலருக்கான அனுசரணையுடன் வாழ்த்தும் பழைய மாணவர்கள் ★★★★★★

**KANNA STUDIO**
*(Photo&video)*
No.84, Albert Place Dehiwala,Colombo. 077 748 2107
Saddanathar Road, Nallur, Jaffna. 077 075 9511
www.kannastudio.com

**க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம், இல.76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
சித்தஆயுள்வேத மருந்துச்சரக்குப் பொருள்கள் மற்றும் அபிசேகப் பொருள்கள், எண்ணெய் வகைகள், இந்தியன் விசேட ஊதுபத்தியுடன் அனைத்து மருந்துச்சரக்குப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

(45892) (5,6)

★★★★★★ ஆசிரியர் நல்லுறவு மன்றம், யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி. ★★★★★★

# போலி ஆவணங்களைத் தயார் செய்து பிணையெடுக்க முற்பட்டவருக்கு மறியல்

## கிளிநொச்சி நீதிமன்றில் மாட்டினார் பெண்ணொருவர்

கிளிநொச்சி, மார்ச் 18
கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட பெண் ஒருவரைப் பிணை எடுக்க போலி ஆவணங்களைத் தயாரித்து நீதிமன்றில் ஒப்படைத்த குற்றச்சாட்டில் மற்றொரு பெண் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கான பிணை விண்ணப்பத்தை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று நிராகரித்த நிலையில், மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த பெண்ணின் உறவினர் ஒருவர், ஆவணங்களை மன்றுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு போலியாகத் தயாரிக்கப்பட்ட இறப்பர் முத்திரைகளைப் பயன்படுத்தி கிராமசேவகர், பிரதேச செயலர் ஆகியோரது ஒப்பங்களை உள்ளடக்கி போலி ஆவணங்களைத் தயாரித்துள்ளார். இந்த ஆவணங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வேளை அவை போலியானவை எனக் கண்டறியப்பட்ட நிலையில் அதனுடன் தொடர்புடைய பெண் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். குறித்த நபரை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

இதேவேளை குறித்த ஆவணங்களைத் தயாரிப்பதற்கு உடந்தையாக இருந்த மற்றுமொரு நபரைத் தாம் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-55)

## வெள்ளிவிழா மலர் வெளியீடு



முதற்பிரதி வழங்கப்பட்டபோது

மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் தனது 25 ஆவது வருட பூர்த்தியையொட்டி வெள்ளி விழா மலரொன்றைக் கடந்த சனிக்கிழமை வெளியிட்டு வைத்தது. முற்பகல் 10 மணிக்கு மன்னார் அரச செயலக மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல் கலந்துகொண்டு மலரை வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை மன்னார் மாவட்ட ஓய்வூதியர் சங்கத் தலைவர் ரி.பி. சிந்தாத்துரை பெற்றுக் கொண்டார். நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ். சந்திரையா, உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)

## மாணவருக்கு பால் இல்லை

வவுனியா, மார்ச் 18
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் பால் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு திட்டத்துக்கு என மரக்கறிகளுக்கு அரசு வழங்கிய கொடுப்பனவுகள் கடந்த 4 மாதமாக வழங்கப்படவில்லை என்றும் அத்துடன் 2014 ஆம் ஆண்டு பால் கொள்வனவுக்கென அரசாங்கம் பணம் வழங்காததாலுமே பால் விநியோகத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், தமிழ் மகா வித்தியாலயம், நம்பைக்குளம் மகா வித்தியாலயம், விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா சி.சி.ரி. எம். எஸ். பாடசாலை ஆகியவற்றில் தற்போது பால் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-402)


வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினால் வவுனியா தெற்கிலுப்பைக்குளம் பராசக்தி வித்தியாலயத்திற்கு பரிசுப் பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ஐ-421)

## உவர் தடுப்பணை அமைக்க ஐ.ஓ.எம். பிரதிநிதிகள் ஆராய்வு

கிளிநொச்சி, மார்ச் 18
கிளிநொச்சி மாவட்டத்தின் கிராஞ்சி, பல்வராயன்கட்டு ஆகிய கிராமங்களில் உவராவதைத் தடுப்பதற்கான அணை அமைத்தல் தொடர்பாக அந்தப் பகுதியை ஐ.ஓ.எம். நிறுவன அதிகாரிகள் பூநகரி பிரதேச செயலருடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

பல்லவராயன்கட்டு, கிராஞ்சி கிராமங்களில் அநேகமான நிலப்பகுதி வேகமாக உவரடைந்து வருகிறது. இதனையடுத்து இங்கு உவர்நீர் தடுப்பணைகளை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக குறித்த பகுதியை ஐ.ஓ.எம். பிரதிநிதிகள் பார்வையிட்டனர். (ஐ-18)

## மயங்கி விழும் மாணவர்கள்

### போசாக்கு குறைபாடு எனச் சந்தேகம்

கிளிநொச்சி, மார்ச் 18
வன்னிப் பகுதியில் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பலர் போசாக்கின்மையால் பாதிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பாடநேரங்களில் மயங்கி வீழ்ந்து ஆசிரியர்களால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் சம்பவங்கள் இதனை உறுதிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப் படுகிறது.

உடல், உள ரீதியான பாதிப்பு மற்றும் பிள்ளைப் பருவத்திற்கான போசாக்கு உணவுகளை உட்கொள்ளாமை போன்ற காரணங்களால் மாணவர்கள் பலரை மெல்லக் கற்கும் பிரிவுக்குள் அடக்கவேண்டியுள்ளதாக ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது உடல் ரீதியாக நலிவுற்ற பிள்ளைகள் பாடசாலை நேரங்களில் மயங்கி வீழ்வதால் அவர்களது போசாக்கு நிலைமை குறித்து ஆராய வேண்டும் என வைத்தியசாலை மற்றும் பாடசாலைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். பாடசாலைகளில் பால் விநியோகம், மதிய உணவுத் திட்டம் என்பன செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில் பிள்ளைகள் சுகவீனம் அடைவதற்கான காரணங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் விரிவாக ஆராய வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-426)

## சாரதிகள் கைப்பேசி பாவித்தால் நடவடிக்கை

கிளிநொச்சி, மார்ச் 18
வீதிகளில் வாகனம் செலுத்தும் போது கைப்பேசிகளில் உரையாடுவோரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தித் தண்டிப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற வீதி விபத்துத் தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் வாகனங்களில் பயணிப்பவர்கள் பலர் கைப்பேசியில் உரையாடிய வண்ணம் வாகனங்களைச் செலுத்துவதால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொதுச் சேவைகளில் ஈடுபடும் வாகனங்களில் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்க முடியும். இதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட சாரதிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-18)

## குறைந்த விலையில் இலைக்கஞ்சி

குறைந்த செலவில் அதிக போசாக்கை ஏற்படுத்தும் நோக்கில் அரச அலுவலகங்களில் இலைக்கஞ்சி வழங்குவதற்கான திட்டத்தை வவுனியா பிரதேச செயலகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

தேவையின் நிமித்தம் அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் மற்றும் ஊழியர்களின் நன்மை கருதி இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.

ஒரு கோப்பை இலைக்கஞ்சி 20 ரூபாவுக்கு வவுனியா பிரதேச செயலகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. (ஐ-402)

## பொதுக் கூட்டம்

வவுனியா, மார்ச் 18
வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வைரவப் புளியங்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள ஊழியர்கள், உரிமையாளர்கள் சிகை அலங்கரிப்பு நிலையங்களை அன்றைய தினம் மூடி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ச. அன்ரன் இராசநாயகம் கேட்டுள்ளார். (ஓ-402)

## கிராம அபி.சங்கத்தின் நிதி ஊழல் கணக்காய்வில் அம்பலமானது

கிளிநொச்சி, மார்ச் 18
கிளிநொச்சி, ஊற்றுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னைய நிர்வாகத்தினரால் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 606 ரூபாய் நிதி வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படாமல் கையாடப்பட்டுள்ளமை கணக்காய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊற்றுப்புலம் கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் முன்னைய நிர்வாகமே இந்த மோசடியைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய நிர்வாகத்திடம் பழைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படாமை குறித்து பிரதேச செயலர், அரச அதிபர் உள்ளிட்டோர்க்கு புதிய நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியதை அடுத்தே சங்கத்தின் கணக்குகள் மீளாய்வு செய்யப்பட்டன.

**ஊற்றுப்புலம் கிராமத்தின் முன்னைய நிர்வாகமே இந்த மோசடியைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.**

இதன் மூலம் மணல் விற்பனையினால் பெறப்பட்ட வருமானத்தில் இருந்து ஒரு லட் சத்து 48 ஆயிரத்து 606 ரூபாய் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்படாமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்படி குறித்த தொகையை பழைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் உடனடியாக வங்கிக் கணக்கில் வைப்பிலிட வேண்டும் என கரைச்சிப் பிரதேச செயலர் கொ. நாகேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (ஐ-55)

## பஸ் சேவைகளை அதிகரிக்க வவுனியா மக்கள் கோரிக்கை

வவுனியா, மார்ச் 18
வவுனியா மாவட்டத்தில் பஸ் சேவைகள் சீரின்மையால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியா சுதந்திரபுரம், பாலமோட்டை, பம்பைமடு, செட்டிகுளம், சிதம்பரபுரம், மகாரம்பைக்குளம், சாந்தசோலை, பூந்தோட்டம், வெளிக்குளம், புதுக்குளம், நேரியகுளம், பண்டாரிக்குளம், தவசிக்குளம், ராசேந்திரகுளம், அரபாநகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு பஸ் சேவைகள் போதிய அளவில் இடம்பெறுவதில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் அதிக பணம் கொடுத்து வேறு வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியே தாம் அவசர பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வெளிமாவட்டங்களுக்குச் சென்று மாலை வேளை வவுனியா பஸ்நிலையம் வருவோர் தத்தமது ஊர்களுக்கு செல்வதற்கு சிரமப்பட வேண்டியுள்ளது. எனவே மக்களின் போக்குவரத்துக் கருதி இரவு 8 மணிவரை சேவைகளை விஸ்தரிக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-402)

## பிற்பகலில் பஸ்சேவை இல்லை; பூநகரி மக்கள் நிர்க்கதி

கிளிநொச்சி, மார்ச் 18
பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை. இதனால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக பூநகரி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுத் தேவைகளுக்காக பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு வரவேண்டியுள்ளது. பிற்பகலுக்குப் பின்னர் பஸ் சேவைகள் இடம்பெறாததால் அங்கு சென்று வருவது நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றது. எனவே பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு பிற்பகலி லும் பஸ்சேவை நடத்தப்பட வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (ஐ-18)

# இடைப்போக விவசாயம் பாதிக்கப்படும் அபாயம்

## சேனநாயக்க சமுத்திர நீர்மட்டம் குறைவு

அம்பாறை,மார்ச் 18

அம்பாறை டி எஸ். சேனநாயக்க சமுத்திரத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளதனால் அம்பாறை மாவட்டத்தில் இடைப்போக விவசாயச் செய்கையின் நில அளவு குறைக்கப்பட்டுள்ளது.


இடைப்போக விவசாயச் செய்கைக்காக அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கைக்காக 25,500 ஏக்கருக்கும், கரும்புச் செய்கைக்காக 9,250 ஏக்கருக்கும் சேனநாயக்க சமுத்திரத்தில் நீர் உள்ளது என்று அம்பாறை நீர்ப்பாசனத் திணைக்களம் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவி வரும் வறட்சியான காலநிலையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்து வருவதால் இடைப் போக நெற்செய்கை பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**“ அம்பாறை மாவட்டத்தில் நெற் செய்கைக்காக 25500 ஏக்கருக்கும், கரும்புச் செய்கைக்காக 9250 ஏக்கருக்கும் சேனநாயக்க சமுத்திரத்தில் நீர் உள்ளது.**

அதனால் இடைப்போக நெற் செய்கைக்கு அனுமதிக்கப்படும் நிலப்பரப்பைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினர். (ச)





திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தத் திருவிழா நேற்று திங்கட்கிழமை உயர்தப்பாடு சமுத்திரக் கரையில் இடம்பெற்றபோது, அம்பாள் தீர்த்தமாட எழுந்தருளுவதையும் பக்தர்கள் தீர்த்தமாடுவதையும் காணலாம். (ச-40)

# பூர்வீக நிலத்தில் வாழவே சம்பூர் மக்கள் விருப்பம்

## காணிச் சட்டத்தை மீறுகிறது அரசு என்கிறார் திருமலை நகர சபை உறுப்பினர்

திருகோணமலை, மார்ச்18

சம்பூர் மக்கள் தமது பூர்வீக நிலங்களிலேயே வாழ விரும்புகின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சம்பூர் பிரதேசத்தின் காணி அபகரிப்பு மூலம் இலங்கையின் காணிச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன. காணி, நிலம் என்பது ஒவ்வொரு வரினதும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், வாழ்க்கைக்கு பாதுகாப்பு தருவதாகவும் உள்ளது.

தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலங்களில் பரம்பரை, பரம்பரையாக வாழ்வது அவர்களது பிறப்புரிமை ஆகும்.

1966 ஆம் ஆண்டு மனித உரிமை சமவாயம் அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. எந்த நபரொருவரது காணியையும் உரித்தாளியின் அனுமதியின்றிப் பறிக்க முடியாது என்று மனித உரிமை சமவாயம் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை இந்தச் சமவாயங்களின் கொள்கை, கோட்பாடு என்பவற்றை ஏற்றுக்கொண்ட நாடு.

அதனால் சம்பூர் மக்கள் தமது பூர்வீக நிலங்களில் மீளக்குடியேற அனுமதிப்பது இலங்கை அரசின் தார்மீக செயற்பாட்டின் வெளிப்பாடாக அமையும்.

சம்பூர் மக்கள் தமது தாய், தந்தையர் வாழ்ந்த பூர்வீக நிலங்களிலேயே வாழ விரும்புகிறார்கள்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு,மார்ச் 18

மட்டக்களப்பு, கொம்மாதுறையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இடம்பெற்றுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# யானைகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி அமைப்பு


திருகோணமலை, வேப்பங்குளம் பகுதியில் காட்டு யானைகளின் நடமாட்டத் தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அங்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவில் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டுள் ளது.

இந்தப் பாதுகாப்பு வேலிக் குரிய பெயர்ப்பலகையை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திரை நீக்கம் செய்து வைத்துள்ளார். (ச-40)



பாதுகாப்பு வேலிக்குரிய பெயர்ப்பலகையை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே திரை நீக்கம் செய்து வைத்தார்.


ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.05.1969

மறைவு 08.04.2012

அமரர் பொன்னுத்துரை அன்பழகன் (அன்பு G.S.)

திதி: அபரபக்கத்துதியை



பாச தீபம் ஒன்றணைந்து பறந்ததுவே ஈராண்டு
ஈராண்டு ஆனாலும் விழி நீரோ வற்றவில்லை
இதயக் கனம் இன்னும் எம்மை விட்டு இறங்கவில்லை
என்றும் உம் நினைவுப் பிரமையிலே தவிக்கின்றோம்
அன்பான புன் சிரிப்புத் தினம் தோன்றி மறைகிறதே
ஆசையுடன் எமை அணைத்து அக மகிழ வைப்பீரா
உம் நினைவே எம் நினைவு உயிர் உள்ளவரை ஐயா
உம் ஆத்மா சாந்திபெற நயினை அம்பாளை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பு மனைவி சித்திரா, ஆசைச் செல்வங்கள்
வராகி, லக்ஷி, பவன் குட்டி, ரஜிக்குட்டி
உன் உயிர் அம்மா, உடன்பிறந்தோர்,
மக்கள், மருமக்கள், மைத்துனி, மைத்துனர்மார்.

நயினாதீவு,
4 ஆம் வட்டாரம்.

(45824)(2.6)



தசாக கிருஹஜக்கு அழைப்பு





கடந்த 10.03.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்த
சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி ஐயா)
அருணோதயக் குருக்கள்
அவர்களின் ஆத்மசாந்தி நிகழ்வுகள் பின்வரும்
திகதிகளில் நடைபெறும்

19.03.2014 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தசாகம்
20.03.2014 வியாழக்கிழமை ஏகோதிஷ்டம் மாசிகம்
21.03.2014 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்
22.03.2014 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு
கிரஹஜக்கும், சமாராதனை நிகழ்வுகளிலும் தொடர்ந்து
இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

ச. லோகேஸ்வரி அம்மா (தாய்)

சிவன்கோயில், பெருங்காடு,
புங்குடுதீவு - 03.

(45801)(2.6)

## கடந்த ஆண்டில் மட்டும் 3,500 பேர் தற்கொலை

### பொலிஸ் தலைமையகம் தகவல்

கொழும்பு,மார்ச் 18
இலங்கையில் கடந்த ஆண்டில் சுமார் 3,500 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.
இவர்களில் 2,700 பேர் ஆண்கள். ஏனையோர் பெண்கள் என்று பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.
குடும்ப தகராறு, காதல் பிரச்சினை, மன அழுத்தம், தீராத நோய் போன்ற காரணங்களால் அதிகளவானவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். (ச)



கொழும்பு, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வருடாந்த தேர் திருவிழாவில் சுவாமி தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடைசூழ வீதி வலம் வருகின்றார். (ச)

## கைக்குண்டு வெடித்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,மார்ச் 18
குளியாப்பிட்டி, மெட்டிவெல கெதரை என்ற இடத்தில் கைக்குண்டொன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.



இந்தச் சம்பவத்தில் இரும்பு சேகரித்து விற்பனை செய்யும் வியாபாரி ஒருவரே உயிரிழந்துள்ளார்.
இரும்புகள் இடப்பட்ட உறையொன்றை பிரிக்க முற்பட்ட போதே கைக்குண்டு வெடித்துள்ளது என்று நாரம்மலை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## சூடு பிடித்துள்ளது தேர்தல் பரப்புரை


### அசம்பாவிதங்கள் எதுவும் இதுவரை இல்லை என்கிறார் பிரதிப் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு,மார்ச் 18
மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்னிட்டு தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்துள்ளன. வேட்பாளர்களும் கட்சி ஆதரவாளர்களும் அமைதியான . முறையில் நடந்து கொள்வதனால் அசம்பாவிதங்கள் எதுவும் இதுவரையில் பதிவாகவில்லை.
இவ்வாறு தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தல் கள நிலவரங்கள் சுமுகமாக இடம்பெற்று வருகின்றன. தேர்தலை முன்னிட்டு இரண்டு மாகாணங்களினதும் ஆறு மாவட்டங்களிலும் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.
மாகாண சபைத் தேர்தல் சட்ட விதிகளை மீறும் குற்றங்கள், வன்முறைகள் மற்றும் அசம்பாவிதங்கள் குறித்து பெரியமுறைப்பாடுகள் எதுவும் பதிவாகாதபோதிலும், சிறு சிறு சம்பவங்கள் தொடர்பிலேயே 90 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகளுக்காக 78 பேர் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர். 29 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன- என்றார். (ச)

## தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சும் எதிர்க்கட்சியினர்

### பஸில் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்18
நாட்டின் எதிர்க்கட்சியினர் தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சுகின்றனர் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.
கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
உலகின் ஏனைய நாடுகளில் எதிர்க்கட்சிகள் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றன. எனினும் இலங்கையில் எதிர்க்கட்சிகள் தேர்தலை விரும்பவில்லை. இலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகள் மிகவும் அதிசயமானவையாகும் என்று அவர் குறிப்பிட்டார்.




பஸில் ராஜபக்ஷ

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் தோல்வியடைந்த போது, நாங்கள் கவலையடைந்திருக்கின்றோம். எனினும், இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை பார்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே மகிழ்ச்சி அடைகின்றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.
ஐ.தே.கட்சியின் தலைவரை விரட்டியடிக்க வேண்டும் என்று அவர்கள் முயற்சிக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)




மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்
யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய
சிரேஷ்ட ஆசிரியை
திருமதி மனோன்மணி செல்வரத்தினம்
கல்விப் புலத்தில் 37 வருடங்கள் சேவையாற்றி
16.03.2014 அன்று ஓய்வுபெற்ற எமது பாடசாலையின்
சிரேஷ்ட ஆசிரியை அவர்களை
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவரது ஓய்வுக்காலம் நோய்நொடியின்றி
சிறப்பாக அமையவும் வாழ்வில் சிறந்து விளங்கவும்,
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அத்துடன் இவரது சேவையினைப் பாராட்டி
மணிவிழா நிகழ்வுகள் இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை
பாடசாலையில்நடைபெற உள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.
Congratulations
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள்,
நலன்விரும்பிகள்.
யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்.
(சி/12738)(7.6.)

Wishing Happy Birthday to You



on 18.03.2014
Mr.Ariyaratnam Vaikunthanathan
(Rtd Gvt. Officer)
All Ceylon Justice of Peace
Now Living at Karaveddy)
May God bless you.
Mr.A. Vaikunthanathan Susila &
our son's family
80/3, Sittampalam
Garden M.W.
awarded by:
Mr.Bosakulendran & Family
(Export & Import)
New Address
Uduvil East, Chunnakam.
(45685)(7.6.3)


## தூக்குத் தண்டனைக் கைதிகள் குறித்து ஆராய ஆணைக்குழு

### நியமித்தார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,மார்ச் 18
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்குவிசேட ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறுவியுள்ளார்.
இந்த ஆணைக்குழு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 480 பேர் தொடர்பில் ஆராயவுள்ளது.
இந்த ஆணைக்குழுவில் அமைச்சரவை செயலர்கள், சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரி, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மருத்துவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.
இந்தக் குழு தூக்குத் தண்டனை விதிக்கப்படும் முறைமை உட்பட ஏனைய பல காரணிகள் தொடர்பில் ஆராயவுள்ளது.



மஹிந்த ராஜபக்ஷ

தூக்குத் தண்டனைக் கைதிகள் அடிக்கடி சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறி, தண்டனை நிறைவேற்றப்படவேண்டும் அல்லது தாம் விடுதலை செய்யப்பட வேண்டும்என்று கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)


ST JOHN AMBULANCE BRIGADE SRI LANKA
சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆள்சேர்ப்பு
சென்ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். நாள் ஒன்றுக்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு 1200/= வழங்கப்படும். இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சென்.ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமூகம் தரவும்.
மேலதிக விபரங்களுக்கு:-
(45837)(6.2)
24 மணி நேர அம்புலன்ஸ் சேவைக்கான
இலக்கம்:- 021 321 4444
மாவட்ட ஆணையாளர், சென்ஜோன் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம்.

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எமது மாணவர் சமூகத்தை வழிப்படுத்துவதற்கு ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய வேளை

வடக்கில், யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில், மாணவர்களை மட்டுமன்றி ஏனையோரையும் அதிகம் கவர்ந்த ஒன்றாக கிரிக்கெட் (துடுப்பாட்டம்) விளங்கி வருகிறது.

அதிலும் குடாநாட்டில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி - யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான பொன் அணிகளின் போரும், (Battle of the Gold) யாழ்.மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி என்பவற்றுக்கு இடையே நடைபெறும் வடக்கின் பெரும் போரும் (Battle of the North) மாணவர்கள் முதல் வயதான மூத்தோர்கள் வரை நீண்ட பல ஆண்டுகளாகப் பிரசித்தி பெற்றவை.

அந்தந்தப் பாடசாலைகளின் மாணவர்கள், பழைய மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி, ஏனைய விளையாட்டு ரசிகர்களாலும் மிகுந்த ஆவலோடும், ஆர்வத்தோடும் கண்டு களிக்கப்பட்டவை.

ஆனால் "கண்ணூறு" பிடித்தது போன்று, இந்த வருடத்தில் இரண்டு கிரிக்கெட் போர்களும் சோபை இழந்துவிட்டன. இந்தப் போட்டிகளை இடைநடுவில் கைவிட வேண்டிய இக்கட்டு நிலை பாடசாலைகளுக்கு ஏற்பட்டது.

பொன் அணிகளின் கிரிக்கெட் போரின் போது, பழைய மாணவர்களான ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்ட கைகலப்பில் இளம் தந்தை ஒருவர் கொலையுண்டார்.

வடக்கின் பெரும் போரின் போது, நடுவர் வழங்கிய ஆட்டமிழப்பில் உண்டான சர்ச்சை காரணமாக மைதானத்தில் வைத்து நடுவர் தாக்கப்பட்டார்.

விளையாட்டுப் போட்டிகள், தாமே வெற்றி பெறவேண்டும் என்ற மனஓர்மத்தை மோதிக் கொள்ளும் இரண்டு அணிகளுக்கு இடையே உண்டாக்கினும், முடிவில் வெற்றி - தோல்வி ஆகிய இரண்டையும் ஒரே வகையில் பார்க்கும் பக்குவத்தைத் தருகிறது. விளையாட்டை வினையாக்கி உடல், உள பாதிப்புகளை முளை கொள்ள விடுவது உகந்ததல்ல; ஏற்புடையதும் அன்று.

விளையாட்டுப் போட்டிகளின் தாற்பரியத்தை மனதில் கொள்ளாது செயற்படும் போக்கு, அதுவும் ஆர்வலர் ஒருவர் அடித்துக் கொல்லப்படும் நிலைமை எழுந்தமை அல்லது தோற்றுவிக்கப்பட்டமை வெட்கத்துக்கு உரியது. யாழ்.விளையாட்டுத் துறைக்குக் கரிபூசுவதாகவும் அமைந்துள்ளமை கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

உணர்ச்சி வசப்படுவதும், கொலைவெறி கொள்வதும் வடக்கின் துடுப்பாட்ட மகிமையைக் கெடுத்துவிட்டது; கரிபூசி அழித்துவிட்டது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் கட்டி வைக்கப்பட்டுள்ள நாய்தான் அதிகம் கடிக்கும் என்று முதிய வர்கள் சொல்வார்கள். அதேபோன்று கடந்த காலங்களில் எமது இளைஞர்கள், யுவதிகள் கலாசார பாதுகாப்புக்காகக் கட்டிவைக்கப்பட்டிருந்தார்கள். அதனால் எமது பிரதே சத்தின் கலாசாரம் பாதுகாக்கப்பட்டது. உயரிய கலாசாரத்தைப் பின்பற்றி வரும் இனமாகத் தமிழினம் இருந்தது. நடு இரவில் ஒரு பெண் தனியாகப் பாதையில் செல்லக் கூடிய அளவுக்குப் பாதுகாப்பு இருந்தது. தவறு செய்தவர்களுக்கு கடும் தண்டனைகள் வழங்கப்பட்டு சட்டமும், ஒழுங்கும் குலையாமல் பேணப்பட்டன.

"குடாநாட்டு மக்களிடையே போதைப்பொருள் பழக் கம், வன்முறைகள் அதிகரித்துள்ளன. இது 2009 மே மாதத்துக்குப் பின்னர் என்பது குறித்துக் காட்டப்பட வேண்டும். யார், யார் வந்து இவற்றை அறிமுகப்படுத்தினர் என்று ஆராய்ந்துபார்க்க முடியவில்லை. ஏனெனில் சகலதும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன" - என்று வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். இந்தக் கலாசார சீரழிவுகளில் ஒன்றாகவே பாடசாலைகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி அமைந்துள்ளது.

முன்பிருந்த யாழ்ப்பாணம் மாறி, இப்போது திறந்த கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் கொண்ட புதிய யாழ்ப்பாணம் உருவாகி வருகிறது என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள். கிரிக்கெட் ஆட்டங்களில் வன்முறையில் ஈடுபடும் கலாசாரம் முன்னர் தென்னிலங்கையில்தான் இருந்தது. அது தற்பொழுது யாழ்ப்பாணத் துக்கும் வந்துவிட்டது. அதுவும் கொலைவிழும் அளவுக்கு சற்று வித்தியாசமான தோற்றத்துடன் ஒப்பேற்றப்பட்டுள்ளது.

தேசிய இனம் ஒன்றின் மக்களை, அந்த இனம் சார்ந்த சிந்தனைகளிலிருந்து முற்றுமுழுதுமாகத் திசைதிருப்பி, அவர்களை ஒருவித களியாட்ட மயக்கத்தில் வைத்திருக்கவேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே மேற்கண்ட சம்பவம் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்க முடியாது; இருக்கக் கூடாது.

இத்தகைய போக்கு, எமது இனத்தினை மற்றவர்கள் ஏறி மிதிப்பதற்கான வாய்ப்பை நல்கும். எனவே, இனிமேல் இத்தகைய சம்பவம் ஒன்றுதானும் தலைதூக்காமல் தடுப்பதில் முழுச் சமூகமும் ஒன்றிணைந்து செயலாற்ற மனம் கொள்ள வேண்டும்.

ஒவ்வாத ஒழுக்கமின்மைகளைத் துடைத்தெறியும் பிரதான கடமை உடைய பெரும் கல்லூரிகள் அதற்கு அத்திபாரம் இட வேண்டும், உதாரணமாக விளங்க வேண்டும். இன்றே செய்க அதனை நன்றே செய்க.

# சந்திரிகாவின் அரசியல் சதுரங்க முயற்சி வெற்றிபெறுமா?



சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீஎஸ்ரி.

இத்தனை காலமும் இல்லாமல், அதுவும் மேல் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், குறிப்பாக பண்டார நாயக்கா பரம்பரையின் முக்கிய ஆதரவுப் பிரதேசமான கம்பஹா மாவட்டத்திலும் தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்துள்ள இந்த வேளையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, திடீரென்று எதிர்க் கட்சித் தலைவர் ரணிலை எதற்காகச் சந்தித்துப் பேசியிருக்கிறார்?

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தமது முயற்சி குறித்தல்லவா சந்திரிகா, ரணிலைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். இவை, அண்மைய சந்திரிகா, ரணில் ஆகிய இருவருக்கும் இடையிலான சந்திப்புக் குறித்து பொது மக்கள் தரப்பில் வெளியிடப்பட்டு வரும் விமர்சனங்களில் ஒரு சிலவாகும்.

இதே போன்றுதான் 2007 ஆம் ஆண்டில் கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்து அதனை ரணிலிடம் கையளிக்க மங்கள சமரவீரவும் ஸ்ரீபதி சூரியாராச்சியும் எடுத்துச் சென்றனர். அதிலிருந்து தொடங்கி, 2008 ஆம் ஆண்டில் அரசைப் பதவியிலிருந்து அகற்றும் திட்டமொன்றை அந்த மூவரும் இணைந்து வகுத்துக் கொண்டனர்.

ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் இடையிலான அண்மைய சந்திப்பு அரசைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான திட்டத்தின் முன்னோடியா என்பது குறித்து தற்போது எதிர்வு கூற இயலாதுள்ளது. சந்திப்பின் பின்னர் அது குறித்துக் கருத்து வெளியிட்ட சந்திரிகா, உண்மையில் தாம் ரணிலுடன் அரசியல் தொடர்பாக எதுவும் பேச வில்லை எனக் கூறியதுடன் நிறுத்திக் கொள்ளாமல், இனங்களுக்கிடையில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

மத நல்லிணக்கம் என்ற விடயம் நாட்டின் இனங்கள் மத்தியில் சமூக, அரசியல் மற்றும் பண்பாடு என்பவற்றை ஒன்றிணைப்பதற்குப் பொருத்தமானதொரு தலைப்பாகும். இது தொடர்பாகத் தாம் ஏற்கெனவே மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாகவும் சந்திரிகா தெரிவித்திருந்தார். எதிர்காலத்தில் கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்து மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்களையும் சந்தித்து அவரால் கலந்துரையாட இயலும். அதே போன்று எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் மட்டுமன்றி, அரச தரப்பின் சுதந்திரக் கட்சி சார்பான அமைச்சர்களையும் சந்தித்துப் பேச இயலும். அது மட்டுமன்றி நீதித்துறை, வைத்தியத் துறை, உட்பட்ட பல துறைகளைச் சேர்ந்த புத்தி ஜீவிகளை மட்டுமன்றி ஊடகத்துறையினரையும் சந்தித்துக் கலந்துரையாட இயலும்.

மத நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பான தமது முயற்சிகள் குறித்து வாராவாரம் சந்திரிகா ஊடகங்களுக்குச் செய்திகளை வழங்குவதைக் கண்டு ஜனாதிபதி மஹிந்தவின் மூளை சூடேறுகிறது. சந்திரிகாவின் இத்தகைய சந்திப்புக்களை ஜனாதிபதி மஹிந்தவால் தடுத்து நிறுத்த இயலாதென்பது யதார்த்தம். மத நல்லிணக்கம் தொடர்பாகக் கலந்துரையாட சந்திரிகா சந்திப்பொன்றுக்காக கோரிக்கை விடுக்கும் போது, 1964இல் செய்த தில்லு முல்லுகளைப் போன்று மத நல்லிணக்கம் என்ற போர்வையில் அமைச்சர்களைத் தம் பக்கம் திருப்பிக் கொள்ள சந்திரிகா முயல்கிறாரா என்ற சந்தேகம் காரணமாகவே, சந்திப்புக்கான நேரத்தைக் குறித்தொதுக்கிக் கொடுக்காது மஹிந்த காலத்தை இழுத்தடிக்க எண்ணுகிறார் போலும்.

உண்மையில் மஹிந்த - சந்திரிகா சந்திப்பு இடம்பெற்றால், அது உத்தியோக பூர்வ சந்திப்பாக மதிப்புப் பெறும். அதன் பின்னர் சந்திரிகா அமைச்சர்களைச் சந்திக்க முயன்றால் அதனை மஹிந்தவால் தடுத்து நிறுத்த இயலாது. அவ்விதம் சந்திரிகாவுடன் எந்த அமைச்சர்கள் பேசப் போகிறார்கள் என்பதை மஹிந்த கழுகுப் பார்வையுடன் அவதானித்து வருகிறார். இதனால் தான், தாம் விரும்பினாலும் கூட, சந்திரிகாவைச் சந்திக்க அமைச்சர்களுக்குப் பேய்ப் பயம். ஆனால் மத நல்லிணக்கம் என்ற விடயத்தை வைத்துக் கொண்டு அவர்களால் சந்திரிகாவைச் சந்தித்துச் சாவகாசமாகக் கலந்துரையாட இயலும். மதகுருமார், வைத்தியர், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்ற பண்டாரநாயக்காவின் பஞ்சமகாசக்திகளை மட்டுமல்லாது, நாட்டின் பலதரப்பட்ட அதிகாரத் தரப்புகளையும் சந்தித்து சந்திரிகா முன்வைக்கும் யோசனைகள் நாட்டு மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறக் கூடும். சந்திரிகா ஐ.தே.கட்சி அரசின் 17 ஆண்டுகள் கால தொடர் நிர்வாகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து 20 ஆண்டுகள் கழிந்து போய் விட்டுள்ளன.

இந்த யோசனைகள் ஊடாகவே பொது வேட்பாளரொருவர் உருவாகக் கூடுமா என்பது குறித்து தற்போது எதுவும் கூற முடியாதுள்ளது. சந்திரிகா இத்தகைய செயற்பாட்டை இன்று நேற்றுதான் செய்ய முயல்கிறார் என்றில்லை.

1994 ஆம் ஆண்டில் இதே போன்ற மார்ச் மாதமொன்றில் தென்பகுதி மக்களிடம் சென்று, சந்திரிகா ஆதரவு அலையை உருவாக்கி வைத்து, 17 ஆண்டுகளின் பின்னர் சுதந்திரக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வைக்க சந்திரிகா பெரு முயற்சி மேற்கொண்டார். தென் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி கண்ட சந்திரிகா அவ்வாண்டின் ஜூலை பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி ஆட்சியை வீழ்த்தி நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற அரசியல் மாற்றம் இது. தம்மை விட்டுக் கை நழுவிப் போன ஆட்சி அதிகாரத்தை மீண்டும் 2001 ஆம் ஆண்டில் சந்திரிகாவால் கைப்பற்ற முடிந்த போதிலும், உண்மையில் 2004 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகப் பொதுத் தேர்தலை அறிவித்த சந்திரிகா அவ்வாண்டு இதே போன்றதொரு மார்ச் மாதத்தில் தமக்கு அதிகாரத்தை வழங்குமாறு கேட்டு மீண்டும் நாட்டு மக்கள் முன் சென்றார். உண்மையில் தமது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியையும் பறிகொடுத்து, மஹிந்தவை நாட்டின் ஜனாதிபதியாக ஆக்கப் போகும் அரசொன்றைத் தாம் நிறுவ நேருமென்று சந்திரிகா அந்த வேளையில் கனவில் கூட எண்ணியிருக்கமாட்டார்.

உண்மையில் 2004 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தைக் கலைக்காமல் சந்திரிகாவுக்கும் அப்போதைய பிரதமர் ரணிலுக்கும் இடையே நல்லிணக்கமொன்றை ஏற்படுத்தி தேசிய அரசொன்றை நிறுவும் முயற்சியாக சந்திரிகாவுக்கு நெருக்கமான மனோ தித்தவெலவுக்கும் ரணிலின் நம்பிக்கைக்கு உரிய மலிக் சமரவிக்ரமவுக்கும் இடையே பேச்சு வார்த்தையொன்று இடம்பெற்றது. அதற்கு இந்தியாவும், அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளும் ஆதரவு தெரிவித்தன. அந்த வேளையில் பிரதமராயிருந்த ரணிலின் அரசிலிருந்து பாதுகாப்பு, பொலிஸ்துறை மற்றும் ஊடகத்துறை என்ற மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி என்ற வகையில் சந்திரிகா தம்வசம் எடுத்துக் கொண்டிருந்தார்.

ஐ.தே.கட்சியுடன் ஒப்பந்தம் மேற்கொள்வதை தாம் விரும்புவதாகவும், தம்மால் ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட மூன்று அமைச்சுகளின் பொறுப்புக்களையும் உடனடியாக திருப்பி ஒப்படைக்க இயலாதெனவும், முதலில் பொலிஸ்துறை மற்றும் ஊடகத்துறை சார்ந்த அமைச்சுக்களைத் திருப்பி ஒப்படைப்பதாகவும், ரணிலுடன் இணைந்து சமாதான முயற்சிகள் குறித்து இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொண்டு அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சையும் திருப்பி ஒப்படைப்பதாகவும், ரணிலுக்குத் தெரிவிக்குமாறு அவ்வேளையில் சந்திரிகா மலிக் சமரவிக்கிரமவிடம் தெரிவித்திருந்தார். ஆனால் ரணிலோ முதலில் சந்திரிகா தமது தவறைத் திருத்திக் கொண்டாக வேண்டுமென முரண்டு பிடித்தார். பேச்சு வார்த்தை முடிவடையவிருந்த அந்தச் சந்தர்ப்பத்தில், மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோரும் ஜே.வி.பி.யினரும் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுமாறு சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர். கடைசியில் அவர்களது குரலுக்குச் செவிசாய்க்க வேண்டிய நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. அன்று சந்திரிகாவுக்கும் ரணிலுக்குமிடையே இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தால் இன்று மஹிந்த ராஜபக்ஷவால் இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடிந்திருக்காது. இந்த நாட்டின் பிரதமராகக் கூட பதவி வகிக்க வாய்ப்புக் கிட்டியிருந்திருக்காது. இன்றும் கூட அவர் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராகவே செயற்பட நேர்ந்திருக்கும்.

அன்று சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை எதிர்த்த மங்கள சமரவீர தரப்பினர் தமது அந்த வரலாற்றுத் தவறுக்காக பின்னர் மனம் வருந்தினர். அந்த வரலாற்றுத் தவறு காரணமாகவே ஜே.வி.பி. இரண்டாகப் பிளவுற நேர்ந்தது.

சரி, தற்போது மத நல்லிணக்கம் என்பதன் ஊடாக சந்திரிகா அந்த வரலாற்றுத் தவறை நேர் சீர் செய்து கொள்ளப் போகிறாரா என்பதை ஊகிப்பதற்கான காலம் இன்னமும் கனியவில்லை. சந்திரிகாவைச் சந்தித்த போது கட்சி என்ற ரீதியில் ஐ.தே.கட்சியால் இந்த நல்லிணக்க முயற்சியில் இணைந்துகொள்ள இயலாதுள்ளதாக ரணில் தெரிவித்து விட்டார். சந்திரிகா எதிர்பார்க்கின்றபோதிலும் ஐ.தே. கட்சியின் ஆதரவு அவருக்குக் கிட்டப் போவதில்லை என்பதையே ரணில் இவ்விதம் சொல்லாமல் சொல்லி வைத்திருக்கிறாரா என்பது குறித்து ரணில் மட்டுமே அறிவார்.

எது எப்படியாகிலும், 1994, 2004 ஆண்டுகள் போன்றே 2014 ஆம் ஆண்டும் சந்திரிகாவுக்கு அரசியலில் முக்கியத்துவம் மிக்கதொரு ஆண்டாக அமையக்கூடும்.

# தமிழருக்கான அரசியல் தீர்வு குறித்து விவாதிக்க களம் அல்ல ஐ.நா. மனித உரிமைகள் சபை

## பிரான்ஸ் தமிழர் மையத்தின் இணைப்பாளர் கிருபாகரன் கூறுகிறார்

*பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் இணைப்பாளர் ச.வி. கிருபாகரன் கடந்த 30 வருடங்களாக ஜெனிவாவில் ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் தந்து வருபவர். ஐ. நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் தொடர்ச்சியாகப் பங் கெடுத்துவரும் அவர் அந்த அமைப் பின் சகல அம்சங்களையும் அறிந்தவர். சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக அவர் உதயன் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி இது. செவ்வி கண்டவர் சண். தவராஜா*


***கேள்வி:*** ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 24 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கை தொடர்பான தீர்மான முன்மொழிவை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் தமிழ் மக்கள் மிகுந்த அதிருப்தியில் இருக்கிறார்கள். தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை வெளிப்படுத்தும் அம்சங்களை இந்த நகல் பிரேரணை கொண்டிருக்கவில்லை என அவர்கள் கவலை கொண்டுள்ளார்கள். இந்தப் பிரேரணை எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

***பதில்:*** முதலாவதாக இந்தப் பிரேரணையில் சர்வதேச சுயாதீன விசாரணை என்ற பதம் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் இந்த நகல் தீர்மானத்தை நாங்கள் நன்கு அலசி ஆராய்ந்தால், அங்கே சர்வதேச அழுத்தங்கள், சர்வதேச இடையூறுகள், சர்வதேச கண்காணிப்புகள் என்ற விடயங்கள் அடங்கியுள்ளன. இந்தத் தீர்மானத்தை அது வெளியான மார்ச் 3 ஆம் திகதி முதன் முதலாகப் பார்த்தவர்கள், இது தொடர்பிலான பிழையான, பயங்கரமான ஒரு விமர்சனத்தை முன்வைத்து விட்டார்கள். ஆனால், உண்மை என்னவெனில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று சர்வதேச விசாரணை என்ற பதம் இல்லை. ஆனால், ஆழமாகப் படித்தால் பிரேரணையின் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் பந்திகளில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் காரியாலயத்துக்கு மிகக் வலுமிக்க அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை விடயத்தில் அவர்கள் விசாரணைகளை மேற்பார்வை செய்யவேண்டும். அத்துடன் அவர்கள் சில விசாரணைகளை மேற்கொள்ளலாம். 27 ஆவது மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். 28 ஆவது கூட்டத் தொடரில் எழுத்து மூல அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, இங்கு நாம் ஒன்றை அவதானிக்க முடியும். முன்னைய தீர்மானத்தைவிட தற்போதைய தீர்மானம் கடுமையானது. இலங்கையின் கைகளில் இருந்து விசாரணை செய்யும் அதிகாரம் சர்வதேசத்தின் கைகளுக்குச் சென்றுள்ளது. எனினும் வாக்கெடுப்புக்கு விடப்படும் நாளில் என்ன மாற்றங்கள் நிகழும் என்பதைத் தற்போது கூறுவது கடினம். அது தொடர்பில் பல கலந்தாலோசனைகள் நடைபெறுவதால் நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

***கேள்வி:*** கடந்த வாரத்திலே இது தொடர்பாக அமெரிக்கா ஒரு பக்க நிகழ்வை நடத்தியதாக அறிகிறோம். எதிர்வரும் 18 ஆம் திகதி அது போன்றதொரு நிகழ்வு மீளவும் நடைபெற உள்ளதாகவும் அறிய முடிகின்றது. முன்னைய கூட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டிருந்தீர்கள். அதில் என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன? அதனுடைய போக்கு எவ்வாறு அமைந்துள்ளது.

***பதில்:*** கூட்டம் தொடங்கியதன் பின்னர் நடைபெற்ற இரண்டாவது கலந்தாலோசனை அது. 10 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கக் கூடிய சகல நாடுகளும் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் - தீர்மானத்தில் சர்வதேச சுதந்திர விசாரணை என்ற அம்சம் உள்ளடக்கப்பட வேண்டும் என விவாதித்தன. அமெரிக்கா அதனைச் செவிமடுத்த வண்ணம் இருந்தது. அதேவேளை, கியூபா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், தாய்லாந்து போன்ற நாடுகள் சர்வதேச விசாரணை என்ற விடயத்தைப் பற்றிக் கதைக்காமல் வேறு வேறு விடயங்கள் பற்றிக் கதைத்தார்கள். மேலும் அவர்கள் மனித உரிமை ஆணையாளருக்கு விசாரணை செய்வதற்கு எந்த வித அதிகாரமும் இல்லை. அதற்கான நிதிவளம் இல்லை எனக் கூறினார்கள். ஆனால், இதற்கு சுவிஸ் நாடு சிறந்ததொரு பதிலை வழங்கியது. ஆணையாளருக்கு அதற்கான உரிமை உள்ளது. உரிமை இல்லையென்றால் நிதிவளத்தைப் பற்றிக் கதைப்பதில் அர்த்தமில்லை என அந்த நாட்டின் பிரதிநிதி கூறினார்.



அதற்கு அமெரிக்கப் பதில் பிரதிநிதி பதிலளிக்கையில்; தற்போது கதைக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக எதிர்வரும் 18 ஆம் திகதி நடத்தப்படும் ஆலோசனைக் கூட்டத்தில் புதிய பிரேரணை கொண்டு வரப்படும் எனத் தெரிவித்தார். ஆகவே மீண்டும் கலந்தாலோசனைக்கு இடமுள்ளது.

மேலும் சர்வதேச விசாரணை என்ற விடயம் உள்ளடக்கப்படுவதற்கான வாய்ப்பே அதிகம் உள்ளது. எதற்கும் நாம் 18 ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டும்.

***கேள்வி:*** 28 ஆம் திகதி நடைபெறும் வாக்கெடுப்பில் தீர்மானம் வெற்றி பெறும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

***பதில்:*** உண்மையில் அமெரிக்கத் தீர்மானம் - சர்வதேச விசாரணை உள்ளடங்கலாக - வெற்றி பெறுவதில் போட்டிகள் அதிகமாக உள்ளன. ஆனால், தற்போதுள்ள நிலையில் மாற்றங்கள் எதுவுமின்றி வாக்களிப்புக்குச் சென்றால் நிச்சயம் நிறைவேறும். இதனால்தான் அமெரிக்கா சற்றுத் தயங்குகின்றது.

வாக்களிப்பு 28 ஆம் திகதியாக இருக்க முடியாது. ஏனெனில், அன்றைய நாள் கூட்டத்தொடரின் இறுதிநாளாக இருக்கிறது. 26 ஆம் திகதி ஆணையாளரின் அறிக்கை வெளியாகுகிறது. 26 மாலை அல்லது 27 ஆம் திகதி இந்த வாக்கெடுப்பு நடைபெறலாம் என எதிர்பார்க்கிறேன்.

அமெரிக்கா தயங்குவதற்கான முக்கிய காரணம், அந்த நாடு இலங்கையிடம் தோல்வியடைய விரும்பவில்லை. சர்வதேச விசாரணை என்ற விடயத்தை முன்வைப்பதன் மூலம் அது தோல்வியைத் தழுவுமானால் அது பல பிரச்சினைகளைக் கொண்டுவரும். நாட்டிலுள்ள மக்களுக்குப் பிரச்சினை, சர்வதேசத்துக்குப் பிரச்சினை, அதேவேளை அமெரிக்காவுக்கும் பிரச்சினை ஏற்படும். ஆகையால் சர்வதேச விசாரணை என்ற அம்சத்தை உள்ளடக்கும்போது கடும் போட்டிகள் இருக்கும். ஆனால், அமெரிக்காவைப் பொறுத்தவரை வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருந்தால்தான் பிரேரணையை முன்வைக்கும். இல்லையென்று தற்போதுள்ள பிரேரணை மாற்றமின்றி முன்வைக்கப்பட்டால் அது நிச்சயம் வெற்றிபெற்றே தீரும்.

***கேள்வி:*** இந்த நகல் வரைவு தொடர்பில் தமிழ் மக்கள் விசனம் கொண்டுள்ளமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று சர்வதேச விசாரணைப் பொறிமுறை அதில் அடக்கப்படவில்லை என்பது. இரண்டாவது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது.

ஐ.நா. மன்றத்திலே அதுவும் மனித உரிமைகள் சபையிலே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான விடயம் முன்வைக்கப்படக் கூடிய வாய்ப்பு உள்ளதா? இது போன்று முன்னர் எப்போதாவது நடைபெற்றிருக்கிறதா?

***பதில்:*** நிச்சயமாக இல்லை. நீங்கள் முன்னர் இங்கே பரப்புரையில் ஈடுபட்டவர் என்ற வகையில் மனித உரிமைச் சபையின் அதிகாரம் என்ன என்பதை அறிவீர்கள். மனித உரிமை ஆணைக்குழுவாக இருந்து 2006 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் சபையாக மாறியதில் இருந்து சுயநிர்ணய உரிமை பற்றிய முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது. சுய நிர்ணய உரிமையைப் பற்றி இந்தத் தீர்மானத்தில் இடம்பெறும் என இன்றைக்கோ, நாளைக்கோ, எதிர்காலத்திலோ கூட எதிர்பார்க்க முடியாது. காரணம் அந்த வேலை இங்கு நடைபெற முடியாது. பாதுகாப்புச் சபை அல்லது பொதுச்சபைக்கே அதற்காக நாம் செல்ல வேண்டும். மனித உரிமைகள் சபைக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. ஒரு நிலைமைக்கு மேலே அவர்கள் செல்ல முடியாது. ஆகவே, அரசியல் தீர்மானம் இங்கே இடம்பெற வேண்டும் என எதிர்பார்ப்பது தவறாகும்.

> மனித உரிமைகள் சபைக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. ஒரு நிலைமைக்கு மேலே அவர்கள் செல்ல முடியாது. ஆகவே, அரசியல் தீர்மானம் இங்கே இடம்பெற வேண்டும் என எதிர்பார்ப்பது தவறாகும்.

## தவக்காலச் சிந்தனை

### பிறர் உறவே இறை விருப்பு

எம்மில் பலர் குடும்பத்திலும் அயலவர் மட்டிலும் பகைமை குரோதங்கள், ஒப்புரவின்மை என்பவற்றை வைத்துக் கொண்டு வழிபாடுகள், காணிக்கைகள் நேர்த்திகள் போன்றவற்றை நிறைவேற்றுகின்றோம். இறைவனை மட்டும் அன்பு செய்யும் வெளியரங்க செயற்பாடுகள் ஏற்புடையதாகுமா? எமது சகோதரர், அடுத்திருப்போர் அன்புக்குரியவர்கள் இல்லையா?

தூய உள்ளத்தோடு மேற்கொள்ளும் வேண்டுதல்களை இறைவன் புறந்தள்ள மாட்டார். மனத்தூய்மைக்கு ஒப்புரவு, அன்பு அவசியமாகிறது. அன்பு உயிரோட்டம் உள்ளதாக வேண்டுமெனில், உறவுகளைச் சீர்செய்ய வேண்டும். அதற்கு மன்னிப்பு என்னும் மாமருந்து அவசியமாகிறது. மன்னித்தல் சிரமமாயிருந்தாலும், அது இன்றி அன்பு வெளிப்படாது. தீயவரே தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு மனம்மாறி என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி. (எசே 18:21-22)

தீமைபுரிவோரை, அநீதியானவரை, மன்னிப்பு அற்றோரைச் சாகடிக்கவன்று அவர்கள் மனம்மாறவே இறைமகன் இயேசு தன்னுயிரைக் கொடுத்தார். அதற்கு பிரதியுபகாரமாக பிறரை மன்னித்து அன்பை வளர்ப்போம். உறவைப் புதுப்பித்துக் கொள்ளும்போது பகைமை பனிபோல உருகிவிடும். அந்த அன்புதான் இறைவனுக்கும் மனிதனுக்கும் ஏற்புடையதாக அமையும்.

*எஸ். யேசுதாஸ்,*
*கொழும்புத்துறை*

## வாசகர் திருமுகம்

### அனலைதீவு பயணிகள் படகுகளின் நிலைமையும் பயணிகளின் மனவேதனைகளும்


அனலைதீவில் நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாமல் காணப்படும் படகுச் சேவை தொடர்பாக சகல அதிகாரிகளிடமும் தெரிவிக்கப்பட்டும் இதுவரையில் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

பயணிகள் படகானது உரிய நேரத்தில் பயணிப்பதில்லை. இதனால் கல்விக்காகவும், கடமைக்காகவும் செல்பவர்கள் வாகனங்களைத் தவறவிடுகின்ற சூழ்நிலை உருவாகின்றது.

மேலும் பெரும்பாலான படகுகளில் இறங்கிச் செல்வதற்கான பலகைப் படிக்கட்டுக்கள் இல்லை. இதனால் சேலைகளுடன் வெளியிடங்களில் இருந்து வரும் ஆசிரியைகளும், பெண் உத்தியோகத்தர்களும் இடர்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் படகு ஊழியர்கள் பயணிகளிடம் அவதூறான வார்த்தைகளைப் பிரயோகிப்பதும், மாலை வேளைகளில் மது போதையில் படகைச் செலுத்துவதும் வழக்கமாகிவிட்டது. பயணிகளைப் பாதுகாப்பு கவசம் அணியும்படி கூறுவார்கள். ஆனால் கவசத்தில் இருந்து வரும் ஒருவகை துர்நாற்றம் பெரும் உபாதையை ஏற்படுத்துகின்றது. பெரும்பாலான கவசங்கள் அழுக்குகளுடன் காணப்படுகின்றன. இவைகளைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பார்வையிடுவதும் இல்லை. இவர்கள் அனலைதீவில் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

படகினுள் அமர்வதற்கான இடங்கள் அனைத்தும் மணல்களால் சூழப்பட்டு இருக்கும். இதில் உரிமையாளர்கள் கவனம் செலுத்துவதில்லை. புகைபோக்கியானது சீரின்மையால் குழந்தைகளுக்கு மூச்சு திணறல்களும் ஏற்படுகின்றது. இயந்திரத்துக்கும் பாதுகாப்புப் பலகைகள் இடுவதில்லை. படகுகளினால் வருமானம் குறைவு எனக்கூறி ஒவ்வொரு பயணிகளிடம் இருந்தும் அனுமதிக்கப்பட்ட பணத்தைவிட மேலதிக பணத்தை அறவிடுகின்றனர். படகு புறப்பட்டதும் தூண்டில் போட்டு மீன்களைப் பிடிப்பதும் பயணிகள் மேல் போடுவதும் இடைக்கிடையில் இயந்திரத்தை நிறுத்துவதும் வழக்கமான நிகழ்வுகளாக மாறியுள் ளன. இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு உரியவர்கள் முன்வருவார்களா?

***அனலை வாழ் மக்கள்.***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.



**இடபம்**: நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.



**மிதுனம்**: இளவயது நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.



**கடகம்**: சவால்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் முதிர்ச்சி தெரியும். சொத்துப் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.



**சிங்கம்**: அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உறவினர்களால் நன்மை உண்டு. உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.



**கன்னி**: புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். சாதாரணமாக பேசுவதைக்கூட சிலர் குதர்க்கமாக புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம்.



**துலாம்**: வேலைச்சுமையால் சோர்வாகக் காணப்படுவீர்கள். எவருக்கும் பணம், நகை வாங்கிக் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.



**விருச்சிகம்**: பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.



**தனுசு**: நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புக்களை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை முடிப்பீர்கள்.



**மகரம்**: நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். நீண்ட நாள்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**கும்பம்**: சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**மீனம்**: தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் உருவாகலாம்.

## நாளை

**பங்குனி-05 புதன்கிழமை | 19.03.2014**

திதி: திருதியை மு.இ.11.57 வரை
நட்சத்திரம்: சித்திரை
பி.ப.04.01 வரை

சுபநேரம்: 04.48-06.18 வரை
இராகுகாலம்:.12.18-01.48 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




## அன்னை வழிபாடு

இன்பமும் துன்பமும் எமது புலனுணர்வில், ஒரு போதும் அகற்ற முடியாமல் இணைந்துள்ள இரு அம்சங்கள். எவை எமக்குத் துன்பம் தருகின்றனவோ, அவை நமக்கு இன்பமும் தரும். நம்முடைய உலகம் இந்த இரண்டும் கொண்டது. இவற்றை அகற்ற முடியாது. நம்முடைய ஒவ்வொரு மூச்சிலும் இவை இருக்கின்றன. ஒன்றுக்கொன்று நேர் முரணான இந்த இரண்டுக்கும் ஒரு சமரச நிலை காண உலகம் ஓயாது முயன்று கொண்டிருக்கிறது. நேர் முரணான இந்த இரண்டும் ஒன்றாகக் கலந்துள்ளதற்கு விளக்கம் காண ஞானிகள் முயன்று கொண் டிருக்கிறார்கள். கொழுந்து விட்டு எரியும் தீ போன்ற துயருக்கிடையே அவ்வப்போது சிறிய இன்பம் கிடைக்கிறது. இருளை விலக்கி ஒளி அளிக்கும் இந்த மின் வெட்டுக்கள் (இன்பங்கள்) அந்த இருளை (துன்பத்தை) மேலும் அதிகரிக்கவே செய்கின்றன. பிறப்பிலிருந்தே குழந்தைகள் எதிர்கால நம்பிக்கையுள்ளவைகளாக இருக்கின்றன. ஆனால் எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு ஒரே ஏமாற்றமாகவே இருக்கிறது. ஒரு லட்சி யத்தைக் கூடப் பூரணமாக அவர்கள் அடைய முடிவதில்லை. ஒரு தாகத்தைக்கூடப் பூரணமாகத் தீர்த்துக் கொள்ள முடிவதில்லை. இந்தப் புதிரைப் போக்கும் முயற்சியில் தொடர்ந்து அவர்கள் ஈடுபடுகிறார்கள். இந்தப் பொறுப்பை மதம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பாரசீகர்களிடையே பரவியிருந்த துவைத அம்சமுள்ள மதங்களில் கடவுளும் சாத்தானும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. யூதர்களின் மூலமாக இந்தக் கருத்து ஐரோப்பா, அமெரிக்கா முழுவதும் பரவியிருக்கிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இதை அடிப்படையாக வைத்தே மற்றக் கருத்துகள் எழுப்பப்பட்டன. ஆனால் இப்போது இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்பதை நாம் அறிவோம். முழுக்க முழுக்க நல்லது எதுவுமில்லை. அதே போல் முழுமையாகக் கெட்டதும் ஏதுமில்லை.ஒருவருக்கு நல்லதாக இருப்பது மற்றொருவருக்குக் கெட்டதாக இருக்கிறது. இன்று கெட்டதாக இருப்பது நாளை நல்லதாகஇருக்கும். அதே போன்று இன்று நல்லதாக இருப்பது நாளை கெட்டதாகிவிடும்.

# சூரியனை விட 1300 மடங்கு பெரிய மஞ்சள் நட்சத்திரம்




சூரியனை விட மிகப்பெரிய, 1300 மடங்கு பெரிய மஞ்சள் நிற நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிலியின் அடகாமா என்ற இடத்தில் மிகப்பெரிய டெலஸ்கோப் உள்ளது. இதன்மூலம் விண்வெளியில் உள்ள கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் சூரியனை விட 1300 மடங்கு மிகப்பெரிய மஞ்சள்நிற நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரான்ஸிலுள்ள நைஸ் என்ற இடத்தில் உள்ள வானிலை ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த ஒலிவர் செகி னியூ தலைமையிலான குழு வினர் ஆய்வு மேற்கொண்ட னர். அதில், இந்த நட்சத்திரம் பூமியில் இருந்து 12 ஆயிரம் ஒளி மைல்கள் தூரத்தில் உள்ளது என்றும், சூரிய குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் தெரிவித்துள்ளனர்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நட்சத்திரங்களில், 10 ஆவது மிகப்பெரிய நட்சத்திரம் இதுவாகும். இதற்கு H.R.5171d A என்று பெயரிட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 6 | | | 1 | | 8 |
| 6 | | | | 3 | 5 | | | |
| 7 | | | | | 9 | | | 6 |
| 2 | 7 | 4 | 3 | | 1 | | | |
| 8 | | | | 5 | | | | 4 |
| | | | 2 | | 8 | 7 | 1 | 3 |
| 5 | | | 1 | | | | | 2 |
| | | | 9 | 7 | | | | 1 |
| 1 | | 6 | | | 4 | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 8 | 7 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 4 | 5 | 8 | 1 | 3 | 7 | 9 | 6 |
| 7 | 6 | 3 | 4 | 5 | 9 | 8 | 1 | 2 |
| 4 | 3 | 6 | 9 | 7 | 5 | 2 | 8 | 1 |
| 8 | 9 | 7 | 1 | 4 | 2 | 6 | 5 | 3 |
| 1 | 5 | 2 | 3 | 6 | 8 | 4 | 7 | 9 |
| 6 | 2 | 4 | 5 | 8 | 1 | 9 | 3 | 7 |
| 5 | 7 | 9 | 6 | 3 | 4 | 1 | 2 | 8 |
| 3 | 8 | 1 | 2 | 9 | 7 | 5 | 6 | 4 |

# ஏஷியன் பெயின்ட்ஸின் பண்டிகைக்கால பரிசுகள்



எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தமது வீடுகளை மெருகூட்டி வர்ணம் தீட்டி அலங்கரிக்கும் பணிகளை மக்கள் தொடங்கும் காலப்பகுதி இதுவாகும். இந்தக் காலப்பகுதியில் ஏஷியன் பெயின்ட்ஸின் வர்ணப் பூச்சுக்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு பத்து லீற்றர் அல்லது அதற்கும் அதிகமாகக் கொள்வனவு செய்யும் பட்சத்தில் கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்கப்போவதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. மார்ச் முதலாம் திகதி முதல் இந்த ஊக்குவிப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கையிருப்புக்கள் முடிவடையும் வரை இந்தத் திட்டம் நீடிக்கும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

ஏபெக்ஸ் அல்டிமா, ஏபெக்ஸ் ஸ்ட்ரெச், ஏபெக்ஸ் அல்லது றோயால், கிளஸிக் பெயின்ட் வகைகள், ஏ.சி.ஈ அல்லது பிரீமியம் இமல்ஷன் பிரில்லியன்ட் வைட், என்பன வற்றைக் கொண்ட பத்து லீட்டர் வாளியைக் கொள்வனவு செய்கின்ற போது ஏஷியன் பெயின்ட்ஸின் முத்திரை பதிக்கப்பட்ட குடை ஒன்றை வாடிக்கையாளர் பரிசாகப் பெற்றுக் கொள்ளமுடியும். இதே பொருள்களை 20 லீற்றர் வாளியாக கொள்வனவு செய்கின்ற போது பயணப்பை ஒன்று பரிசாகக் கிடைக்கும். மேற்குறிப்பிட்ட பொருள்களில் ஏதாவது ஒன்றைக் குறிப்பிட்ட அளவு கொள்வனவு செய்கின்ற போது மட்டுமே வாடிக்கையாளர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படும். பலவகை பொருள்கள் சேர்ந்து இந்த அளவு வாங்கப்படும் போது அது பரிசுக்கு உரியதாகக் கருதப்படாது.

ஏஷியன் பெயின்ட்ஸ் நிறுவனத்தால் கடல் கடந்து பொறுப்பேற்கப்பட்ட முதலாவது நிறுவனம் ஏஷியன் பெயின்ட்ஸ் லங்கா நிறுவனமாகும். இது 22 நாடுகளில் சர்வதேச செயற்பாட்டைக் கொண்டுள்ள இந்தியாவின் கீர்த்திமிக்கபல் தேசிய நிறுவனமாகும். ஏஷியன் பெயின்ட்ஸ் றோயால், கிளஸிக், பிரீமியம் இன்டீரியர் இமல்ஷன், றோயால் பிளே, றோயால் பிளேமெடலிக்ஸ், றோயால் பிளேடெக்ஸ் டைல் விஷேட வர்ணப் பூச்சுக்கள், ஏபெக்ஸ் அல்டிமாவெதர் புறூப் எக்ஸ்டீரியர் இமல்ஷன், ஏ.சி.ஈ எக்ஸ்டீரியர் இமல்ஷன், டெகோரா இக்கனமி இமல்ஷன் மற்றும் இனாமல்கள், வார்னிஷ், வுட் பினிஷஸ், தின்னர்கள், இன்டஸ்ட்ரியல் பெயின்ட்ஸ், கிளியர்லெக்கர், புஊண கோட்வோல் புடி, ஏ.பி ஸ்கிம் கோட்மற்றும் எக்ஸ்டீரியர் பில்லர் ஆகியனவற்றை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. (த)

# இந்த மாதம் சுசூக்கி வாகனம் வாங்கும் சகல பெண்களுக்கும் பெறுமதிமிக்க பரிசு

மார்ச 8ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினம் இலங்கைவாழ் பெண்களுக்கும் முக்கியமானதாகும். இலங்கையிலுள்ள நாம், எமது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் பெண்கள் வகிக்கும் முக்கிய பங்கினை உணர்ந் துள்ளதால், அவர்களின் கல்வி நிலையை மேம்படுத்து வதிலும் தொழில் ரீதியாக அவர்களுக்கு வலுவூட்டுவ திலும் விசேட கவனம் செலுத்துகின்றோம்.

மோட்டார் வாகன வியாபாரத் துறையில் முன்னணி வகிக்கும் அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் பிறைவேட் லிமிட்டட் 2014ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, ஓர் அருமையான சலுகையை இந்த நாட்டுப் பெண்களுக்கு வழங் குகின்றது.

மார்ச் 8ஆம் திகதிக்கும் 31ஆம் திகதிக்கும் இடையே சுசூக்கி காட்சியறையொன்றில் அல்லது நாடெங்கு முள்ள விற்பனை முகவர் நிலையமொன்றில்

சுசூக்கி வாகனம் ஒன்றை வாங்கும் சகல பெண்களும் ரூ.15,000 பெறுமதியான அன்பளிப்பு வவுச்சரைப் பெறுவார்கள். பெண்களினால் செலுத்தப்படுவதற்காக இந்த நாட்டில் பெருந்தொகையான சுசூக்கி வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. எரிபொருள் சிக்கனம், உதிரிப் பாகங்களை இலகுவாகப் பெறும் வசதி, நிறுவனம் வழங்கும் உன்னதமான பராமரிப்புச் சேவை ஆகிய வற்றுடன் நியாயமான விலைகளில் பெறக்கூடிய சிறிய வாகனம் என்பதால் பெண்கள் சுசூக்கி வாகனத்தை விரும்பி நாடுகின்றனர்.

சகல சுசூக்கி வாகனங்களும் இலங்கையின் வீ, நிகளுக்கும் காலநிலைக்கும் மிகப் பொருத்தமான முறையில் உற் பத்தி செய்யப்படுகின்றன. சென்.எஸ்ரிலோ மற்றும் அல்ரோ முதல் சுவிப்ற் மற்றும் விற்ராறா வரை சகல வாகனங்களும் ஒப்பீட்டளவில் சிறியவை என்பதால் வாகன நெரிசலான வீதிகளிலும் செலுத்துவதற்கு இலகுவானவை. அவற்றை நிப்பாட்டி வைப்பதற்கும் அதிக இடவசதி தேவைப்படாது.

சிறிய கார்களின் விற்பனையில் சசூக்கி அல்ரோ அண் மையில் உலகளாவிய முதலிடத்தைப் பெற்றது. இத னைத் தொடர்ந்து அல்ரோ மற்றும் அது போன்ற சுசூக்கி வாகனங்களுக்கான கிராக்கி அதிகரித்துள்ளது. (த)

# இரண்டு தேசியத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் கொமர்ஷல் வங்கி



மதர் ஸ்ரீலங்கா அமைப்பு நடத்திய புறொஜெக்ற் ரண் நிகழ்வில் பங்கேற்ற பாடசாலைகளுக்கு பக்ஸ் வசதிகளுடன் கூடிய 134 பல்நோக்கு லேஸர் அச்சு இயந்திரங்களைக் கொமர்ஷல் வங்கி அன்பளிப்புச் செய்துள்ளது. இது இலங்கையின் கல்வித்துறைக்கு கொமர்ஷல் வங்கி வழங்கியுள்ள மற்றொரு அன்பளிப்பாகும்.

கல்வி அமைச்சினால் தேசியப் பாடசாலைகள் வேலைத்திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பாடசாலைகளுள் வெற்றியீட்டிய பாடசாலைகள் மற்றும், மதர் ஸ்ரீலங்கா கழகங்கள் செயற்படும் 950 பாடசாலைகளுக்கும் இடையிலேயே இவை பகிர்ந்து அளிக்கப்பட்டன. சுகததாஸ விளையாட்டு அரங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதியாகக் கலந்து கொண்ட புறொஜெக்ற் ரண் விழாவில் வைத்து இந்த பரிசுகள் வழங்கப்பட்டன.

புறொஜெக்ற் ரண் என்பது அது ஊக்குவிக்கும் மூன்று அம்சங்களில் இருந்து இந்த பெயரைப் பெறுகின்றது. பொறுப்பான குடியுரிமை, ஐக்கியம், தேசிய பெறுமை என்பனவே அவையாகும். இந்த உன்னதமான எண்ணக்கருவின் கீழ் பாடசாலைப் பிள்ளைகள் தமது சொந்த முயற்சிகளை வெளிக் கொண்டு வந்து குழுக்களை உருவாக்க வேண்டும். அதற்கு அவர்கள் தலைவர்களை நியமித்து தமது திட்டங்களுக்கான நிதியையும் திரட்ட வேண்டும். மதர் ஸ்ரீலங்கா அமைப்பு இதற்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும். புறொஜெக்ற் ரண் திட்டத்துக்கு தனது பங்களிப்பை வழங்குவதற்கு அப்பால் கொமர்ஷல் வங்கி கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதிய மானது கம்பியூட்டர்கள், அவற்றுக்கான மென் பொருள்கள் மற்றும் இணையத் தொடர்புகளுடன் கூடிய மொழி ஆய்வு கூடங்கள் மூன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளது. ஆங்கிலம் பேசும் பாடசாலைத் திட்டமான ரி.ஈ.எஸ்.எஸ் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று பாடசாலைகளுக்கே இவை அன்பளிப்புச் செய்யப்பட்டுள் ளன. ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது. ஜனா திபதி வேலைத் திட்டப் பிரிவின் கீழ் வாழ்வியல் ஆற்றலாக ஆங்கிலத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் கல்வி அமைச்சு இதனை அமுல் செய்து வருகின்றது. 2014 மார்ச் 4ஆம் திகதி இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி, மொரட் டுவை பிரின்ஸஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மற்றும் பிட்டிபன மகிந்த ராஜபக் ஷ கல்லூரி என்பனவே இந்த சகல வசதிகளுடனும் கூடிய மொழி ஆய்வு கூடங்களைப் பெற் றுக் கொண்டன. கம்பியூட்டர் வசதிகள் கொண்ட தகவல் தொழில்நுட்ப அல்லது மொழி ஆய்வு கூடங்களைக் கொண்ட பாடசாலை கள் மற்றும் போதிய அளவு ஆங்கில ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகளே இந்த ரி.ஈ.எஸ்.எஸ் திட்டத்தில் இணையும் தகுதி கொண்ட பாடசாலைகளாகக் கருதப்படும். இலங்கை தனக்குரிய தொழில் நுட்ப நிபுணத்துவத்தை முறையான தகவல் தொழில்நுட்ப மென்பொருள் வளங்களுடன் ஒன்று திரட்டி தமது பாடவிதானத்துடன் இசைவுடைய தமக்குத் தேவையான பாடங்களையும் கற்கைக் குறிப்புக்களையும் ஆங்கில ஆசிரியர்கள் தரவிறக்கம் செய்து கொள்ள வழியமைப்பதே ரி.ஈ.எஸ்.எஸ் வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். (த)

# வீவாவின் வெகுமதித் திட்டம்







புதுவருட பருவ காலத்தில் தனது வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளை. வெற்றி கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகளவில் வழங்கி மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வகையில், வீவா பத்தும் வாசி எனும் நுகர்வோர் ஊக்குவிப்புத் திட்டத்தை வீவா அறிமுகம் செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக வீவா மோல்ட் சேர்க்கப்பட் ஆகார பான ஊக்குவிப்புத் திட்ட பக்கட்டினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் இருவரில் ஒருவருக்கு 100 கே-35 டயலொக் ஸ்மார்ட் போன்கள் மற்றும் 7 மில்லியன் ரூபா பெறுமதியான ரீலோட்களையும் வெற்றி கொள்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜிஎஸ்கே நிறுவனத்தின் போஷாக்கு பிரிவு முகாமையாளர் தர்ஷன ஜயசிங்க கருத்து தெரிவிக்கையில், வீவா பத்தும் வாசி திட்டத்தின் ஊடாக வீவா பக்கட்களை கொள்வனவு செய்யும் இரண்டில் ஒரு வாடிக்கை யாளருக்கு அன்பளிப்பொன்றை வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. ஏனைய ஊக்குவிப்புத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில், இந்தத் திட்டத்தின் ஊடாக வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு அதிகளவில் காணப்படுகிறது என்றார். இந்தத் திட்டத்தின் ஊடாக அனுகூலங்களைப் பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் வீவா பத்தும் வாசி என விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள 400g பைக்கற் ஒன்றை கொள்வனவு செய்து, அதனுள் காணப்படும் சுரண்டும் அட்டையிலிருந்து தமக்குரிய அன்பளிப்புப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். 50 வீதத்துக்கும் மேற்பட்ட சுரண்டும் அட்டைகள் அன்பளிப்பைக் கொண்டதாக அமைந்திருக்கும். அது ஒரு ஸ்மார்ட் போனாக இருக்கலாம் அல்லது ரீலோட்டாக இருக்கலாம்.

வீவா வர்த்தக நாமத்தின் முகாமையாளர் மொஹான் கமகே கருத்துத் தெரிவிக்கையில், புதுவருட காலப்பகுதி என்பது அனைவருக்கும் அதிகளவு வேலைப்பளு நிறைந்த காலமாக அமைந்திருக்கும் என நாம் நம்புகிறோம். இந்தக் காலப்பகுதியில், உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் இணைப்பை ஏற்படுத்துவதற்கு உங்களுக்கு சிறியளவு உதவி தேவைப்படலாம்.

நாம் அவர்களிடம், வீவா போஷாக்கு பானம் ஊடாகச் சென்று, இந்தப் புத்தாண்டுக் காலத்தில் மகிழ்ச்சியை மேம்படுத்த எண்ணியுள்ளோம். எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கும் சிறந்த அன்பளிப்பாக இது அமைந்துள்ளது. சமூகத்துக்கு நாம் மீள வழங்கும் முறையாக இது அமைந்துள்ளது. இதன் மூலம் இந்தப் புத்தாண்டு காலப்பகுதியில் அவர் கள் அதிகளவு செயலாற்றி, அதிகளவு எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றார். (த)

# மாங்குளத்தில் நிரூபனின் எலும்புக்கூடு; நம்பத் தகுந்த விசாரணை வேண்டும்


## நாட்டில் சட்ட ஒழுங்கு உள்ளதா என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், மார்ச் 18
கடந்த செப்ரெம்பர் மாதம் காணாமற் போய், கடந்த புதன்கிழமை எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள்ள ஆசிரியர் கார்த்திகேசு நிரூபனின் உயிரிழப்புக் குறித்து நம்பத் தகுந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். கொலையாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா நேரியகுளம் பாடசாலை ஆசிரியரான நிரூபனின் படுகொலை தொடர்பில் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள கண்டன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயிரிழந்த ஆசிரியர் கார்த்திகேசு நிரூபனின் எலும்புக் கூடும், அவரது ஆடை அடையாளங்களும் மாங்குளம் காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன. போர் முடிந்து மூன்றாண்டுகளின் பின்னர், தான் கற்பித்த பாடசாலைக்கு கடமையின் பொருட்டு பயணித்த ஆசிரியர் கடத்தப்பட்டு காணாமற்போனமை தொடர்பில் காவல் துறையிடத்திலும், மனித உரிமை ஆணையகத்திலும் உறவினர்களும், ஆசிரியர் சங்கத்தினரும் முறையீடு செய்திருந்தும், போராட்டங்கள் நடத்தியிருந்தும் சம்பந்தப்பட்ட அதிகார பீடங்கள் இவ்விடயம் குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுத்துப் பதிலளித்திருக்கவில்லை. இது தான் இன்றைய இந்நாட்டின் நடப்பாகும்.



மாவை சேனாதிராசா

துப்புரவுப் பணியில் ஈடுபட்ட பொழுது பொதுமக்களால் நிரூபனின் உடல் எலும்புக்கூடு என்று அடையாளங் காணப்பட்டுள்ளமை அதிர்ச்சியளித்துள்ளது. யார் இந்த ஆசிரியரை கடத்திக் கொலை செய்தார்கள்? அதற்கான காரணமென்ன? மனித உரிமை ஆணையகத்தினரோ, காவல் துறையினரோ ஏன் தேடுதலில் ஈடுபட்டுப் பதிலளிக்கவில்லை? இவர்கள் பொறுப்புக் கூறும் கடமையில் இருந்து தவறியுள்ளனர்.

தற்போது எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்டிருப்பதால், இதற்கு காவல்துறை, அரசு பதிலளிக்கவேண்டும். எங்கு பார்த்தாலும் மனித எலும்புக் கூடுகளும் மனித எச்சங்களும் கண்டு பிடிக்கப்படுகின்றன. கொல்லப்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதல்ல, விதைக்கப்பட்டுள்ளன.


தமிழர் பிரதேசங்களில் இராணுவம் குவிக்கப்பட்டு, இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, தமிழர் நிலங்களும் விடுவிக்கப்பட்டு, அந்த நிலங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறும்போது இன்னமும் அதிகமான எலும்புக்கூடுகளும் புதைகுழிகளும் தோன்றக் கூடும். இவற்றுக்குப் பொறுப்புக் கூறும், நம்பத் தகுந்த சட்டம் ஒழுங்கு நடவடிக்கை இங்கு இல்லை. உண்மைகள் வெளிக் கொணரப்படவேண்டும். அதற்கு நம்பத்தகுந்த விசார்ணை வேண்டும். இதற்கான போராட்டங்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர் சங்கம் அறிவித்திருக்கிறது. இந்தப் போராட்டங்களை நாம் ஆதரிக்க வேண்டும், இந்த ஆத்மாக்களுக்காவது நாம் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உண்மைகள் வெளிக் கொண்டு வரப்படுவது அத்தியாவசியம். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என வற்புறுத்துகின்றோம்- என்றுள்ளது. (ஒ)

## வணிகர் மன்ற தலைவராக மீண்டும் தெரிவு

தென்மராட்சி, மார்ச் 18
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் தலைவராக வ.ஸ்ரீபிரகாஸ் ஐந்தாவது தடவையாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மன்றத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இடம்பெற்ற நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் இவருடன் உப தலைவராக மருத்துவர் எஸ். எஸ். அருளானந்தமும், செயலாளராக இ.சுரேஸும், உதவிச் செயலாளராக இ.கோகுலனும், பொருளாளராக கு.பிரணவநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் மேலும் 18 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-9)



முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 07.07.1947
இறப்பு 28.03.2013

அமரர் செல்வநாயகம் மனோகௌரி

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
நீங்கள் மறைந்தாலும் எம் மனதைவிட்டு மறையவில்லை!
ஆண்டு ஒன்றென்ன எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவுகள் நீங்காதவை.
அன்பும், பண்பும் ஆனந்தமும் சேர
வாழ்ந்த காலங்கள் மறக்கமுடியாதவை.
நீங்கள் எம்முடன் இல்லையே என்ற கவலைதான்
எம்மை வாட்டுகின்றது எங்கிருந்தாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

தம்மனை,
அளவெட்டி மேற்கு. (43410)(2.6) குடும்பத்தினர்.



தேசிய சுகாதார வாரத்தையொட்டி முருங்கன் பிரதேச மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்களால் குறித்த மருத்துவமனை வளாகத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (வ)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
அண்ணாமலை சற்குணசிங்கம்

பிறப்பு 24.01.1965
இறப்பு 29.03.2013

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்.
இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும்
மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

98, ஜின்னா ஒழுங்கை,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(45843)(7.6)

## நிர்வாகிகள் தெரிவு


தென்மராட்சி, மார்ச் 18
பகிரங்க சேவைகள் 'ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் தென்மராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர்- ச.ஞானலிங்கம், உபதலைவர் -மருத்துவர் இ.கந்தையா, செயலாளர்- செ.சுப்பிரமணியம், உதவிச் செயலாளர்- சு.க.நவரத்தினம், பொருளாளர்- சு.விஜயநாதன், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி நா.அருமைநாயகம், சி.அருணாசலம் எண்பார்வையாளர்- ம.யோகநாதன். (ஒ-9)

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் மகாலிங்கம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக சண்டிலிப்பாயில் வசித்தவருமாகிய அருணாசலம் மகாலிங்கம் நேற்று முன்தினம் (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராசாத்தியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஓடக்கரை கரச்சி மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
ஐயனார் சிலை வீதி, சண்டிலிப்பாய். (45835) (7.6.3)

### திருமதி சிவபாக்கியம் வித்தியானந்தக்குருக்கள்

பருத்தித்துறை, கோட்டுவ்ாசல் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் வித்தியானந்தக் குருக்கள் நேற்று முன்தினம் (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கக் குருக்கள்-சாரதா அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரஐயர்- வாலாம்பா தம்பதியரின் அன்பு மருமகளும், வித்தியானந்தக்குருக்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (17.03.2014) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சுந்தரராஜேஸ்வரன் ரேவதி (சகோதரி)
கொக்குவில். (45844) (5.6)

# தனியார் வங்கியில் புகுந்து 5 லட்சம் ரூபா கொள்ளை

## பட்டப்பகலில் சம்பவம்

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் உள்ள தனியார் வங்கியொன்றில் புகுந்த கொள்ளையர்கள் பட்டப்பகலில் 5 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். காரில் வந்த மூவர் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வங்கிக்குள் புகுந்து பணத்தைக் கொள்ளையிட்டுக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வங்கி ஊழியர்களான பெண்களை அச்சுறுத்தி சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பணத்தைக் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தம்புள்ளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நாட்டில் நல்லிணக்கத்தை குலைக்க சிலர் முயற்சி

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



விமல் வீரவன்ச

கொழும்பு,மார்ச் 18

நாட்டில் நிலவும் நல்லிணக்கச் சூழலைச் சீர்குலைக்க சில சக்திகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பு விகாரமகாதேவி வெளியரங்கில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களை ஒன்றிணைத்து, நல்லிணக்க திசை நோக்கி நாட்டை இட்டுச் செல்லும் சந்தர்ப் பத்தில், நாட்டில் நிலவும் நல்லிணக்கச் சூழலைச் சீர்குலைக்க சில சக்திகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன.

மேற்குலக நாடுகள் இலங்கை யில் கால் பதிக்க அதன் மறு பக்கத்தை பயன்படுத்தி வரு கின்றன. சிங்களப் பெரும் பான்மை ஆட்சியாளர்களால் வடக்கில் உள்ள மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகக் கூறி முதலைக் கண்ணீர் வடித்து கொண்டு நாட்டில் தலை நுழைக்க முயற்சித்து வருகின்றனர் - என்றார். (ச)

# அரசை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகிறது

கொழும்பு,மார்ச் 18

அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது. அரசுக்கு எதிரான போராட்டத்தில் தற்போது வெற்றி எமது கண்களுக்குத் தென்படுகிறது என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

மொரட்டுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போதையை அரசின் செயற்பாடுகளால் இலங்கையின் அனைத்துத் தொழிற்றுறைகளும் வீழ்ச்சி அடைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர் மாத்திரமே வளர்ச்சி அடைந்து வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சேவை நலன் பாராட்டு

### திரு. இராசதுரை யோகேஸ்வரன்



**சேவைக்கால விவரம்**

1. நீர்ப்பாசன எந்திரி அலுவலகம் - கிளிநொச்சி 01.07.1978 - 27.09.1989
2. நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு - திருகோணமலை 28.09.1989-03.10.1989
3. நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - திருகோணமலை 04.10.1989 - 04.11.1990
4. கட்டடங்கள் திணைக்களம் - கல்முனை 05.11.1990-08.02.1991
5. பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம் கிளிநொச்சி 09.02.1991 - 26.01.2004
6. நீர்ப்பாசன எந்திரி அலுவலகம் - கிளிநொச்சி 27.01.2004 - 18.07.2004
7. வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி 19.07.2004 - 18.03.2014

எமது வலயக்கல்வி அலுவலகத்தின் கணக்குக் கிளையில் 19.07.2004ஆம் திகதி தொடக்கம் 18.03.2014 ஆம் திகதி வரை கணக்குக்கிளையின் பிரதம முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திரு. இராசதுரை யோகேஸ்வரன் அவர்கள் இத் திணைக்களத்துக்கு வழங்கிய சேவைகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:

ஊழியர் நலன்புரி சங்கம்

வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

(C/12744)(10.6)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## வர்த்தக நிலையத்திற்கு பெண் விற்பனையாளர் உடன் தேவை

18 வயதிற்கும், 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சம்பளம் மற்றும் மேலதிக விவரம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 075 7340490

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## மரண அறிவித்தல்

### திரேசம்மா அருளானந்தம்



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரேசம்மா அருளானந்தம் (15.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - மரியம்மா தம்பதியரின் அன்புமகளும் பிலிப் அருளானந்தத்தின் அன்புமனைவியும் அனற்அமுதா (பிரான்ஸ்), ஜொனாலி றொபின் (பிரான்ஸ்), அருட்தந்தை யாவிஸ் (இயக்குநர் - கரித்தாஸ்), கியூடெக் - கிளிநொச்சி), அனற்ஷீபா (பிரான்ஸ்), ஜஸ்ரின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் வின்சன் (பிரான்ஸ்), ரஞ்சினி (பிரான்ஸ்), உதயன் (பிரான்ஸ்), கோமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமியும் விக்ரோறியா டெய்சி, அல்பிறட் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ. போல் பிரதீப்பின் பெரியம்மாவும் ஹெபின், ஹொலின், ஹொட்வின், ஜசிக்கா, கிறிஸ்ரினா, கிறிஸ்ரியன், கிறிஸ்ஷாந், அன்ரனி, ஜெறமி, ஷெபானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 19.03.2014 புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: அருட்தந்தை யாவிஸ் (மகன்),
இயக்குநர் கரித்தாஸ், கியூடெக் (கிளிநொச்சி)

## புதிதாக இந்திய வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சம்பந்தமான கூட்டம் மன்னார்

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் (RC-PCRP) புதிதாக மன்னார் யாழ். மாவட்டங்களின் தெல்லிப்பழை, மடு, பளை மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்திய வீட்டுத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட புதிய பயனாளிகளின் பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி நேரத்தில் காட்சிப்படுத்தப்பட்டு கூட்டம் நடைபெறும் (Grievance Meeting). மேலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சம்பந்தமான அபிப்பிராயங்களையும் தெரிவிக்கலாம். தவறாமல் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கவும்.

**மடு பிரதேச செயலாளர் பிரிவு**

| இல | கிராமசேவகர் பிரிவு | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | இரணை இலுப்பைக்குளம் | 24.03.2014 | மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 2 | கல்மடு | 24.03.2014 | மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 3 | பரசன்குளம் | 24.03.2014 | மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 4 | விளாத்திக்குளம் | 24.03.2014 | மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 5 | பூமலந்தன் | 25.03.2014 | மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 6 | மாதாக்கிராமம் | 25.03.2014 | பி.ப.2.00 | கிராமசேவகர் அலுவலகம் |
| 7 | பாலாம்பிட்டி | 26.03.2014 | மு.ப.10.00 | மடு பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 8 | மடு | 26.03.2014 | மு.ப.10.00 | மடு பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 9 | பெரிய பண்டிவிரிச்சான் மேற்கு | 26.03.2014 | மு.ப.10.00 | மடு பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 10 | பெரிய பண்டிவிரிச்சான் கிழக்கு | 26.03.2014 | மு.ப.10.00 | மடு பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 11 | கீரிசுட்டான் | 26.03.2014 | மு.ப.10.00 | மடு பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 12 | தேக்கம் | 26.03.2014 | மு.ப.10.00 | மடு பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 13 | பன்னவிடுவன் | 27.03.2014 | மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 14 | கட்டையடம்பன் | 27.03.2014 | பி.ப.2.00 | கிராமசேவகர் அலுவலகம் |

**முசலி பிரதேச செயலாளர் பிரிவு**

| இல | கிராமசேவகர் பிரிவு | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | சிலாவத்துறை | 18.03.2014 | மு.ப.10.00 தொடக்கம் - பி.ப. 12.30 வரை | கிராமசேவகர் அலுவலகம் |
| 2 | அரிப்பு மேற்கு | 18.03.2014 | பி.ப. 2.00 தொடக்கம் - பி.ப. 4.00 வரை | கிராமசேவகர் அலுவலகம் |
| 3 | அரிப்பு கிழக்கு | 18.03.2014 | பி.ப. 4.30 தொடக்கம் - பி.ப. 6.30 வரை | கிராமசேவகர் அலுவலகம் |

**Jaffna District**

| | | | |
|---|---|---|---|
| 1 | வசாவிளான் மேற்கு | 31.03.2014 மு.ப.10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 2 | வசாவிளான் கிழக்கு | 31.03.2014 பி.ப. 2.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 3 | தெல்லிப்பழை கிழக்கு | 01.04.2014 மு.ப. 10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 4 | துர்க்காபுரம் | 01.04.2014 பி.ப. 2.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 5 | பளைவீமன்காமம் தெற்கு | 02.04.2014 மு.ப. 10.30 | கிராமசேவகர் அலுவலகம் |
| 6 | பளைவீமன்காமம் வடக்கு | 02.04.2014 பி.ப. 2.30 | கிராமசேவகர் அலுவலகம் |

Red Cross Post Conflict Recovery Programme - Coordination Office

No. 73 , Kandy Road, Jaffna, Srilanka. Telephone - +94 117651710, Fax - +94 212229792

## தரமான உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதிக்கு மொத்தமாகத் தேவை

- எலுமிச்சை ஊறுகாய்
- தேங்காய் பவுடர் மற்றும் பசுப்பால்
- உலர்ந்த வெங்காயம்
- இயற்கை மருத்துவ மூலிகைகள்
- உலர்ந்த பழங்கள் உற்பத்தி
- பழவற்றல்
- முருங்கைக்காய் பவுடர்
- பனை உற்பத்திப் பொருள்கள்
- பனை வெல்லம்
- வெள்ளரி
- மாட்டெரு
- ஆட்டெரு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரமான உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து மொத்தமாக விநியோகிக்கக் கூடியவர்கள் 20.03.2014 ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொண்டு உற்பத்திப் பொருள்களின் Sample களைத் தரம் பார்த்துக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: இல.28, பேரின்பநாயகம் வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

021 222 8193, 021 567 0350, 077 318 8375

Email : busineedev@sltnet.lk

(சி/7661)(7.6)

## பச்சிலைப்பள்ளி - வேம்பொடுகேணி அருள்மிகு நவனிவெளி கண்ணகை அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா ஏககுண்டபக்ஷ மகா கும்பாபிஷேக பெருவிழா - 2014

எண்ணெய்க்காப்பு

இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை,
காலை 9.00 மணி - மாலை 4.00 மணிவரை

மகா கும்பாபிஷேகம்

நாளை (19.03.2014) புதன்கிழமை
காலை 8.00 மணி - 9.49 மணிவரை

அம்பிகை அடியார்கள் அனைவரும் மேற்படி கிரியைகளிலும், கும்பாபிஷேகப் பெருவிழாவிலும் தொடர்ந்து நடைபெறும் 15 நாள் மண்டல அபிஷேகத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்பொடுகேணி. பளை. (C/7662)(10) ஆலய பரிபாலன சபை.

# துணுக்காய்க் கிராமங்களில் யானைகளால் தொல்லை

கிளிநொச்சி, மார்ச் 18

துணுக்காயின் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் யானைகளின் தொல்லைகளால் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் ஐயன்கன்குளத்திலிருந்து புத்துவெட்டுவான் கிராமத்துக்கு வரும் வழியில் மாணவர்கள் சிலர் ஏழு யானைகள் வீதியைக் கடந்து செல்வதைக் கண்டு அச்சமடைந்த நிலையில் அங்கிருந்து ஓடியுள்ளனர்.

புத்துவெட்டுவான் கிராமத்திலிருந்து தரம் ஆறுக்கு மேற்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஐயன்கன்குளத்திலுள்ள பாடசாலைக்கு நடந்து செல்வது வழமையாகும். மீள்குடியமர்வின் பின்னர் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பகல் நேரங்களில்கூட யானைகளின் நடமாட்டத்தை அடிக்கடி காண நேரிடுகிறது. பிற இடங்களிலிருந்து இறக்கிவிடப்பட்ட யானைகளே இவை யென மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் தொல்லை தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலரிடம் கேட்டபோது பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் யானைகளின் தொல்லை தொடர்பாக என்னிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். நான் அநுராதபுரத்தில் இயங்கும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளேன் அதன் ஊடாக மக்களுக்கு யானைகளை விரட்டுவதற்கான வெடிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (க-18)

**பிரத்தியேக தனி, குழு A/L வகுப்புகள்**

நீங்கள் கூப்பிடும் தூரத்தில் வீட்டிற்கு ஓடி வந்து சேவையாற்றும் ஆற்றலுடன்

Biology — நறியோ Master 077 773 0840
Chemistry — இந்திரன் Master 077 665 5290

(Tutors for London Cambridge)

கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தாள்கள் உடனுக்குடன் செய்விக்கப்படும். (45842) (7.6)

**வேலையாள்கள் தேவை**

அப்பளக் கம்பனி ஒன்றுக்கு வேலை தெரிந்தவர்கள்/ பழக விரும்பும் ஆண்/ பெண் இருபாலாரும் உடன் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு:-0771393670, 0770440570
TV கடை & அப்பளக் கம்பனி
பெரிய சங்கர் அருகில், 56, கே.கே.எஸ்.வீதி, நல்லூர். (45839)(2.6)

**மணமக்கள் தேவை**

* 73 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 22¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்று விவாகரத்துப் பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப் படாது)
* 70 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 39 பாவமுடைய BA பட்டதாரி மணமகள் அரச நிறுவனத்தில் பதவி நிலை உத்தியோகத்தராகப் பணி புரியும் மணமகளுக்கு அரச நிறுவனம், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகன் தேவை.

தொடர்பு: காலக்கண்ணன் திருமணசேவை, இல.435/ 3, கோயில் வீதி, நல்லூர்.
T.P. 077 607 0862 (45838)(2.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி புங்கங்குளம் வீதியில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சி/12742) (2.6)
T.P.021 226 3420, 0770893794

**காணி விற்பனைக்கு**

தங்குமிட விடுதி கட்டக்கூடிய காற்றோட்டமான 3 பரப்பு காணி யாழ்.கடற்கரைவீதியில் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். (சி/12741)(2.8)
T.P.021 226 3420, 0770893794

**மலிவு விற்பனை**
**TVகள், குளிர்சாதனப் பெட்டிகள்**

மிக மலிவு விலையில்Sony, பனசோனிக் TVகள் 21" - 14000/=, 29" - 15000/=, இரட்டைக்கதவு - குளிர்சாதனப் பெட்டிகள் - 25000/= முதல், DVD - 3250/=, அம்பிளிபயர், Box, ரேடியோ கசெற்
தொடர்பு: 021 568 9344/077 044 0570
சோனி ரேட்ற்சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம். (44995)(12.5.6)

TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute


**அதியுயர் ஊடக விருதுகள் 2013**

சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 15 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி 10 ஏப்ரல் 2014 ஆகும்.**

(ஆ) (C/12373)

# மாணவர்களை கட்டாயப்படுத்தி அனுமதிக்கும் கல்வி நிலையங்கள்

மன்னார், மார்ச் 18

மன்னாரில் உள்ள சில தனியார்கல்விநிலையங்கள் மாணவர்களைக் கட்டாயப்படுத்தி தமது நிலையங்களில் அனுமதி வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு ஆசிரியர்கள் சிலர் துணை போவதாகவும் பெற்றோர்களும், மாணவர்களும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

மன்னார் மாவட்டத்தில் சுமார் 20க்கும் மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் சில கல்வி நிலையங்களில் பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மாலை நேரங்களில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

ஒரு சில தனியார் கல்வி நிலையங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் இருந்தும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் உயர்தர மாணவர்கள் தாங்கள் விரும்பிய தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளதாகவும் இதற்கு பாடசாலை ஆசிரியர்கள் சிலர் தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாகப் பாடசாலையொன்றில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் தான் கற்பிக்கும் தனியார் கல்வி நிலையத்துக்கே மேலதிக வகுப்புக்களுக்கு வர வேண்டும் எனத் தமது மாணவர்களைக் கட்டாயப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் தாம் விரும்பிய கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-56)

## பொதுக்கூட்டம்

வரணி, மார்ச் 18

வரணி மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை கல்லூரி மண்டபத்தில் பி.ப.2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் இவ்வருடத்துக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும்.

பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அ.பாலகிருஸ்ணமூர்த்தி கேட்டுள்ளார். (வ-122)

◆◆◆

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிராம அலுவலர் நா.கௌரீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் கூட்டத்தில் கலந்து கொள்வார். வெள்ளாம்போக்கட்டி பொது நோக்கு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் கிராமத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் குடும்பத் தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கி.ஞானராசா கேட்டுக் கொண்டுள்ளார். (கு-122)

## கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது பருவகால கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளை மேற்கொண்ட அனைத்துப் பகுதி நேர மாணவர்களையும் மேற்படி தினத்தில் வகுப்புக்களுக்குச் சமுகமளிக்குமாறு நிறுவனத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

**தவறிவிட்டது**

உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியில் வசித்து வரும் செல்வி பிரமிளா தவராசா ஆகிய எனது 838142664V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி பணம் மீளப் பெறும் அட்டை மற்றும் ஒரு தொகை பணம், யாழ் அத்தியடியிலுள்ள நான் தொழில் புரியும் அலுவலகக் கட்டடத்தின் சுற்றாடலில் காணாமல் போய்விட்டன. கண்டெடுத்தோர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கையளித்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்**

யாழ் கல்வி வலயத்தில் கடந்த 13 வருடங்களாக ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக சிறப்பாகக் கடமையாற்றி இன்று 18.03.2014 இல் தனது 60ஆவது அகவையை எட்டும் மதிப்பிற்குரிய
**செல்வத்துரை தியாகராஜா**
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்)
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவருடைய ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.



Congratulation

ஆங்கில ஆசிரியர்கள்-யாழ்.வலயம். (45798)(5.6)

## வரணியில் சடலம் மீட்பு

தூக்கில் தொங்கிய போது கயிறு அறுந்ததால் நிலத்தில் வீழ்ந்து கிடந்ததாகக் கூறப்படும் சடலமொன்று மீட்கப்பட்டது. நேற்று அதிகாலை வரணி இடைக்குறிச்சிப் பிரதேசத்தில் க.சின்னவன் (வயது-82) என்னும்வயோதிபரின் சடலமேஇவ்வாறுஅவர் வசித்து வந்த வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இவர் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்ததாகக் கூறப்பட்டது. கொடிகாமப் பொலிஸார் இந்தச் சம்பவம்தொடர்பாக விசாரணையைமேற்கொண்டுள்ளனர். வரணிப் பிரதேசத்தில் கடந்த மாதத்திலிருந்து இது வரை இடம்பெற்ற இவ்வாறான சம்பவங்களில் இது மூன்றாவது சம்பவமாகும். (கு-122)

**அறிவித்தல்**

**மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**ஆனைக்கோட்டை வட்டாரம் - 12**
**ஆதன இலக்கம் : 101**
**முருகமூர்த்தி கோயில் வீதி**

வட்டாரம் 12 முருகமூர்த்தி கோயில் வீதி ஆதன இலக்கம் 101இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயில்பற்று நவாலி இறை "அந்திரானை வளவு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்றே முக்கால் (நி.ப 1¾) கொண்ட இவ்வாதனமானது நவாலி கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணராசா பெண் சாந்தினி அவர்களால் இதே ஊரைச் சேர்ந்த ஹரிகரன் பெண் சுகந்தினி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 14903ஆம் இலக்க 2012.10.03ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "அந்திரானை வளவு" நிலப்பரப்பு ஒன்றேமுக்கால் உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ஹரிகரன் பெண் சுகந்தினி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (45796)(7.6)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

Applications are invited by me up to 17.04.2014 from suitably qualified persons for the following posts.

**POST- UNIVERSITY MEDICAL OFFICER ( University of Jaffna, Vavuniya Campus, Faculty of Engineering, Kilinochchi)**

1.The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**QUALIFICATIONS:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**NOTE**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

Salary Scale: U- MO 1 (II) Rs. 28,360 - 10 x 645 ; 1 x 790 - 35,600/- p.m.

Selection: By Structured Interview

**POST – CURATOR (LANDSCAPE), GRADE III ( University of Jaffna, Vavuniya Campus)**

**QUALIFICATIONS:**

(1). Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

OR

(2). Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

Salary Scale: U- EX1 (II) Rs. 26,020 - 3 X 585 - 27,775 (EB) 28,420; 12 X 645 -36,160/- p.m.

Selection: By Structured Interview

**POST – CHIEF SECURITY OFFICER, GRADE II ( University of Jaffna)**

**QUALIFICATIONS:**

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.
OR
2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.
OR
3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

AGE: Not more than 45 years.

Salary Scale: U-EX 1(II) Rs. 26,020-3 X 585 - 27,775 (EB) 28,420; 12 X 645 - 36,160/- p.m.

Selection: By Structured Interview

**POST- ASSISTANT REGISTRAR ( LEGAL & DOCUMENTATION)**

**QUALIFICATIONS:**

L.L.B Degree of a recognized University/ Attorney-at-Law with not less than 03 years experience in Court Work, Legal Work relating to Corporations/ Companies and drafting legal documents.

Salary Scale: U-EX 1(II) Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12 X 645 -36,160/- p.m.

Selection: By Structured Interview

STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Non Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.


The envelope containing duly filled application form must bear **"the name of the post applied for"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna,
17.03.2014.

(C/12745)(10.6)

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. பல நூற்றுக் கணக்கான பக்தர்களின் 'அரோகரா' கோஷம் முழங்க சுவாமி தேரில் வீதியுலா வரும் காட்சி.

## கடலாமையை இறைச்சிக்காக வெட்டியவருக்கு விளக்கமறியல்

மன்னார், பள்ளிமுனை பகுதியில் கடலாமை ஒன்றை இறைச்சிக்காக வெட்டிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மீனவர் ஒருவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பள்ளிமுனை பகுதிக்குச் சென்ற போது வெட்டப்பட்ட நிலையில் 3 கிலோ கடலாமை இறைச்சியுடன் குறித்த மீனவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை மன்னார் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னிலைப்படுத்தியபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (வ-56)


### கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினரும், மன்ற சேமிப்புத் திட்ட உறுப்பினருமான ம.நெல்சன் பொஸபாட் (அபி போன் சொப்-சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தந்தையார்

**இளையாவி மணியம்**


அவர்கள் 16.03.2014 காலமாகியதை அறிந்து வேதனையடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

(சி/7661)(7.6)

### கண்ணீர் அஞ்சலி

**சண்முகவடிவேல் வேல்நாதன்**



பிஞ்சு வயதிலிருந்தெமைக்
கொஞ்சிக் கலிதீர்த்தாய்
பண்பான கதைகள் கூறியெமைத்
தோழில் சுமந்தன்பு பொழிந்தாய்
அம்மனம்மனென்று அம்பிகையைப்
போற்றி நின்றாய்
இம் மானிட வாழ்வினிப் போதுமென்றோ
நயினையவள் கழல் புக்காய்

அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மருமக்கள் -
(கனடா,டென்மார்க்,நோர்வே)

(45845)
(10.6)

### மரண அறிவித்தல்

**திருமதி பவானலட்சுமி (கிளி அக்கா) தேவராஜா**



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவானலட்சுமி தேவராஜா நேற்று (17.03.2014) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாத்தையா பொன்னையா-தங்கம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான முத்தையா-சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தேவராஜாவின் அன்பு மனைவியும், பாஸ்கரன், ரஞ்சனி, கிருபாகரன் ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசாம்பாள், செல்லத்துரை, தேவதாசன், கனகலிங்கம், சிவலிங்கம் மற்றும் குணவதி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாமா, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்ஷா, விதுஷா, டியாஷா, சகானா, சாருகா, சதீஸ், சப்னா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை இல. 33, விபுலானந்தர் வீதி, (வில்வந்தெரு வீதி) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணிக்கு அரியாலை 'சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33, விபுலானந்தர் வீதி,
வில்வந் தெரு, அரியாலை.

தகவல் :
பிள்ளைகள்.

(45648)(7.6)

# கலாசார அழிப்பு குறித்து இலங்கைத் தமிழர் அச்சம்

## 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' தகவல்

சென்னை, மார்ச்.18

கலாசார அழிப்புக் குறித்து இலங்கைத் தமிழர்கள் அச்சம் கொண்டுள்ளதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இராணுவ மேலாதிக்கம் நிறுவப்பட்ட நிலையில், அங்கு தமிழ் மக்களிடையே சிங்கள பௌத்த கலாசாரம் திணிக்கப்பட்டு வருகிறது.

வட மாகாணத்தில், மீள் கட்டமைப்பு என்ற போர்வையில், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், இலங்கை இராணுவம் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி வருகிறது.

தமிழர்களின் நாளாந்த வாழ்வில், கலாசார ஆதிக்கத் திணிப்பை அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது என்று கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு வடக்கு, கிழக்கில் இருந்து வந்திருந்த தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் இது குறித்து வெளியிட்டுள்ள செய்தியில், 'பொது இடங்களில் தமிழின் பயன்பாடு விரைவில் அழிந்து போய் விடும் என்று நாம் அஞ்சுகிறோம்.

பாடசாலைகளில், இலங்கையின் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டுமே மாணவர்கள் பாடுகின்றனர்.

மாணவர்கள் மத்தியில், தமிழ்க் கலாசாரத்தை ஊக்குவிக்கக் கூடாது என்று இலங்கை அரசு எமக்கு மறைமுகமான சுற்றிக்கையை அனுப்பியுள்ளது என்று கச்சதீவுக்கு யாத்திரை வந்திருந்த வடக்கில் அரச பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். அதுபோன்று, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பாடப் புத்தங்களில், தமிழர் வரலாறு தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சிங்களவர்களின் வரலாறு பாடசாலைப் புத்தகங்களில், விரிவாக இடம் பெற்றுள்ளது. தமிழர் வரலாற்றுக்கு ஒரு சிறிய பகுதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

எமது வரலாறு தொடர்பான தொல்லியல் சான்றுகள் இல்லை என்பதைக் காரணம் காட்டி, கல்லூரிப் பாடப் புத்தகங்களில் பண்டைய, மற்றும் இடைக்கால தமிழர் வரலாறு, உள்ளடக்கப்படவில்லை. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சகல பாடசாலைகளிலும், சிங்களத்தை இரண்டாவது மொழியாக அரசு அறிவித்துள்ளது.

அரச வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு சிங்களம் கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் சிங்களத்தை இரண்டாவது மொழியாக கற்க நாம் மாணவர்களை நிர்ப்பந்திக்கிறோம். ஆனால், எமது சிறுவர் களுக்கு சிங்களத்தை கற்பிக்க ஆசிரியர்கள் மறுக்கின்றனர்" என்று இலங்கைத் தமிழர்கள் பலரும் தெரிவித்தனர் என்றும், நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது. (வ)

## மிகப்பெரும் கிருஷ்ணர் கோயில் உத்தரப்பிரதேசத்தில் அமைகிறது



கோப்புப் படம்

உலகிலேயே மிகப் பெரிய கிருஷ்ணர் கோயில் உத்தரப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது. 70 மாடிகள் கொண்டதாக இந்த ஆலயம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பகவான் கிருஷ்ணன் சிறு வயதில் கோபியர்களுடன் விளையாடியதாகக் கூறப்படும் பிருந்தாவனம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ளது.

அங்கு கிருஷ்ணருக்கு 70 மாடிகள் கொண்ட கோயிலொன்றைக் கட்ட இஸ்கான் அமைப்பு திட்டமிட்டுள்ளது. 62 ஏக்கர் நிலப்பரப்பில் 213 மீற்றர் உயரத்தில் இந்தக் கோயில் அமைய உள்ளது. 'பிருந்தாவன சந்திரோதய மந்திர்" என இந்தக் கோயிலுக்கு பெயர் சூட்டப்பட உள்ளது.

கோயிலைச் சுற்றி 30 ஏக்கரில் மலர்ச் செடிகள், மற்றும் மரங்கள் வளர்க்கவும் இஸ்கான் திட்டமிட்டுள்ளது.

கோயிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. உலகிலேயே மிகப் பெரிய கோயிலாக இது அமையும் என்று இஸ்கான் அமைப்பின் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். (வ)

## மாணவியை பாம்பு தீண்டியது


தென்மராட்சி, மார்ச் 18

இரவு வீட்டில் படித்துக் கொண்டிருந்த மாணவியை விஷப் பாம்பு தீண்டியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மந்துவில் வடக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த பரமசாமி தாரகா (வயது-14) என்ற மாணவியே பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (வ-9)

# லண்டன் மாநகரையே அதிரவைத்த போராட்டம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

லண்டன், மார்ச்.18

காணாமற்போனோர்களுக்காக போராடிய தாயும் சிறுமியும் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் சனிக்கிழமை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

லண்டனில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் வாசஸ்தலத்துக்கு முன்பாக சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொடரும் இன அழிப்பின், தமிழர்களின் இன்றைய கையறு நிலையின், ஒட்டுமொத்த குறியீடாக விபூசிகாவும் அவளது தாயாரும் மாறிப்போயுள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்பு ஒன்றுகூடலில் அனைத்துத் தமிழ் உறவுகளையும் அணி திரளுமாறு பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் அழைத்ததை அடுத்து பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (வ)



வெங்கையா நாயுடு

# இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறையின்றிக் காங்கிரஸ்

## வெங்கையா நாயுடு குற்றச்சாட்டு

சென்னை, மார்ச்.18

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு திறம்படச் செயற்படவில்லை என்று வெங்கையா நாயுடு குற்றஞ்சாட்டியுள்ளார்.

பா.ஜ.க.வின் தேர்தல் சிறப்புக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

"காங்கிரஸ் கட்சியின் தவறான கொள்கைகளே நாட்டில் நிலவும் பல பிரச்சினைகளுக்குக் காரணம்.

வறுமை, வேலைவாய்ப்பின்மை, ஊழல் போன்றவையே காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகள். இலங்கைத் தமிழர் விவகாரத்திலும் மத்திய அரசு திறம்பட செயற்படவில்லை" என்று அவர் குற்றஞ்சாட்டினார். (வ)

## கனேடியத் தூதர் கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 18

இலங்கைக்கான கனேடிய தூதர் திருமதி செலீ விடின், பாதுகாப்புப்படை கட்டளைத் தலைமையகத்தில் வைத்து கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு நிலைமைகள் குறித்துத் தெளிவுபடுத்திய கட்டளைத் தளபதி, சிலர் நாட்டில் நிலவும் சமாதானத்தை குலைப்பதற்கு முயற்சிப்பதாகவும் கூறினார்.

தேவையான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கு அமைய பொதுமக்கள், சிவில் அமைப்புகள், அரச நிறுவனங்கள் போன்ற தரப்புக்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க இராணுவம் தயாராகவுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# நரேந்திர மோடி பிரதமரானால் ஈழத்தமிழர் நலன் காப்பார்

சென்னை, மார்ச்.18

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்று நரேந்திர மோடி பிரதமரானால் ஈழத் தமிழர்களைக் காக்க நடவடிக்கை எடுப்பார் என்று வைகோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மூத்த சட்டத்தரணி ராம் ஜெத்மலானி தலைமையில் சட்டத்தரணிகள் மாநாடு டில்லியில் நடைபெற்றது.

இதில் மோடி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பேசிய வைகோ,

### வைகோ நம்பிக்கை

"மோடி பிரதமராக வேண்டும் என்று இங்கே வந்திருக்கிற சட்டத்தரணிகள் அனைவரும் குரல் கொடுத்திருக்கிறீர்கள். நாடு முழுவதும் மோடி அலை வீசுகிறது. இதற்கு மோடி பொது வாழ்வில் நேர்மையைக் கடைப்பிடித்ததும், அவரது கடுமையான உழைப்பும்தான் காரணம். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் மாநிலங் களுக்கு உரிய உரிமையும் அதிகாரமும் வழங்குகின்ற கூட்டாட்சிக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் என மோடி உத்தரவாதம் அளிக்க வேண் டும். காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு ஈழத் தமிழர்களுக்குச் செய்த துரோகத்தை தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

வாஜ்பாய் பிரதமராக இருந்த போது ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டால் இலங்கை அரசுக்கு இந்திய அரசு எந்த உதவியும் செய்யாது, ஆயுதங்களை வழங்க மாட்டோம் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அறிவித்தார். அதேபோல, நரேந்திர மோடி தலைமையில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஈழத் தமிழர்களைக் காக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன்" - என்றார். (வ)

# இலங்கை அரசுக்கு 'ஜெ' நன்றி தெரிவிப்பு



ஜெயலலிதா

சென்னை, மார்ச்.18

இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்காகவே அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 177 மீனவர்களையும், 32 படகுகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்"-என்றுள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் பெரும் பாலும் எதிர்வரும் 25 ஆம் திகதி இரு நாடுகளினதும் மீனவர்கள் பேச்சு நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது - என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இறுதிப்

தினம் குறித்த காணொலிகளை வெளியிட்டுள்ளது.

குறித்த காணொலியில்இலங்கை இராணுவம் இறுதிப் போரில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள் என்பதை இராணுவச் சிப்பாய் ஒருவர் ஒப்புக்கொள்ளும் காட்சிகளும் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும், குறித்த காணொலியை இலங்கை இராணுவம் முற்றாக மறுத்துள்ளது.

**ஆதாரங்கள்**

குறித்த காணொலியில், இரசாயனக் குண்டு வீச்சினால் உடலில் எரிகாயங்களுக்கு உள்ளான ஒரு குழந்தை மற்றும் ஆண் ஒருவர் தொடர்பான ஒளிப்படங்களும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் சீருடையணிந்த இராணுவச் சிப்பாய், போரின் இறுதிக் கட்டத்தில் இரசாயன ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை விபரிக்கும் காட்சியும் வெளியிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஆனந்தபுரத்தில் படையினர் அமைத்துள்ள போர் தளபாடங்கள் வைத்துள்ள காட்சிக் கூடத்தில் வைத்தே இராணுவச் சிப்பாய் தனது கருத்தை தெரிவிக்கின்றார்.

போரின் இறுதிக்கட்டத்தில், கடற்கரையோரத்தில் சிக்கியிருந்த விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகவும், அந்தக் குண்டுகள் சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றளவு கொண்ட பிரதேசத்தில் அழிவுகளை ஏற்படுத்தும் திறன் கொண்டது என்றும் அந்த இராணுவச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

**வெள்ளைப் பொஸ்பரஸ்**

இரசாயன ஆயுதம் என்று ஒன்றைச் சுட்டிக்காட்டி அவர், அது தொடர்பாக கொச்சைத் தமிழில் விளக்கமளித்துள்ளார். போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினர், வெள்ளைப் பொஸ்பரஸ் என்ற இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது எரிகாயங்களை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என்பதும் அனைத்துலக அளவில் போரில் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டது மாகும்.

**மறுப்பு**

அதேவேளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, இந்திய தொலைக் காட்சியில் வெளியான இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். 'புலிகளுக்கு எதிரான போரில் நாம் எப்போதும், மரபு ரீதியான ஆயுதங்களையே பயன்படுத்தினோம். திரிபு படுத்தப்பட்ட அல்லது பொய்யான இந்தக் குற்றச்சாட்டு, ஜெனிவா கூட்டத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

எந்த ஆயுதங்களையோ, குண்டுகளையோ நாம் உற்பத்தி செய்வதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அரசு மூலமாகவே, அவற்றை நாம் வாங்கினோம். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை உற்பத்தி செய்ய முயன்றனர் என்பது தெரிந்ததே. அவர்களின் தளங்களில் இருந்து பெருமளவு இரசாயனங்களை நாம் கைப்பற்றியுள்ளோம்.

இலங்கை இராணுவத்துக்கும், அரசுக்கும் எதிரான உணர்வுகளை தூண்டிவிடும் நோக்கில் சில தரப்பினரால், இந்தப் புதிய காணொலி வெளியிடப்பட்டுள்ளது. இதனை நாம் நிராகரிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### கூட்டமைப்பு

"சரியான விடயத்தை சரியான நேரத்திலேயே செய்தாக வேண்டும் என எமது தலைவர் அஷ்ரப் அடிக்கடி கூறுவார். ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைவு என்பது சரியான விடயமாகும். ஆனால் கடந்த காலங்களில் பிழையான நேரமென்பதால் அவ்வாறான பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்குச் செல்லவில்லை.

தற்போது சர்வதேசம் பலவிடயங்களைகூறியிருக்கும்போதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு தாமதப்படுத்துகின்றது.

மு.கா எடுக்கும் முடிவுகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் சிந்திக்க வேண்டும். பலவிடயங்களைதுணிகரமாக பேசுவதற்கு சந்தர்ப்பம் வரும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. அதன் அடிப்படையிலும் பட்டறிவைக் கொண்டவன் என்பதன் அடிப்படையிலும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் செயற்படுபவன் என்பதன் அடிப்படையிலும் முடிவுள்ள எடுக்க வேண்டியேற்பட்டது.

தெற்கில் இருப்பவர்களுடன் முட்டி மோதிக்கொண்டு நாம் எமது நிலைப்பாடுகளை நிலை நிறுத்துவதற்கு போராடுவதை விடவும் புரிந்துணர்வுடன் சில விடயங்களை சாதிப்பதற்கு ஆர்வம் காட்டவேண்டும்.

எதிர்காலத்தில் நல்லாட்சிக்கான முக்கியதொரு அச்சாணியான விடயமொன்று நடைபெறவேண்டுமென்றால் தகவல் அறிவதற்கான சட்டமூலமொன்ற இந்நாட்டில் வந்தாக வேண்டும். இந்தய விடயம் சிலரால் ஜீரணிக்க முடியாத விடயமாக இருக்கின்றபோதும் இதனை வலியுத்தும் அழுத்தமான சிவில் சமூக போராட்டமொன்று அவசரமாக முன்னெடுக் கப்படவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை எதிர்க்கட்சித் தலைவர்கள் முன்னெடுக்கும்போது ஆளும் தரப்பில் இருந்தாலும் நான் நிச்சயமாக பங்கெடுப்பேன். இந்த நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அச்சாணியான இவ்விடயம் அவசரமாக செயற்படுத்த வேண்டியிருக்கின்றது"- என்று தெரிவித்தார். (ற-10)

### கைதான

கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் காயமடைந்திருந்தார். அந்தச் சம்பவத்தில் பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டு பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது 13 வயது மகளான விபூசிகா ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை இரவு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதியின் வீட்டில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். அதன்போது தாய் ஜெயகுமாரியை பூஸா தடுப்பு முகாமில் வைத்து விசாரணை செய்வதற்கும், 13 வயதான விபூசிகாவை வைத்திய பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்குமாறும் நீதிபதி உத்தர விட்டிருந்தார்.

**அரசியல் விவகாரம்**

அதற்கமைய கிளிநொச்சி வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த சிறுமி விபூசிகா, நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் மாலை 2.30 மணியளவில் முற்படுத்தப் பட்டார். அதன்போது சிறுமிக்கு ஆதரவாக கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகள் ஒன்று திரண்டு மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

அதன்போது சிறுமியை செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் தங்க வைப்பதற்கு, கண்டாவளை பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி கோரினார். எனினும் சிறுமி சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள், சிறுமியின் கைது அரசியல் ரீதியானதாகியுள்ளது, செஞ்சோலை சிறுவர் இல்லமும் அரசியல் ரீதியான பின்னணி கொண்டது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அறிக்கை சமர்ப்பிக்கவும் கிளிநொச்சி கருணை நிலையம், வவுனியா செட்டிகுளம் அன்பு கன்னியர் சிறுவர் இல்லம், மகாதேவா சிறுவர் இல்லம் என்பவற்றின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டது. நீதிபதியால்சிறுமியின்விருப்பம்கேட்கப்பட்டபோது சிறுமி அன்புக் கன்னியர் சிறுவர் இல்லத்தில் தங்குவதற்கே விருப்பம் தெரிவித்தார்.

இருப்பினும் அன்புக் கன்னியர் சிறுவர் இல்லம் மற்றும் கருணை நிலையம் என்பன பதிவுகள் செய்யப்படவில்லை. அதனால் இது தொடர்பில் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தர விட்டிருந்தார். அத்துடன் அது வரையில் தற்காலிகமாக மகா தேவா சிறுவர் இல்லத்தில் சிறுமியைத் தங்க வைக்க உத்தரவிட்டார். (ற-5-55)

### பாப்பரசரின்

யின் வத்திக்கான் நகரில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளும் இலங்கை ஆயர்கள்குழுவில் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மட்டக்களப்பு ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கையின் ஒவ்வொரு ஆயர்களையும் தனித் தனியே சந்தித்து அவர்களின் மறைமாவட்ட நிலைமைகள் தொடர்பில் நேரில் அறியவுள்ளார். இதன் போது வடக்கு - கிழக்கு ஆயர்கள், நீண்டகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினை, தமிழ் மக்கள் தற்போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள், மனித உரிமை மீறல்கள், அடக்கு முறைகள் என்பன குறித்து பாப்பரசருக்குத் தெளிவுபடுத்தவுள்ளனர் என்று தெரியவருகிறது. அத்துடன் தமது மறை மாவட்ட நிலைமைதொடர்பான விரிவான அறிக்கை ஒன்றையும் அவர்கள் தனித் தனியே பாப்பரசரிடம் கையளிப்பர் என்றும் கூறப்படுகிறது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் அடக்குமுறைகளைக் கடுமையாக எதிர்ப்பவர் என்று கூறப்படும் நிலையில், வடக்கு-கிழக்கு ஆயர்களின் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (த)

### சுற்றுலா

கடந்தவாரம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த 8 பேரும் நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சுற்றுலா விசாவில் வந்து வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்று அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அவர்கள் முதலில் மறுத்து தாம் சுற்றவாளிகள் என்று கூறியிருந்த போதும், பின்னர் தம்மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர். அதையடுத்து அவர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

எனினும் அவர்களிடம் இருந்து பெருந்தொகையான புடவைகள் மீட்கப்பட்டன என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவை தம்முடையவை அல்ல என்று அவர்கள் கூறியதால், அவை தொடர்பான உரிமைக் கோரிக்கைக்காக வழக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-4)

### உள்ளக

களை நடைமுறைப்படுத்தும் முறைமையொன்று இங்கு இல்லை. பொருத்தமான முறையொன்றைநடைமுறைப்படுத்தி இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக உள்ளக விசாரணை ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" - என்று தெரிவித்துள்ளார். (ற)

### அமலன்

பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அன்றைய தினமே அவர்கள் அனைவரும் அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்தப் படவுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை அமலன் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அவரது இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. சம்பவம் தொடர்பில் இன்னும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர். என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

### மனித

வாய்ப்பு மற்றும் வெளிப்படையான சட்ட நடைமுறைகளை வழங்குமாறு இலங்கை அரச அதிகாரிகளிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் அண்மையில் தொடர்ச்சியாகக் கூறிவருவது போல, சர்வதேச சமூகம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு, இலங்கையின் கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமை நிலைமையே காரணமாகவுள்ளது.

இது போன்ற செயல்கள், மனித உரிமைகள் சபையின் கவனம் தொடர்ந்தும் இலங்கை மீது செலுத்தப்படுவது அவசியமாகும் என்று எம்மை நம்ப வைக்கின்றது"- என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

இந்தத் தொடர் கைதுகள் தொடர்பில் சிவில் சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைகள் "இறுதிக் கட்டப் போரில் இராணுவத்திடம் கையளித்த தங்கள் பிள்ளையைத் தேடி தொடர் போராட்டங்களில் கலந்து கொண்ட ஜெயகுமாரியும் அவரது மகள் விபூசிகாவும் திட்டம்போட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜெயகுமாரியை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர். இது மிகவும் பயங்கரமானது.

அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எவருமே இவர்கள் இப்படிச் செய்திருப்பார்கள் என்று சொல்லவுமில்லை. அத்துடன் அவர்கள் மீது சந்தேகம் கொள்ளவுமில்லை.

இந்த நிலையில் நடந்த உண்மை பொய்யை அறிய மனித உரிமை செயற்பாட்டாளர்களான ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் ஆகியோர் சென்றுள்ளனர். உண்மையைக் கண்டறிய யாருக்கும் உரிமை உண்டு. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வது அவர்களது உரிமை கடமை. அதை அவர்கள் செய்யத்தான் வேண்டும்.

ஜெனீவாவில் சில நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு பயங்கரமானதொரு நிலை நாட்டின் மீது உருவாகிவருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் நாட்டின் நன்மை கருதி அனைவரையும் விடுவிக்க வேண்டும்.

நாம் நாட்டின் நன்மைக்காகவே செயற்படுகின்றோம். எமக்கு யாரையும் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை" - என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழு மற்றும் மக்கள் கண்காணிப்புக் குழு என்பனவும் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளதுடன், விடுதலையை வலியுறுத்தியும் உள்ளன.

கடந்த வியாழக்கிழமை, கிளிநொச்சி தருமபுரத்தில் ஜெயகுமாரி மற்றும் அவரது 13 வயதான மகள் விபூசிகா ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களான ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயகுமாரி, ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மீது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழேயே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-ற-5)

### நான்காம்

கிளிநொச்சியில் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட ஜெயகுமாரி மற்றும் விபூசிகாவின் கைது தொடர்பாக சம்பவம் இடம்பெற்ற பகுதியிலுள்ளவர்களிடம் தகவல்களை திரட்டும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, மனித உரிமை செயற்பாட்டாளர் பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். அதன் போது அவர்களை இனந் தெரியாத நபர்கள் பின் தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன் தினம் இரவு 10 மணியளவில், மனித உரிமைகள் ஆவண மையத்தின் ஆலோசகர் ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அமைதிக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப் பின் பணிப்பாளர் அருட்தந்தை பிரவீன் மகேசன் இருவரும் ரி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டனர்.

ரி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்ட இருவரும் கிளிநொச்சியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு 4 ஆம் மாடிக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

தேசிய ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் இருவரும் செயற்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-5)

### கச்சதீவு

பாகரன் குறித்து அறிவதில் ஆர்வமுடையவர்களாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்று முடிந்த கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை மற்றும் இந்திய யாத்திரிகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

திருவிழாவின்போது இரு நாட்டு யாத்திரிகர்களும் தாம் கொண்டு சென்றிருந்த உணவுப் பொருள்களைப் பகிர்ந்து உண்டவண்ணம் இருநாட்டுப் புதினங்கள் குறித்து அள வளாவிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

அதிலும் குறிப்பாக இந்திய யாத்திரிகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் குறித்தும், இலங்கைத் தமிழர்களின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அறிவதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

"பிரபாகரன் இறந்துவிட்டார் என்று கூறப்படுகிறதே. உண்மையில் என்ன நடந்தது?. பிரபாகரனின் குடும்பத்துக்கு என்ன நடந்தது?. அவருடைய பிள்ளைகள் எங்கே?. விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் உயிருடன் இருக்கின்றனரா?. யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் தற்போதைய நிலை என்ன?. மீண்டும் போர் ஆரம்பிக்குமா?" என்று இலங்கையில் இருந்து சென்றிருந்து யாத்திரிகர்களிடம் அவர்கள் கேள்விகளை அடுக்குவதைக் காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளை, இந்திய ஊடகங்களும் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைகுறித்தும், தமிழ் மக்களின் மனநிலை குறித்தும் அறிவதில் ஆர்வம் காட்டியதைக் காணமுடிந்தது. (ற-14)

### தேசிய

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஆஸ்திரேலிய அரசின் வெளிவிவகாரத் திணைக்கள நிறைவேற்று அதிகாரி ஜொன் பொனர், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியைப் பலாலியில் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தக் கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி.

இதுகுறித்து ஆஸ்திரேலிய அதிகாரிகளுக்கு அவர் விளக்கமளிக்கையில்,

"குடாநாட்டின் அமைதியைக் குழப்பும்வகையில் இன்னும் சில குழுக்கள் தனிநாட்டுக் கோரிக்கையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் இங்கு வன்முறையை உருவாக்க விரும்புகின்றன. தனியார் காணிகளை நாம் பயன்படுத்தவில்லை. அபிவிருத்தி மற்றும் தேசிய பாதுகாப்புக் கருதிப் பெறப்பட்டுள்ள தனியார் காணிகள் அரச நடைமுறைகளுக்கு அமைவாக சுவீகரிக்கப்பட்டு, அவற்றுக்கு நட்டஈடு வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

படைக்கலைப்புக் குறித்து ஆஸ்திரேலிய அதிகாரிகளால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், "படைக் கலைப்பு என்பது தற்போதைக்குச் சாத்தியமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

(ற-5)

# ‘உதயன்’- பருத்தித்துறை ஐக்கியம் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டம்

## திக்கமுனை மைதானத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ‘உதயன்’ பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல முன்னணிக் கழகங்கள் உட்பட 52 விளையாட்டுக்கழகங்களின் அணிகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டவுள்ள அணிக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள், வெற்றிக் கிண்ணம் என்பன வழங்கப்படவுள்ளன.

உதைபந்தாட்டத்துக்கான ஆதரவு தற்போது யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் நிலையில் ‘உதயன்’ பத்திரிகை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து இந்தச் சுற்றுப் போட்டியை நடத்துகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக ‘பி’ அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக்கழக ‘ ஏ’ அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் ‘ஏ’ பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் இன்று செவ்வாய்க்கிழமை அரியாலை அருணோதயா சனசமூக நிலைய மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ‘பி’ பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ‘ஏ’ பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான ‘வடக்கின் சுப்பர் கிங்’ உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 18

வலிகாமம் கல்வி வலயமட்ட பாடசாலைகளின் 15 வயது, 17 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக ‘ஏ’ அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக ‘ பி’ அணி மோதவுள்ளது. (த-23)

## சம்பியனானது ஜெகமீட்பர்



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

பூநகரி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய 9பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

# அனைத்துப் பிரிவுகளிலும் யூனியன் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 18

தெல்லிப்பழை கோட்ட மட்டப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அனைத்து வயதுப் பிரிவிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

15 வயதுப் பிரிவில் இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியும் மகாஜனக் கல்லூரி அணியும் மோதின. இதில் 13:2 என்ற புள்ளி வித்தியாசத்தில் யூனியன் கல்லூரி அணி முதல் இடத்தையும், மகாஜனக் கல்லூரி அணி 2 ஆம் இடத்தையும், வயாவிளான் ம.வித்தியாலய அணி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

17 வயதுப்பிரிவில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் ம.வித்தியாலய அணி மோதியது. இதில் யூனியன் கல்லூரி அணி 26:6 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதலாம் இடத்தையும், வயாவிளான் மகா வித்தியாலய அணி 2 ஆம் இடத்தையும், மகாஜனக் கல்லூரி அணி 3 ஆம் இடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. இதில் யூனியன் கல்லூரி அணி 36:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதலாம் இடத்தையும், மகாஜனக் கல்லூரி அணி 2 ஆம் இடத்தையும், வயாவிளான் மகா வித்தியாலய அணி 3 ஆம் இடத்தையும் பெற்றன. (த-86-422)



கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கிண்ணம் வென்ற கலைமகள் இளைஞர் கழக அணி விருந்தினர்களுடன். (த-23)

# கிண்ணம் வென்றது யூனியன் வி.க அணி

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

முதலில் இடம்பெற்ற கலப்பு வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யூனியன் விளையாட்டுக்கழக அணி 18:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

சிறந்த வீரராக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வீரன் எஸ்.ரமணன் தெரிவானார்.

சிறந்த சூட்டராக யூனியன் விளையாட்டுக்கழக அணி வீராங்கனை ரி. பகிர்தா தெரிவானார்.

சிறந்த தடுப்பாளராக யூனியன் விளையாட்டுக்கழக அணி வீராங்கனை ஆர். மோகனா தெரிவானார்.

சிறந்த வீராங்கனையாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வீராங்கனை பி.நளாயினி தெரிவானார்.

தொடர்ந்து இடம்பெற்ற வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யூனியன் விளையாட்டுக் கழக அணி 32:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

சிறந்த வீராங்கனையாக யாழ். பல்கலைக்கழக அணி வீராங்கனை அபித்தா தெரிவானார்.

சிறந்த சூட்டராக யூனியன் விளையாட்டுக்கழக அணி வீராங்கனை ரி.பகிர்தா தெரிவானார்.

சிறந்த தடுப்பாளராக யூனியன் விளையாட்டுக்கழக அணி வீராங்கனை ஆர். மோகனா தெரிவானார்.

வலைப்பந்தாட்ட ராணியாக யூனியன் விளையாட்டுக் கழக அணி வீராங்கனை ஆர். மோகனா தெரிவானார். (த-23)



யூனியன் வி.க. அணியினர்

### வெற்றி பெற்ற அணிகள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் ‘வடக்கின் சுப்பர் கிங்’ உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மன்னார் சென். லூசியா, நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணிகள் வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற மன்னார் சென். லூசியா விளையாட்டுக்கழக அணிக்கும் உரும்பிராய் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மன்னார் சென். லூசியா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணியுடன் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# கண்டாவளைக் கோட்ட கரப்பந்து முடிவுகள்



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கண்டாவளை கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விவரங்கள் வருமாறு:

**15 வயதுப் ஆண்கள் பிரிவு**
தர்மபுரம் மத்திய கல்லூரி அணி- முதலாமிடம், பிரமந்தனாறு மகா வித்தியாலயம்- இரண்டாம் இடம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம்- மூன்றாமிடம்.

**17 வயது ஆண்கள் பிரிவு**
தர்மபுரம் மத்திய கல்லூரி- முதலாமிடம், முருகானந்தாக் கல்லூரி- இரண்டாமிடம், கண்டாவளை மகா வித்தியாலயம்- மூன்றாமிடம். -

**15 வயது பெண்கள் பிரிவு**
கண்டாவளை மகா வித்தியாலயம் - முதலாமிடம், தர்மபுரம் மத்திய கல்லூரி - இரண்டாமிடம், முருகானந்தாக் கல்லூரி மூன்றாமிடம்.

**17 வயது பெண்கள் பிரிவு**
கண்டாவளை மகா வித்தியாலயம் - முதலாமிடம், கிளி. முருகானந்தாக் கல்லூரி- இரண்டாமிடம், தர்மபுரம் மத்திய கல்லூரி- மூன்றாமிடம். (ஜ-23)

# இலங்கை வீரர்களின் ஒப்பந்தம் இழுபறியில்




இலங்கைக் கிரிக்கெட் அணி உலக 20/20 தொடருக்காக பங்களாதேஷ் சென்றுள்ளது. இலங்கை கிரிக்கெட் வீரர்கள், இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் ஆகியோருக்கிடையில் ஒப்பந்த இழுபறி முடிவடையாத நிலையிலும், இலங்கை வீரர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமா இல்லையா என்ற நிலை தெரியாமலும் அவர்கள் உலக 20/20 தொடருக்காகச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவுப்பொழுது வரை வீரர்கள் நிர்வாகத்துக்கு முடிவுகள் எதையும் வழங்காத நிலையில் இலங்கைக் கிரிக்கெட், இரண்டாம் தர அணியை உலக 20/20 தொடருக்கு அனுப்புவதற்குத் தயாராக இருந்தபோதும் வீரர்கள் தங்கள் இறுதி முடிவைத் தெரிவிக்காமல் உலக 20/20 தொடரில் பங்குபற்றச் சென்றுள்ளனர். பொதுவாகச் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகத் தர போட்டிகளுக்குச் செல்லும்போது வீரர்களுக்கு வழி அனுப்பி வைத்தல் நிகழ்வுகள் பெரியளவில் நடப்பதும் வழக்கம். ஆனால் அப்படி எந்த நிகழ்வுகளும் நடந்ததாகத் தெரியவில்லை.

கடந்த சனிக்கிழமை இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், உபதலைவர் டினேஷ் சந்திமால் ஆகியோருடன் சந்தித்துப் பேசி மேலதிக கொடுப்பனவுகள் பற்றிய முடிவை வழங்கியபோதும் வீரார்கள் கோரிய கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்ற நிலையில் வீர்களின் தரப்புப் பதில்கள் இன்னமும் தெரியவரவில்லை. இருப்பினும் தங்களுக்குச் சர்வதேசக் கிரிக்கெட் சபை வழங்கும் தொகையில் 12 வீதத்தை வழங்குமாறு அவர்கள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

# வென்றது நேபாளம்



உலக 20/20 தெரிவுப் போட்டிகள் நேற்று முன்தினம் பங்களாதேஷில் ஆரம்பமாகின. இதில் நேபாளம் அணி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

நேபாளம்-ஹொங்கொங் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் நேபாள அணி 80 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 20 பந்துப்பரி மாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜயநேந்தரா மல்லா 48 ஓட்டங்களையும், பராஸ் கட்கா 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹசீப் அம்ஜட் 3 இலக்குகளைக் கைப்பற்றிக்கொண்டார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி 17 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளை யும் இழந்து 69 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. இதில் பாபர் ஹயட் 20 ஓட்டங்க ளைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் பஸாண்ட் ரெக்மி, ஷக்டி கௌசான் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக ஷக்டி கௌசான் தெரிவு செய்யப்பட்டார்.

நேபாளம், ஹொங் கொங் ஆகிய இரு அணிகளும் சர்வதேச 20/20 போட்டி ஒன்றில் விளையாடியது இதுவே முதற் தடவையாகும். (து)

# பயிற்சி ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி

உலகக் கிண்ண 20/20 கிரிக்கெட் பயிற்சி ஆட்டத்தில் நேற்றுப் பாகிஸ்தானும் நியூசிலாந்தும் மோதின. மிர்பூரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களமிறங்கிய நியூசிலாந்து. 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 9 இலக்குகள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது.

நியூசிலாந்தின் முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினாலும் அதிரடியாக விளையாடிய அணித் தலைவர் பிரண்டன் மக்கலம் 59 ஓட்டங்கள் எடுத்து எண்ணிக்கையை உயர்த்தினார். இதில் 3 பவுண்டரிகளும் 4 சிக்சர்களும் அடங்கும். பாகிஸ்தான் தரப்பில் உமர் குல் 3 இலக்குகளும் முகம்மது 2 இலக்குகளும் வீழ்த்தினர்.

பின்னர் 146 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சர்ஜீல் கான் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் ஜோடி சேர்ந்த கம்ரான் அக் மலும் ஹபீசும் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அணியின் ஓட்ட விகிதம் உயர்ந்தது.

இந்நிலையில், 52 ஓட்டங்கள் எடுத்திருந்த கம்ரன் அக்மல், காயம் காரணமாக வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஹபீசும் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கடைசிப் பந்துப்பரிமாற்றத்தில் 5 ஓட்டங்கள் தேவைப் பட்டபோது மக்சூத் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றார். முடிவில் பாகிஸ்தான் 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (து)



# கோஹ்லியை புகழ்ந்த அப்பாஸ்



சர்வதேசக் கிரிக்கெட்டின் அனைத்துச் சாதனைகளையும் கோஹ்லி முறியடிப்பார் எனப் பாகிஸ்தான் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான ஜாகீர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான ஜாகிர் அப்பாஸ் அளித்த பேட்டியில், சர்வதேசக் கிரிக்கெட்டின் சாதனைகள் அனைத்தையும் விராட் கோஹ்லி தான் முறியடிப்பார்.

இந்தியத் துடுப்பாட்ட வரிசையில் முன்னணி வீரராக உள்ள கோஹ்லியின் ஆட்டம் சிறப்பாக உள்ளது.


பாகிஸ்தான் அணியிலும் நிறையத் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர், அவர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இளம் வீரரான அகமது ஷேசாத் திறமைமிக்க வீரராக உள்ளார், இனிவரும் காலங்களில் நிச்சயம் சிறப்பாகச் செயல்படுவார்.


20/20 உலகக் கிண்ணப் போட்டிகளில் டோனி பங்கேற்பது இந்திய அணிக்கு பலம் தான்.

எனினும் இந்தியாவை வீழ்த்த பாகிஸ்தான் அணி தயாராக உள்ளதெனத் தெரிவித்துள்ளார். (து)

# பரபரப்பான ஆட்டத்தில் அயர்லாந்து அணி வெற்றி



சிம்பாப்வே அணிக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டியின் லீக் சுற்றில், 3 இலக்குகள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றது.
பங்களாதேஷில் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடந்து வருகிறது.
நேற்று சிம்பாப்வே- அயர்லாந்து அணிகள் மோதிய போட்டி நடைபெற்றது, நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.
இதனையடுத்துக் களமிறங்கிய சிம்பாப்வே அணி, 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 5 இலக்குகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைக் குவித்தது.
இதன் பின்னர் 164 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது.
ஸ்டிர்லிங் 9 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட 60 ஓட்டங்கள் குவித்தார், போட்டர்பீல்ட் 31 ஓட்டங்கள் எடுத்தார். பின்னர் அடுத்தடுத்து இலக்குகள் வீழ்ந்ததால் பரபரப்பானது போட்டி. இந்நிலையில் 164 ஓட்டங்கள் எடுத்து 3 இலக்குகள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது அயர்லாந்து.
அயர்லாந்து அணியின் போட்டர்பீல்ட் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். (த)



# மஹேலவும் ஓய்வு

இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான மஹேல ஜெயவர்த்தன, தான் சர்வதேச 20/20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
உலக 20/20 போட்டிகள் நிறைவடைந்ததும் தான் ஓய்வு பெறுவதாக மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.
இலங்கை அணியின் முன்னணி கிரிக்கெட் வீரரான குமார் சங்கக்கார, சர்வதேச 20/20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், மஹேல வும் ஓய்வு பெறுகிறார்.
49 சர்வதேச 20/20 போட்டிகளில் விளையாடியுள்ள மஹேல ஜெயவர்த்தன, கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர்களில் இரண்டாமிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 1335 ஓட்டங்களை மஹேல பெற்றுள்ளார். மூன்றுவித சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் சதமடித்த பெருமையும் மஹேல ஜெயவர்த்தனவுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. மஹேல ஜெயவர்த்தன 20/20 போட்டிகள் 19 இற்கு, இலங்கை அணிக்குத் தலைமை தாங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
இலங்கை அணியின் முதலாவது 20/20 அணித் தலைவர் என்ற பெருமை மஹேல ஜெயவர்த்தனவுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)




# ஜோகோவிச் சம்பியன்

பரிபாஸ் ஓபன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.
அமெரிக்காவின் இந்தியன் வெல்ஸ் நகரில் பரிபாஸ் ஓபன் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மோதினர்.
முதல் செற்றை 6-3 என்ற கணக்கில் பெடரர் கைப்பற்ற, இரண்டாவது செற்றை 6-3 என்ற தன்வசப்படுத்தி ஜோகோவிச் பதிலடி கொடுத்தார்.
முடிவில் அபாரமாக விளையாடிய ஜோகோவிச் 7-6 என மூன்றாவது செற்றைக் கைப்பற்றிச் சம்பியன் பட்டம் வென்றார்.
பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இத்தாலியின் பிளவியா பெனிட்டா, போலந்தின் அக்னிஸ்கா ரத்வான்காவை எதிர்கொண்டார்.
அபாரமாக ஆடிய பிளவியா பெனிட்டா 62- 61 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். (த)

# ஐ.பி.எல் காப்புறுதி ரூபா 1,100 கோடி

Season7
IPL

7ஆவது ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 16ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை 3 கட்டங்களாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளில் நடக்கிறது.
ஐ.பி.எல். போட்டியை ரூபா 1,100 கோடிக்குக் கிரிக்கெட் சபை காப்புறுதி செய்கின்றது. இது தொடர்பாக ஏ.ஓ.எல். மற்றும் அலையன்ஸ் நிறுவனங்களுடன் கிரிக்கெட் சபை பேசி வருகிறது.
இந்தக் காப்பீடு ஐ.சி.சி. உலகக் கிண்ணப் போட்டியை விட 2 மடங்கு அதிகமானதாகும்.
2010ஆம் ஆண்டு நடந்த கொமன்வெல்த் விளையாட்டு போட்டி ரூபா 200 கோடிக்கும், 2011 ஆம் ஆண்டு நடந்த பார்முலா 1 கார் பந்தயப் போட்டிக்கு ரூபா 500 கோடிக்கும் காப்புறுதி செய்யப்பட்டது. 2011ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ணம் ரூபா 400 கோடி காப்பீடு செய்யப்பட்டு இருந்தது. (த)



# விலகினார் ஜோன்சன்

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஜோன்சன், 20/20 உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.
ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன், வலது கால் பெருவிரலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.
காயம் முழுவதும் குணமடையாததால், பங்களாதேஷில் நடைபெறும் உலகக் கிண்ண 20/20 தொடரில் இருந்து அவர் விலகியுள்ளதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.
ஜோன்சனுக்குப் பதிலாக டக் போலிஞ்சர் சேர்க்கப் பட்டுள்ளார். (த)

ANANDA HOMES AND CONSTRUCTIONS - சாவகச்சேரி
உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத்தர
1. சாதாரண வீடு 16 இலட்சத்திலிருந்து
(3 அறை, ஹோல், குசினி உட்பட)
2. மாடி வீடு 35 இலட்சத்திலிருந்து
(4 அறை, ஹோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை 2 லட்சத்திலிருந்து
4. சுற்றுமதில் அமைத்தல்
5. கடை கட்டடத்தொகுதி அமைத்தல்
குறிப்பு 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

அழையுங்கள் : ஆனந்தன் 021 2057705, 078 6155929

பதவி வெற்றிடம்
Customer Relations Manager
(வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்) (ஆண் / பெண்)
கல்வித்தகைமை :
ஆங்கில அறிவு மிக முக்கியம்
பட்டதாரி / டிப்ளோமாதாரிகளுக்கு முன்னுரிமை
வேதனம் :
மாதம் 20 000/= (EPF, ETF இதில் அடங்கும்)
2 வருட சேவை ஒப்பந்தம்
சனி, ஞாயிறு வேலைநாளாகும்
வார நாள்களில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும்.
உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயணம் செய்யக்கூடியவர்கள் மாத்திரம் வரவும்
நேர்முகத்தேர்வு : 20.03.2014 மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.
Ms.v. இந்துஜா பொதுமுகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற் ) லிமிற் 175, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.